# பாரதி

1964

மாநாட்டு மலர்

தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை-2

# ரூடின் அவர்களின் கடிதம்

15.2.1964.

S.G. Rudin
University, Leningrad.

என் பெருமதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய பேராசிரியர் திரு. மு. வரதராசனார் அவர்களுக்கு வணக்கம் பல. நலம்.

தங்கள் அன்புள்ள கடிதத்தைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தேன். மிக நன்றி.

திசெல்லா கொந்திராத்தியேவா இப்போது விடுமுறை பெற்று தம் பெற்றோர் வீட்டுக்குச் சென்றுள்ளார். திரும்பிய பிறகு 'டிப்ளோமா' பெறுவதற்கு வேண்டிய தமது ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதுவார்; அப்புறம் அரசாங்கத் தேர்வுகளில் தேறித் தமது பல்கலைக்கழகப் படிப்பை முடித்து விடுவார். அவர் சென்னையிலிருந்து வந்த புதிதில் அவருடன் நிறைய பேசினேன். அவருடைய தமிழ் அறிவிலும் பேச்சிலும் சிறந்த முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். இது, தாங்களும் பேராசிரியர் இராசமாணிக்கனார் அவர்களும் போன்ற அறிஞர்களின் உதவியினால் விளைந்த பயன் என்பதில் ஐயமில்லை.

நான் இப்போது ஹிந்தி, உருது மொழிகளைக் கற்பிப்பதில் ஈடுபட்டுள்ளேன். இருபது படிக்கும் மாணவர்களுக்கான 2½ ஆண்டுத் தமிழ்ப் பாடத்தொடர் ஒன்றையும் தொடங்கப் போகிறேன். அடுத்த ஆண்டில் ஒருவர்களாவது ஐந்தாண்டுத் தமிழ்ப் 'பேசுரை'யையும் மறுபடியும் ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று நம்புகிறேன்.

தாங்கள் பொருந்திய அளவில், நேமிநாதம், வீரசோழியம், இலக்கண விளக்கம், யாப்பருங்கலம் போன்ற பழைய இலக்கண நூல்களும், நல்ல தமிழ் அகராதிகளும், தாங்களும் அங்குள்ள மற்ற தமிழ் அறிஞர்களும் இயற்றிய புதிய நூல்களும் வெளிவந்தால் அனுப்ப வேண்டுகிறேன். மலையாள மொழியின் ஏதாவதொரு இலக்கணம் அல்லது பாடநூலாவது தேவை.

இத்துடன் என் சிறுகடிதத்தை முடித்துக் கொள்கிறேன். இராசமாணிக்கனார் அவர்களுக்கும் [illegible] அவர்களுக்கும் மற்றுமுள்ள தமிழ்த் தொண்டர்களுக்கும் என் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவிக்கவும். வணக்கம்.

தங்கள் அன்புள்ள

செம்பியன் (S.G. Rudin).

நன்றி : டாக்டர் மு. வ.

# பாரதி மாநாட்டு மலர்

※

தமிழ் எழுத்தாளர்
பன்னிரண்டாம் மாநாடு

1964 டிசம்பர் 5, 6.

※

விலை ரூ. 1/

※


தமிழ் எழுத்தாளர் சங்கம்,

இளம்பிறைச் சங்கக் கட்டிடம்,

மவுண்டு ரோடு :: சென்னை-2.

# தமிழ் எழுத்தாளர் பன்னிரண்டாம் மாநாடு

❋

## வரவேற்புக் குழு

தலைவர் :

**திரு. 'சோமலெ'**

உறுப்பினர் :

சங்கச் செயற்குழு உறுப்பினர் அனைவரும்,

திரு. டி. கே. சண்முகம்

திரு. துறைவன்

திரு. தமிழ்வாணன்

திரு. பு. மனோகரன்

ஆகியோரும்

## மலர்க் குழு

திரு. மயிலை சீனி. வேங்கடசாமி

,, அழ. வள்ளியப்பா

,, மகரம்

,, அன்புப் பழம் நீ

,, இளம்பாரி

,, கெ. பக்தவத்சலம்

,, சிறுவை மோகனசுந்தரம்

,, சி. பாலசுப்பிரமணியம்

,, மா. சு. சம்பந்தன்

❋

# தமிழ் எழுத்தாளர் சங்கம்

## 1964-ஆம் ஆண்டின்

### செயற்குழு

※

**தலைவர் :**

திரு. மயிலை சீனி. வேங்கடசாமி

**துணைத்தலைவர்கள் :**

திரு. அழ. வள்ளியப்பா
,, எம். அப்துல் வகாப்
,, கே. ஆர். கலியாணராமன் (மகரம்)
,, முகவை. ராஜமாணிக்கம்

**பொதுச்செயலாளர் :**

திரு. ஊ. ஜயராமன்

**துணைச்செயலாளர்கள் :**

திரு. இளம்பாரி
,, கெ. பக்தவத்சலம்

**பொருளாளர் :**

திரு. கோமதி சுவாமிநாதன்

※

**உறுப்பினர்கள் :**

திரு. நாரண. துரைக்கண்ணன்
,, வல்லை பாலசுப்பிரமணியம்
,, அன்புப் பழம் நீ
,, சிறுவை மோகனசுந்தரம்
,, நா. ஜகந்நாதன்
,, எம். முருகரத்தினம்
,, கா. வேழவேந்தன்
,, வி. ஏ. பாலகிருஷ்ணன்

திரு. ஏ. பி. ஜனார்த்தனம்
,, மா. சு. சம்பந்தம்
,, சையத் முகம்மது
திருமதி. கமலாவிருத்தாசலம்
,, எம். எஸ். கமலா
திரு. 'சோமலெ' (நெற்குப்பை)
,, பா. இராஜநாராயணன் (பம்பாய்)

# நல்ல தமிழில் நடுநிலையுடன்
# உடனுக்குடன் செய்திதரும்
# ஒரே நாளிதழ்

# தமிழ் நாடு

நிருவாக ஆசிரியர் : கருமுத்து தியாகராசன்

Member : ABC and I & E. N. S.

卐

## சந்தா விபரம்

—( அஞ்சல் மூலம் )—

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | 31—00 |
| 6 மாதச் சந்தா | 15—50 |
| 3 மாதச் சந்தா | 7—75 |
| 1 மாதச் சந்தா | 2—60 |

卐

—: மற்ற விபரங்களுக்கு :—

## செயலர்: ‘தமிழ் நாடு’

அஞ்சற் பெட்டி எண் : 49, மதுரை.

தந்தி : TAMILNADU, : : தொலைபேசி : 3227 & 3228.

# உ ள் ளு றை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வரவேற்புரை — 'சோமலெ' | ... | 1 |
| 2. | தலைமையுரை—மயிலை சீனி. வேங்கடசாமி | ... | 5 |
| 3. | வாழ்த்து மடல்—துறைவன் | ... | 7 |
| 4. | தமிழ்க்கடல் ராய. சொ.—மு. இராமசாமி | ... | 9 |
| 5. | நாரணதுரைக்கண்ணன்—கெ. பக்தவத்சலம் | ... | 13 |
| 6. | ஜே. எம். சோமசுந்தரம்—புலவர் கா. வெள்ளை வாரணன் | ... | 17 |
| 7. | செமியோன் ருதின்—பண்டித இராம. மீனுட்சிசுந்தரம் | ... | 20 |
| 8. | தமிழகமும் நானும்—விஷ்ணுபாதபட்டாச்சார்ஜீ | ... | 25 |
| 9. | பம்மல் சம்பந்தர்—பெரி. சிவனடியான் | ... | 25 |
| 10. | தென்னுப்பிரிக்கத் தமிழர்கள்—'திருவாசகமணி' | ... | 27 |
| 11. | கல்கத்தா தேசிய நூலகம்—கே. சுப்பிரமணியன் | ... | 30 |
| 12. | அந்தமான் சாரவர்—கா. வேழவேந்தன் | ... | 32 |
| 13. | எழுத்துக் கலை—கி. ஆ. பெ. வி. | ... | 33 |
| 14. | தென்னுப்பிரிக்க எழுத்தாளர்கள்—'லட்சுமி' | ... | 36 |
| 15. | திறனுய்வு—ரா. ஸ்ரீ. தேசிகன் | ... | 39 |
| 16. | சம்ஸ்கிருத நாடகங்கள்—பெ. திருஞானசம்பந்தன் | ... | 41 |
| 17. | தமிழ் நூற்றெகை—வே. தில்லைநாயகம் | ... | 45 |
| 18. | என் கணவர் புதுமைப் பித்தன்—கமலா விருத்தாசலம் | ... | 52 |
| 19. | அண்ணல் நேரு—'சங்கர்' | ... | 55 |
| 20. | இந்தி நாடகக்கலை—டாக்டர் ந. சந்திரகாந்த முதலியார் | ... | 57 |
| 21. | பெண்களும் இலக்கியமும்—சிவகாமி சிதம்பரனுர் | ... | 62 |
| 22. | **The Writer and Copyright—T. S. Krishnamurthi** | ... | 65 |
| 23. | **Author Nehru and His International Impact** | ... | 70 |
| 24. | **Frans Eemil Sillanpa** | ... | 72 |
| 25. | **Tamil Writers' Association** | ... | 73 |
| 26. | உலக அரங்கில் தமிழ் | ... | 75 |
| 27. | சங்க உறுப்பினர் கடிதம் | ... | |

எல்லாவித கட்டிட வேலைகளுக்கும்

திட்டமாகக் குறிக்கவேண்டியது

# சங்கர் பிராண்ட்

## போர்ட்லண்ட் சிமெண்ட்

உறுதிக்கும், உழைப்பிற்கும் உகந்தது

SANKAR
IC
BRAND

தயாரிப்பாளர்கள் :

## இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : 175/1, மவுண்ட் ரோடு, சென்னை - 2.

தொழிற்சாலைகள் : சங்கர் நகர், திருநெல்வேலி ஜில்லா,
சங்கரி, சேலம் ஜில்லா.

# மலர் மணம்

1964-ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 5, 6-ஆம் நாட்களில், சென்னை கோகலே மண்டபத்தில் நிகழும் தமிழ் எழுத்தாளர் சங்கப் பன்னிரண்டாம் மாநாட்டை யொட்டிப் "பாரதி" இதழின் இச் சிறப்பு மலர் வெளிவருகிறது. 5-12-64 சனிக்கிழமை மாலை மாநாட்டை விந்தியப் பிரதேச முன்னுள் கவர்னரும், எழுத்தாளருமான உயர்திரு க. சந்தானம் அவர்கள் துவக்கி வைக்கிறார்கள்.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக உலகம் சுற்றிய தமிழர் உயர்திரு 'சோமலெ' அவர்கள் பணியாற்றுகிறார்கள். சங்கத்தின் தலைவர், உயர்திரு மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்குவது மகிழ்ச்சிக்குரிய தொன்று.

சீரிய இலக்கியங்களைப் படைத்துத் தமிழுக்கு ஆக்கம் தேடித் தந்துள்ள 'தமிழ்க் கடல்' ராய. சொக்கலிங்கன் அவர்களுக்கும், பழம்பெரும் எழுத்தாளர் நாரண. துரைக்கண்ணன் அவர்களுக்கும் இவ்விழாவில் கேடயங்கள் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது. தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் அளித்துள்ள உயர்திரு ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்களுக்கும், ருஷ்யாவில் இருந்து தமிழ் முழக்கம் புரியும் பேராசிரியர் செமியோன் ரூடின் (செம்பியன்) அவர்களுக்கும் பதககங்கள் தந்து பாராட்டுத் தெரிவிக்கப்படுகிறது. சங்கச் சார்பில் கேடயங்களையும், பதக்கங்களையும் வழங்க சென்னை உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி உயர்திரு மா. அனந்தநாராயணன் ஐ. சி. எஸ்., அவர்கள் இசைந்துள்ளார்கள். டாக்டர் பா. நடராசன், திருமதி சௌந்திரா கைலாசம், டாக்டர் அ. சிதம்பரநாதன், திரு திருமலை முத்துசாமி - முதலியோர் விருந்தினரைப் போற்றிப் பேசுகிறார்கள்.

6-12-64 ஞாயிற்றுக்கிழமை காலை கவியோகி சுத்தானந்த பாரதியார் தலைமையில், "உலக மா கவிகள்" என்ற கருத்தரங்கு நிகழும். காளிதாசர், துளசிதாசர், சோபாகிளிஸ், கத்தே, ஷேக்ஸ்பியர், பர்தோசி, கம்பர் பற்றி முறையே டாக்டர் வே. ராகவன், டாக்டர் நா. சந்திரகாந்த முதலியார், திரு பா. பச்சையப்பன், திருமதி எஸ். ராதா ஸ்ரீனிவாசன், திரு ரா. ஸ்ரீ. தேசிகன், திரு முக்தார், திரு ரா. சீனிவாசன் முதலியோர் பேசுவர். பிற்பகலில் 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தலைமையில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், குஜராத்தி, ராஜஸ்தானி கலைஞர்கள் கலந்து கொள்ளும் நாட்டுப் பாடல் இசையரங்கு ஒன்று ஏற்பாடாகி யுள்ளது. கலைஞர்களையும், அவ்வம் மொழிப் பாடல்களையும் 'துறைவன்' அறிமுகப் படுத்துகிறார்.

மாலையில் "இலக்கியம் பலவிதம்" என்னுந் தலைப்பில் நடைபெறும் உரைக் கோவையில், திருவாளர்கள் எஸ். டி. சுந்தரம், சுகி சுப்பிரமணியன், கா. ஸ்ரீ. ஸ்ரீ., கொத்தமங்கலம் சுப்பு, அழகரடிகள் (இளவழகனார்), திருமதி மேரி மாசிலாமணி அம்மையார் பங்கு கொண்டு முறையே தேசிய, நகைச்சுவை, கதை, நாடகத் திரைப்பட, சமய, பிரயாண இலக்கியங்கள் பற்றிச் சிறப்புரை யாற்றுவர்.

இம் மாநாட்டு மலரில் பல துறை அறிஞர்கள், பயனுள்ள கட்டுரைகள் பல வழங்கி யுள்ளனர். கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதிச் சிறப்பித்த அன்பர்களுக்கும், மலருக்கு விளம்பரம் தந்தருளிய வாணிப நிலையங்களுக்கும், அவற்றை வாங்கிக் கொடுத்த பேரன்பர்களுக்கும், மலரைச் சுருங்கிய காலத்தில் அழகிய முறையில் அச்சிட்டுதவிய ஸ்ரீனிவாஸ் அச்சகத்தினருக்கும் எங்கள் நன்றி என்றும் உரியது.

தலைவர், வரவேற்புக் குழுத் தலைவருடன், திருவாளர்கள் அழ-வள்ளியப்பா, மகரம், ஊ. ஜயராமன், இளம்பாரி, கெ. பக்தவத்சலம், அன்புப்பழம்நீ முதலியோரின் சலியா உழைப்பே மாநாட்டின் வெற்றிக்குக் காரணமா யமைந்தது! அவர்களின் தொண்டினைச் சிறப்பாகப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

—மலர்க் குழுவினர்


CO-OPTEX
INVADES
AMERICA!
HANDLOOM CHECKS AND SHIRTINGS
ARE POPULAR U. S. STYLES
Did you know that Italian Fabrics were the first foreign goods to crash into American Fashions? That was in 1951.
Four years later, in 1955, it was India's turn.
And, in this process of East brightening the West,
Madras Handlooms figured most prominently!
The bright colours and the intricate designs of Co-optex
CHECKS AND SHIRTINGS are the
popular selections of leading American dress designers
for both formal town wear and sports styles!
Co-optex CHECKS AND SHIRTINGS are not only
elegant but they are economical, too!
And, as we are fond of saying, it is simple
arithmetic, really—
ELEGANCE + ECONOMY
=
Co-optex
FABRICS

# தமிழ் எழுத்தாளர் பன்னிரண்டாம் மாநாடு

## வரவேற்புரை

"சோமலெ"

[தலைவர், வரவேற்புக்குழு.]

தலைவர் அவர்களே! மாநாட்டைச் சிறப்பிக்க வந்திருக்கும் பெருமக்களே! நாளும் எழுதி நற்றமிழை வளர்த்துவரும் எழுத்தாள நண்பர்களே! வணக்கம். தமிழ் எழுத்தாளர்களின் பன்னிரண்டாம் மாநாட்டுக்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் வரவேற்கும் வாய்ப்பும் பேறும் எனக்குக் கிடைத்துள்ளன.

உங்கள் அனைவருக்கும் நான் நல்வரவு கூறுகின்றேன்.



உங்களுடைய ஆர்வத்தாலும் ஆதரவாலும் இம்மாநாடு இனிது நிகழ்ந்து பயனுற்றதாக அமைந்து, இலக்கிய வரலாற்றில் ஒரு மைல் கல்லாக விளங்கும் என்பது என் நம்பிக்கை. பீடும் பெருமையும் மிக்க எழுத்தாளர் நாம். நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட்டால் சங்கம் புதிய வலுவும் தொடர்ந்த வளர்ச்சியும் பெறும்.

இச்சங்கத்தைத் தோற்றுவித்த கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உயிர் நீத்து இன்றுடன் சரியாகப் பத்து ஆண்டுகளாகின்றன. எழுத்துத் துறைக்கும் எழுத்தாளர் சங்கத்திற்கும் அப்பெருமகனுர் ஆற்றி வந்துள்ள தொண்டினை நன்றியுடன் நினைத்து, தொடர்ந்து அவர் கனவுகளை நனவாக்குவோமாக!

பழுத்த எழுத்தாளரும் முதிர்ந்த அரசியல் ஞானியுமாகிய உயர்திரு. க. சந்தானம் அவர்கள் இம்மாநாட்டைத் தொடங்கி வைப்பது நம் அனைவருக்கும் பெருமை தருவதாகும். செய்தித்தாள்களின் ஆசிரியராகவும் நூல்களை ஆக்கியவராகவும் புகழ்பெற்றுள்ள அவர்கள் நம் அனைவருக்கும் வழி காட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்கின்றுர்கள்.

ஆராய்ச்சி உலகில் உயர்ந்து விளங்கும் உயர்திரு. மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் நெடுங்காலமாக சங்கத்தில் பல பொறுப்புக்களை ஏற்று, சங்கத்தை வளர்த்து வந்திருக்கிறுர்கள். அவர்கள் இம்மாநாட்டுக்குத் தலைமை தாங்குவது முற்றிலும் பொருத்தமாகும்.

'தேமதுரத் தமிழோசை. உலகெலாம் பரவும் வகை செய்திடல் வேண்டும்' என்று பாரதி கண்ட கனவு நம் கண்முன் நனவாகிறது. இவ்வகையில் தமிழுக்கு ஏற்றம் தருகின்ற பெருமக்களுக்கு நம் வணக்கத்தைத் தெரிவிப்பதை ஆண்டுதோறும் மாநாட்டில் வழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அரசியல் உலகில் வல்லமை பெற்றுள்ள ரஷ்யா கலை, கல்வித்துறைகளில் பெரு வளர்ச்சி யடைந்திருக்கிறது. நாம் இன்று கூடியுள்ள இக்கோகலே மண்டபம் இருக்கும் அரமனைக்காரத் தெரு சோவியத் குடியரசின் ஒரு பகுதியான ஆர்மீனியாவுக்கும் நம் நாட்டுக்கும் உள்ள உறவை நினைவு படுத்துகிறது.

தமிழ்—ரஷ்ய அகராதியைத் தொகுத்தும் பாரதி பாடல்களை மொழிபெயர்த்தும் உள்ள செமியோன் ரூதின் அவர்களுக்கு நாம் பதக்கம் வழங்குகிறோம். திரு. ரூதின் இன்று இங்கு வர இயலாமையால் அவருக்காகப் பதக்கத்தைப் பெற்றுக் கொள்ள, ரஷ்ய அரசாங்கத்தின் கான்ஸல் ஜெனரல் ஐ. எஸ். பியாக்கோவ் அவர்கள் இங்கு வந்து இப்பதக்கத்தைப் பெற்றுக் கொள்வது நமக்கு மட்டமற்ற மகிழ்ச்சி தருகிறது. கான்ஸல் ஜெனரல் அவர்களுக்குச் சிறப்பான முறையில் நல்வரவு கூறுவது என் கடமை. சென்ற ஆண்டில் பதக்கம் வழங்கப் பெற்ற திருவாசகமணி பாலசுப்பிரமணியம் அவர்கள் அப்போது தென் ஆப்பிரிக்காவில் இருந்தார்கள். பின்னர் இங்கு வந்து, தனியொரு விழாவில் பதக்கம் பெற்றுக் கொண்டார்கள்; அவ்வாறே ரூதின் அவர்களைக் காணவும், அவருடன் நாம் கலந்துரையாடவும் விரும்புகிறோம்; கான்ஸல் ஜெனரல் அவர்கள் அதற்கு வழிவகுப் பார்களாக.

திரு. ரூதின் தம் பெயரையே 'செம்பியன் ரூதின்' என்று தமிழாக்கிக் கொண்டிருக்கிறார். இவர் தம் தமிழ்க் கையெழுத்தை நாம் அறிய வகை செய்யும் முறையில் இவரது தமிழ்க் கடிதம் ஒன்றினை பாரதி மலரில் வெளியிட்டுள்ளோம்.

இவர் அண்மையில் தமிழிலக்கணத்தின் தனிச்சிறப்புகள் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை வெளியிட்டிருக்கிறார். இவரது மாணவியாகிய இசபெல்லா கொந்திநாத்யேவா என்ற அம்மையார் மேல் படிப்புக்கு தமிழ் நாட்டுக்கு வந்திருந்தது நம்மில் பலருக்குத் தெரிந்ததே!

ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியம் வழங்கியுள்ள செல்வங்களை, ஆங்கில மொழியில் சுருக்கமாகவும் தெளிவாகவும் உயர்திரு. ஜே. எம். சோமசுந்தரம் அவர்கள் ஆக்கியுள்ளார்கள். அவர்களுடைய அயராத உழைப்பும் ஈடுபாடும் முயற்சியும் நம்மனோருக்கு எடுத்துக்காட்டு. பதக்கம் பெறும் அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து மேன் மேலும் தமிழ் மொழிக்குப் பெருமை தேடித் தருவார்களாக. தமிழ் இலக்கியங்களை வேற்று மொழியில் தரும் பணியைத் தொடங்கி வைத்தவருள் ஒருவராகிய ஜே. எம். நல்லசாமி பிள்ளை அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர் ஜே. எம். எஸ். என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழியிலேயே தலைசிறந்த நூல்களையாக்கித் தமிழுக்குப் பொலிவும் எழுத்துத் தொழிலுக்கு ஏற்றமும் தந்திருப்பவர்களை வரவழைத்து, அவர்களுக்கு நமது மரியாதையைச் செலுத்த இது போன்ற மாநாடுகள் வாய்ப்பாகும். நம்மில் பலர் பிறக்குமுன்னரே எழுத்துலகில் புகுந்து பாமாலை பலபாடி இன்று பூமாலை பெற இருப்பவர் தமிழ்க்கடல் ராய சொக்கலிங்கன் அவர்கள். அவர்கள் இருபத்தைந்து ஆண்டுக்காலம் நடத்திய 'ஊழியன்' இதழ் பெரும்பாலும் இந்தச் சென்னை மாநகரிலிருந்துதான் வெளிவந்தது. அவர்கள் பழந்தமிழ் இலக்கியங்களுக்கு உரை காணுபவர்கள். 'நடமாடும் கலைக் களஞ்சியம்' என்று அவர்களைச் சொல்லலாம்.

திரு. நாரண துரைக்கண்ணன் அவர்கள் நம்மில் ஒருவர். நாடு போற்றும் எழுத்தாளர். நாவல்களும், சிறுகதைகளும் படைத்திருப்பவர். எழுத்தாளர்களை ஊக்குபவர்; எழுத்தாளர் சங்கம் தோன்றிய நாள் தொடங்கி அதன் தூண்களில் ஒருவராக விளங்கிவருபவர். உயிரோவியம் என்ற நாவல் என்றும் இவரது புகழைப் பரப்பும். பல்துறை வல்லுநரும் பழம்பெரும் பத்திரிகையில் ஆசிரியருமாகிய அன்னார் நீடு வாழ்க!

பதக்கமும் கேடயமும் வழங்க இசைந்துள்ள உயர்திரு மா. அனந்த நாராயணன் ஐ. சி. எஸ். அவர்கள் தமிழ் நாட்டின் இன்றைய தலைமை நீதிபதி ஆவார்கள். அதோடுமட்டுமன்று; அவர்கள் தலைசிறந்த எழுத்தாளர், தமிழ்க் காதல் மிக்கவர். தமிழில் நாவல் இலக்கியத்திற்கு அரும் பணியாற்றியுள்ள மாதவையா அவர்களின் செல்வத் திருமகனார். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு தமிழ்க் கலைச் சொற்கள் வகுத்துத் தந்திருக்கிறார். தமிழ்ப் பெரும் புலவர் என்ற பட்டம் பெற்றவர். அன்னார் இந்த நல்லதொரு பணியை ஏற்க முன்வந்திருப்பது சாலச் சிறந்தது.

சங்க இதழாகிய 'பாரதி'யின் மாநாட்டு மலர் எழுத்துத் துறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் பெரும் பயன் விளைவிக்குமாறு வெளிவந்திருக்கிறது. இவ்வாண்டில் ஆங்கில மொழியிலும் சில கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறோம். வெளிநாட்டு எழுத்தாளர் பற்றிய குறிப்புக்களும், 'உலக அரங்கில் தமிழ் வளர்ச்சி' என்ற பகுதியும் எழுத்துரிமை பற்றிய கட்டுரையும் பிறவும் குறிப்பிடத்தக்கன. பாராட்டுக்குரியவர்களின் வரலாறுகளும் மலரில் இடம் பெற்றுள்ளன. இலக்கியத் துறை விற்பன்னர்கள் பலரும் மலருக்கு மணம் தந்திருக்கிறார்கள்.

மாநாட்டின் ஒரு பகுதியாக 'உலக மாகவிகள்' பற்றிய கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளோம். பன்மொழிப் புலவர் பலர் அதில் பங்கு பெறுகின்றனர், பிறமொழிப் பெருங் கவிஞர்களை அறிந்து கொள்ள இவ்வரங்கு துணை செய்யும்.

என் கருத்தில் இலக்கிய நயமும், இலக்கண அமைப்பும் கொண்ட நுட்பமான கவிதைகளைவிட இயல்பாக அமைந்து சுவை பயப்பன நாட்டுப் பாடல்கள். இவைபற்றி நிகழவிருக்கும் அரங்கில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், குஜராத்தி, ராஜஸ்தானி ஆகிய மொழிகளில் பொதிந்து கிடக்கும் நாட்டுப் பாடல் செல்வத்தை அவ்வம் மொழி ஆடவரும் பெண்டிரும் நமக்கு அள்ளி வழங்குகின்றனர்.

'இலக்கியம் பலவிதம்' என்ற தலைப்பில் தேசிய இலக்கியம், பிரயாண இலக்கியம், நகைச்சுவை இலக்கியம், நாடகத் திரைப்பட இலக்கியம், சமய இலக்கியம் என்ற தலைப்புக்களில் அறிஞர் பலர் நமக்குச் சொல்விருந்து படைக்கின்றனர்.

இத்துணை நிகழ்ச்சிகளுக்கிடையே எழுத்தாளர் அறிமுகமும், உறுப்பினர் கூட்டமும் நிகழும். உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பால் மாநாடு இனிது நடைபெறும் என்று நம்புகிறேன்.

மாநாடு நன்கு அமைவதற்கு அல்லும் பகலும் பாடுபட்டுள்ள தலைவர், துணைத்தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், செயற்குழுவினர் ஆகியோருக்கு என் நன்றி உரியது. பயிர்த்தொழிலில ஈடுபட்டு வெளியூரில் வாழும் யான், சொல்லேர் உழவர்களின் இக்கூட்டத்தில் வரவேற்புக்குழுத் தலைவராயிருப்பது ஒரு விந்தையே. நண்பர்களின் உழைப்பால் எனக்குப் பெருமை கிட்டுவது என்பேறு.

மாநாட்டுச் செலவுக்காக நன்கொடை ஈந்தும், விளம்பரம் தந்தும் உதவியுள்ள பெரியோர்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் என் நன்றி உரியது. இவ்வாறே உரையாற்றியும், உழைப்புத்தந்தும், ஆசி நல்கியும் ஆதரவுதரும் அனைவருக்கும் பாராட்டுத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற தொழில்களில் நிலையான ஊதியம் கிடைக்கிறது. எழுத்துத்துறையை மட்டும் நம்பி யாரும் வாழ்வதற்கில்லை. எனவே, சிறந்த இலக்கியங்களைப் படைக்கும் எழுத்தாளர்களுக்கு அரசாங்க உதவி இன்றியமையாது தேவைப்படுகிறது. இதனை உணர்ந்து நம் தமிழ்நாடு அரசாங்கத்தார் 5-10-1961-ல் அரசாங்க ஆணை எண். 2377. கல்வி என்ற ஆணைப்படி கலைஞர்களுக்கு ஆதரவுதர வழிவகுத்துள்ளனர். எனினும், ஏதோ ஓரிருவர் தவிர தமிழ் இலக்கியத்திற்குத் தொண்டாற்றியுள்ளவர்கள் பயன்பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஆணைப்படி தகுதியுள்ளவர்களுக்குத் தாராளமாக உதவி செய்யுமாறு அரசினரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழ் இதழ்கள் பல தமிழ் எழுத்தாளர் உதவியின்றியே இயங்கக்கூடிய அளவுக்கு வளர்ந்துவிட்டன. இது நல்வளர்ச்சி ஆகாது. பிறமொழிகளிலும் பிறநாடுகளிலும் வெளியாகும் இதழ்களையே நம்பி தமிழில் இதழ்கள் நடத்துகின்ற வழக்கம் படிப்படியாகவேனும் கைவிடப்பட வேண்டும். ஆட்சி மொழியாகவும், பயிற்சி மொழியாகவும் தமிழ் மொழி, வளர்ச்சி பெற்று வரும் நிலையை தமிழ் இதழ்களின் உரிமையாளர்கள் உணரவேண்டுகின்றேன்.

வணிக நிறுவனங்களில் காணப்பெறும் பெயர்ப் பலகைகளில் மொழிப் பிழைகள், மலிந்து கிடக்கின்றன. இவற்றைப் பார்க்கும் போதெல்லாம் என் போன்றோருக்குக் கண்ணுறுத்தல் ஏற்படுகிறது. இனியேனும் இத்தகைய தவறுகளை நம் மக்கள் தவிர்க்க வேண்டும்; ஏற்கெனவேயுள்ள

பெயர்ப் பலகைகள் திருத்தஞ் செய்யப் பெற வேண்டும்.

ஆவணக்களரிகளில் பதியப்பெறும் பத்திரங்களின் தமிழ்நடை, மொழிவளர்ச்சிக்கும், மக்களின் இன்றைய மனப்போக்கிற்கும் ஒவ்வாததாக இருக்கிறது. தமிழ் மொழியில் நல்ல பயிற்சியும், ஆங்கில அறிவும் பெற்றவர்கள் மட்டுமே எழுதலாம் என அரசு வரையறை செய்தல் வேண்டும். பத்திரம் எழுதுபவர்களின் தகுதியை வரையறுத்துச் சில நாடுகளில் சட்டம் இயற்றப் பெற்றிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த சில ஆண்டுகளில் சாகித்திய அக்காடமியினர் பல சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசுகள் வழங்கியிருக்கிறார்கள். இது பாராட்டுக்குரியது. இச்சீரிய நூல்களில் சிலவற்றையேனும் ஏனைய இந்திய மொழிகளில் வெளியிட சாகித்திய அக்காடமியினர் ஆவன செய்வதால் அது இந்திய ஒற்றுமைக்கு உதவியாயிருக்கும்.

தொன்மையான புகழ் தமிழ் இலக்கியத்துக்கு எவ்வளவுதான் இருப்பினும் கடந்த சில ஆண்டுகளில் நம் மொழியின் வளர்ச்சி பிற மொழிகளின் வளர்ச்சி வேகத்தைவிடக் குறைவாக இருக்கிறது என்று நான் சொன்னால், தமிழ் எழுத்தாள நண்பர்களாகிய நீங்கள் அதைக் குற்றமாகக் கருதமாட்டீர்கள் என நம்புகிறேன். மலையாள மொழியில் நூல்களைப் படிப்பவர்களின் எண்ணிக்கை மிகுதியால் நூல்கள் மலிவான விலைக்கு விற்பனை செய்யப் பெறுகின்றன. மராத்தி மொழியில் படைப்பிலக்கியங்கள் பெருகியுள்ளன. குஜராத்தியில் வரலாற்று நூல்களும் பிற துறை நூல்களும், ஏராளமாக வெளிவந்துள்ளன. வங்க மொழியில் திரைப் படக்கதை தொடங்கி, விஞ்ஞான அறிவு வரை எத்துறையிலும் புது நூல்கள் வந்த வண்ணமாக உள்ளன. தென்னாட்டின் ஆலிவுட்டாக கோடம்பாக்கம் இருந்தாலும், திரைப்படத்தின் கதை மூலம் வங்கத்திலிருந்துதான் மிகுதியாக வருகிறது. இந்நிலைமை திருந்த நாம் முயல வேண்டும். செய்தித்தாள்களையும் வார இதழ்களையும் படிப்பது போலவே அறிவு வளர்ச்சிக்குப் புதிய நூல்களைப் படிப்பதும் இன்றியமையாதது. இக்கருத்தைத் தமிழ் மக்களிடையே மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறினால்தான் தமிழின் வருங்கால வளர்ச்சி வகையாக அமையும் என்று நான் எண்ணுகிறேன்.

நூல்களைத் தனிப்பட்டவர்கள் வாங்குவது குறைந்து வருவதற்கு மற்றொரு காரணம் அஞ்சல் கட்டணங்களின் மிகுதியேயாகும். ஒரு ரூபாய் விலையுள்ள நூலை வி. பி. மூலம் பெற மேலும் ஒரு ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது. கல்விப் பெருக்கத்தில் ஆர்வம் காட்டி வரும் அரசாங்கத்தார் இந்நிலையை உணர்ந்து அஞ்சல் வழியாக நூல்களை அனுப்புவதற்குச் சலுகை காட்ட முன் வருவார்களாக!

என் கருத்துக்களுக்குச் செவிசாய்த்த உங்களுக்கு என்வணக்கத்தைத் தெரிவித்து உங்கள் அனைவரையும் வருக வருக என மனமார வரவேற்கிறேன்.




ஆங்கில போதகன் உபாத்தியாயர் உதவி இல்லாமல் 90 நாட்களில் தமிழ் மூலம் ஆங்கிலம் தானே இலக்கணமாக படிக்க, பேச, எழுத சுலபமாக கற்க முடியும்.

மலிவு விலை ரூ. 4/-

வி.பி. செலவு. ரூ 1-25

கிடைக்குமிடம்: நிர்மலா புக் டிபோ
No. 39. பெருமாள் கோயில் தோட்டத்தெரு
உ, வது சந்து சென்னை-1

# தமிழ் எழுத்தாளர் சங்கம் பன்னிரண்டாவது மாநாடு
## 1964. திசம்பர் 5, 6.
### மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்களின்
# தலைமையுரை

வரவேற்புக்குழுத் தலைவர் அவர்களே! மாநாட்டைத் துவக்கி வைக்கும் அறிஞர் அவர்களே! பாராட்டுக்குரிய பெரியோர்களே! எழுத்தாள நண்பர்களே! அன்பர்களே! தாய்மார்களே! அனைவருக்கும் உளங்கனிந்த வணக்கம்.

சுதந்தரம் பெற்ற பாரத நாட்டிலே எழுத்தாளர் (நூலாசிரியர்) பெருகிக் கொண்டே வருகிறார்கள். புதிய புதிய எழுத்தாளர்களும் கவிஞர்களும் கலைஞர்களும் தோன்றி நூல்களை எழுதிப் பொது ஜனங்களுக்குத் தொண்டு செய்து வருகிறார்கள். பாரதநாடு பல பாஷைகளையும் பலவித பண்பாடுகளையும் பல மதங்களையும் பலவித பழக்கவழக்கங்களையும் கொண்டிருக்கிற பெரிய உபகண்டமாகும். இத்தகைய வேறுபாடுள்ள இந்திய மக்களுக்கு ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் உண்டாக்கி அவர்களை முன்னேற்றப் பாதையில் செலுத்த வேண்டிய கடமை எழுத்தாளர்களுக்கும் உண்டு. நாட்டின் முன்னேற்றத்துக்கும் மேம்பாட்டுக்கும் நலத்துக்கும் ஏனையோரைப் போலவே எழுத்தாளர்களும் உழைக்க வேண்டியவர்கள். இந்த நன்முயற்சியிலே ஜாதி, மதம், கட்சி, பாஷை முதலிய வேறுபாடுகளைக் கருதாமல் தொண்டாற்ற வேண்டிய பொறுப்பு எழுத்தாளருக்கு உண்டு.



எழுத்தாளரின் எழுதுகோலுக்குத் தனியாற்றல் உண்டு. நாட்டு மக்களுக்கு உயர்ந்த நோக்கங்களையும் தெளிவான கருத்துக்களையும் மேம்பாட்டையும் உண்டாக்க எழுத்தாளர் தமது எழுதுகோலைப் பயன்படுத்த வேண்டும். கசப்பு, பகைமை, வேற்றுமையுணர்ச்சி முதலியவற்றை நீக்கி ஒற்றுமை ஒருமைப்பாடு தேசபக்தி முதலிய நற்பண்புகளை வளர்க்க வேண்டும். இப்பணியைச் செய்வதற்கு வேண்டிய சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தார் கல்வியைப் பரப்புவதற்காகப் பெருமுயற்சி செய்து வருகிறார்கள். ஆனாலும், இப்பெரிய உபகண்டத்தில் கல்வி பரவுவதற்கு இன்னும் சில ஆண்டுகள் செல்லும். கல்லாமை, அறியாமையாகிய இருள் மக்களிடத்தில் இன்னும் இருந்து வருகிறது. படித்த மக்களின் அறிவை மேன்மேலும் வளர்த்து விரிவுப் படுத்துவதற்கு எழுத்தாளர்கள் நல்ல நூல்களை எழுதி வெளியிட வேண்டும். நாட்டில் கல்வியறிவு பரவாத காரணத்தினாலும், படித்த மக்களுக்கிடையே நூல்களைப் படிக்கும் பழக்கம் பெருவாரியாக ஏற்படாத காரணத்தினாலும் எழுத்தாளர்களின் (நூலாசிரியர்களின்) வாழ்க்கைநிலை (வருவாய்) சுகமாக இல்லை. இன்றைய எழுத்தாளர்—முக்கியமாகத் தமிழ் எழுத்தாளர், தங்கள் எழுத்துக்களினாலேயே தங்களின் வாழ்க்கையை நடத்தும் நிலைமையை இன்னும் அடையவில்லை. ஆற்றில் ஒருகால் சேற்றில் ஒரு கால் என்பது போல் எழுத்தாளரில் பெரும்பான்மையோர் வேறு தொழில்களைச் செய்து கொண்டே நூல் எழுதும் பணியைச் செய்துவருகிறார்கள். அயல் நாடுகளிலே எழுத்தாளர்கள் தாங்கள் எழுதுகிற நூல்களின் வருவாயைக் கொண்டே தங்கள் வாழ்க்கையைச்செம்மையாகவும் மேன்மையாகவும் நடத்திவருகிறார்கள். அத்தகைய உயர்நிலை இன்னும் நமது எழுத்தாளருக்கு வாய்க்கவில்லை. வெகுவிரைவில் அந்நிலை ஏற்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

அரசாங்கத்தார் நூலாசிரியர்களை ஊக்கப்படுத்தப் பலவகைகளில் உதவி செய்து வருகிருர்கள். அவற்றில் சாகித்திய அக்காடமி என்பதும் ஒன்று. பதினன்கு மொழிகளில் சிறந்த நூல் எழுதுகிற நூலாசிரியருக்கு ஆண்டுதோறும் சாகித்திய அக்காடமி பரிசு வழங்கிவருவதை எல்லோரும் அறிவர். தமிழ் நூல்களுக்கும் பரிசு வழங்கப்படுகிறது. இது மகிழ்ச்சிக்குரியதே தகுந்த நல்ல நூல்களுக்குப் பரிசு வழங்க வேண்டும்.

சென்னை அரசாங்கத்தாரும் சிறந்த தமிழ் நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசு அளித்து வந்தனர். தற்போது இது நிறுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாண்டிலிருந்தாவது இப்பரிசுகளைத் தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

மாத வார தினசரிப் பத்திரிகைகளுக்கு எழுதுகிற எழுத்தாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஊதியம் குறைவாக இருக்கிறது. இவ்வூதியத் தொகையை உயர்த்த வேண்டும். வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள இக்காலத்தில் எழுத்தாளரின் ஊதியம் உயராமலிருப்பது வருந்தத்தக்கது. இது பற்றி மாத வார தினசரி இதழ் வெளியிடுவோர் கவனிப்பார்களாக.

வானொலியில் பேசுகிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஊதியமும் மிகக்குறைவாக இருக்கிறது. இந்தத் தொகையை மூன்று மடங்கு அதிகப்படுத்த வேண்டும். இதுபற்றி இந்திய ஒலிபரப்புத்துறை அமைச்சர் கவனிக்க வேண்டுகிறோம்.

எழுத்தாளர் உலக ஞானம் பெற்று விரிந்த மனப்பான்மையுள்ளவர்களாக இருத்தல் அவசியம். பாரத நாட்டில் பிரயாணம் செய்ய எழுத்தாளருக்குப் பொருள்வசதி இல்லை. இவர்களுக்கு அரசாங்கம் சலுகைதர வேண்டும். எழுத்தாளர் தங்குவதற்குரிய விடுதிகளைப் பாரத நாட்டின் ஒவ்வொரு மாகாணத்தின் தலைநகரிலும் அமைத்து அவ்விடுதிகளில் குறைந்த செலவில் தங்குவதற்கு வழி செய்து கொடுக்க வேண்டும். மேலும் எழுத்தாளரின் பிரயாணச் செலவைச் சரிபாதி அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். மாகாண அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் அந்த வசதிகளை எழுத்தாளர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எழுத்தாளரின் புத்தகங்களுக்குக் காப்பிரைட் (Copyright) உரிமைபற்றிய சட்டதிட்டங்கள் தெளிவான முறையில் காப்பிரைட் சட்டம் இன்னும் ஏற்படவில்லை. இதுபற்றிப் பலவிதமான குழப்பங்கள் உள்ளன. எழுத்தாளரின் காப்பிரைட் சட்டதிட்டங்களை அரசாங்கத்தார் வகுத்துக் கொடுக்க வேண்டும்.

அரசாங்கத்தார் நாடெங்கும் நூல் நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிருர்கள். அந்நூல்நிலையங்களில் புத்தகங்களை வாங்கி வைக்கப் பொருளுதவியும் செய்துவருகிருர்கள். நூல்நிலையங்களில் சில நல்ல முறையில் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆனல், பல நூல்நிலையங்கள் திருப்திகரமாக நடைபெறவில்லை. நல்ல உயர்ந்த புத்தகங்கள் பல நூல்நிலையங்களில் இடம் பெறவில்லை. இந்தக் குறைபாடு நூல் நிலையங்களில் இல்லாதபடி அரசாங்கத்தார் பார்த்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தார் தக்கவர்களைக் கொண்டு ஒரு மத்தியக் குழுவை ஏற்படுத்தி அதன் மூலமாக நூல்களைத் தேர்ந்தெடுப்பது நலம்.

நாட்டு மக்களுக்குப் பயன்படுகிற நல்ல நூல்களை எழுத்தாளர் எழுதவேண்டும். நூல்களை வெளியிடுகிறவர்களும் பொது ஜனங்களுக்கு உபயோகமான நல்ல நூல்களை அச்சிட வேண்டும். வாலிபர்களின் மனத்தைக் கவரும் படியான சித்திரங்களை மேல் அட்டையில் சித்தரித்துக்காட்டிப் புத்தகம் விற்பனை செய்கிற கீழ்த்தரமான வழக்கம் நமது தமிழ் நாட்டில் சிலகாலமாகப் பரவி வருகிறது. இந்தக் கீழ்த்தரமான வழக்கம் உடனடியாக ஒழிய வேண்டும்; தமிழ் நாட்டைத் தவிர ஏனைய பாரத நாட்டில் இத்தகைய கீழ்த்தரமான செயல் கிடையாது. வடநாட்டு எழுத்தாளர் சிலர் இந்தவிதமான சித்திரப்பட அட்டையுள்ள நூல்களைக் கண்டு, "இப்படியெல்லாம் சித்திரம் போட்டால்தான் உங்கள் நாட்டில் புத்தகம் விற்பனையாகுமோ?" என்று கேட்டபோது வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டது. இனிமேனும் இத்தகைய சித்திரப்படங்களையுடைய இதழ்களையும் நூல்களையும் வெளியிடாமல், நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றுவார்களாக.

அறிவு பயக்கும் நல்ல நூல்களை எழுதுவதனுலே எழுத்தாளனை மக்கள் மதித்துப் போற்றுகிருர்கள். உயர்ந்த கருத்துள்ளதும் பயனுடையதுமான நூல்களை மக்கள் எதிர்பார்க்கிருர்கள். அத்தகைய தக்க நூல்களை எழுத்தாளர் எழுதி நாட்டுக்கு நற்ருெண்டு செய்வார்களாக.

# கேடயம் பெறும் அறிஞர்கள்

"ராய. சொ", "ஜீவா" இருவர்க்கும்

தமிழ் எழுத்தாளர் சங்கம் அளிக்கும்

# நல் வாழ்த்து மடல்

எழுதரிய திருவுடையாய்
இலங்குபல காவியமும்
இசையும் தந்தாய்
பழுதகன்ற கலைப்பனுவல்
பண்புநெறித் திருநூல்கள்
பாரோர் எல்லாம்
தொழுதுநிதம் போற்றிசெயும்
சுடர்நூல்கள் அனைத்துமிங்கு
தோன்றச் செய்தாய்
எழுசுடர்போல் ஒளிமுகத்தால்
இனியதமிழ்ப் பெருமகனே,
இறைஞ்சு கின்றோம். 1

அன்னையே நின்புதல்வர்
அளப்பரிய புகழ்படைத்தார்
அவருள் ஈங்கு
பொன்னனையர் இருபெரியோர்
போதந்தார், வாழ்த்தியெமைப்
புரக்க இந்நாள்!
இன்னமுதப் பண்புடையார்
எண்ணமெலாம் தமிழ்நிறைந்தார்
எழுத்தும் பேச்சும்
கன்னலெனத் தித்திக்கும்
கவின்படைத்த தவச்செல்வர்
கருணை மிக்கார்! 2

நிலங்காக்கும் கடல்போன்று
நெடுந்தமிழின் பரப்பெல்லாம்
நித்தம் காக்கும்
வலங்கொண்ட சொக்கலிங்க
வள்ளலார், நின்மகனார்
வாழ்நா ளெல்லாம்
துலங்கியசெந் தமிழ்தொடர்ந்து
தோன்றுநலப் புகழனைத்தும்
தனக்கென் றாக்கி
நலங்கிளரும் கலைபரப்பும்
நல்லவரைப் போற்றுகின்றோம்
நன்னாள் ஈதில். 3

வழங்குதமிழ் நிலப்பரப்பில்
வாழ்ந்திடுநன் மக்கள்நலம்
வளம்பெற் றோங்க
முழங்குவதே தொழிலுடையான்
மூண்டெழுந்து நொய்மைகளை
முறியச் சாடி
கழங்காடும் பிரசண்டன்
கடினமொடு திகழ்வயிரக்
கனவு நெஞ்சன்
பழங்கால மறவர்திறல்
பயின்றோன், நல்லோன்
பண்பாளன் துரைக்கண்ணன்
புலமை மிக்கோன் 4

இனிய தமிழ்ச் சுவையென்னும்
வானமுத நெல்லியுண்ட
இருவர் தாமும்
பனிமுடிசேர் இமயமெனப்
பசுந்தமிழ்சேர் பொதியமெனப்
பன்னாள் வாழ்க.
நனிவளங்கள் சிறந்திடுக
நாட்டிலுளோர் இவர்சொற்கள்
நயமாக் கொண்டு
தனிப்பெருமை மிக்கோங்க
தமிழ்த்தாயே நின்மலர்த்தாள்
சரணமென்றோம். 5

இயற்றியவர்: 'துறைவன்'

மலேசியாவில் அதிக விற்பனையுள்ள

தலைசிறந்த தமிழ்த் தினசரி

# தமிழ் மலர்

( சிங்கப்பூரிலிருந்து வெளிவருகிறது )

தினசரி 10 பக்கங்கள் : ஞாயிறு இதழ் 16 பக்கங்கள்

ஆசிரியர் : தி. செல்வகணபதி

தமிழகப் பிரதிநிதி & தலைமைச் செய்தியாளர். கே. ஜி. இராதாமணாளன்

தென்னகத்தின் தலைவர்கள், கவிஞர்கள்,
எழுத்தாளர்கள் பலர் தொடர்ந்து எழுதுகிறார்கள்.

[ தமிழ் மலர் ]

சென்னை அலுவலகம் : புதூர் பிளாட் எண். சி. 528
மேற்கு மாம்பலம், சென்னை-33

## எமது சிறந்த இலக்கிய நூல்கள்

| | ரூ. | பை. |
|---|---|---|
| டாக்டர் மு. வரதராசன் | | |
| பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை | 9 | 00 |
| டாக்டர் துரை அரங்கனார் | | |
| சங்ககாலச் சிறப்புப் பெயர்கள் | 7 | 00 |
| டாக்டர் மா. இராசமாணிக்கனார் | | |
| தமிழ்மொழி இலக்கிய வரலாறு | 5 | 00 |
| டாக்டர் வ. சுப. மாணிக்கம் | | |
| தமிழ்க் காதல் | 10 | 00 |
| பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் | | |
| சமுதாயமும் பண்பாடும் | 7 | 00 |
| மு. இராகவையங்கார் | | |
| ஆராய்ச்சித் தொகுதி | 12 | 00 |

## புலியூர் கேசிகன் மலிவுப் பதிப்புகள்

| | | |
|---|---|---|
| மணிமேகலை | 2 | 50 |
| கலிங்கத்துப்பரணி | 2 | 00 |
| புறப்பொருள் வெண்பாமாலை | 2 | 50 |
| நளவெண்பா | 1 | 50 |
| சிலப்பதிகாரம் | 3 | 00 |
| தொல்காப்பியம் | 3 | 00 |

## பாரி நிலையம்

59, பிராட்வே : : சென்னை-1.

# தமிழ்க் கடல்

# ராய. சொக்கலிங்கன் அவர்கள்

### மு. இராமசாமி

**பிறப்பும், கல்வியும், திருமணமும்**

அறிஞர் ராய. சொக்கலிங்கனுர் காரைக்குடியில் விளம்பி ஆண்டு ஐப்பசித் திங்கள் 15 ஆம் நாள் (30—10—1898) நாட்டுக்கோட்டை. தனவணிககுடும்பத்தில் தலைமகனுகப் பிறந்தார். தந்தையார் திரு. ராய. சொ. ராயப்பச் செட்டியார்; தாயார் அழகம்மை ஆச்சி.

சொக்கலிங்கனுர் இளமையில் காரைக்குடியில் சுப்பையா ஆசிரியரிடம் திண்ணைப் பள்ளியில் கல்வி பயின்ருர். ராய. சொ. தந்தையாருக்கு மலையாளத்தைச் சார்ந்த பாலக்காட்டில் ஒரு கொடுக்கல் வாங்கல் கடை இருந்தது. அதன் காரணமாக எட்டு, ஒன்பது வயதுவரையில் பாலக்காட்டில் படித்தார். பதின்மூன்ருவது வயதில் பர்மாவுக்குச் சென்று பியாப்பம் என்ற ஊரில் மூன்றேகால் வருடம் இருந்துவிட்டுத் தாய்நாடு திரும்பினுர். காரைக்குடியில் தமது பதினெட்டாவது வயதுமுதல் இருபதாவது வயதுவரையில் தமிழ் ஆசிரியர் பண்டித திரு. சிதம்பர அய்யர் அவர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியப் பாடங்கள் பயின்ருர். இக்காலம் சமூகச் சீர்திருத்தத் தந்தை சொ. முருகப்பாவின் தொடர்பு ஏற்பட்டது.

காளயுத்தி ஆண்டு ஆனித் திங்கள் 8 ஆம் நாள் (21-6-1918) பள்ளத்தூரில் திரு. உமையாள் ஆச்சியைத் திருமணம் புரிந்துகொண்டார்.

**சமூகத் தொண்டு**

காரைக்குடியில் பிங்கள ஆண்டு ஆவணித் திங்கள் 26 ஆம் நாள் (10-9-1917) அன்பர் சொ. முருகப்பா பல அன்பர்களைச் சேர்த்துக்கொண்டு ஹிந்து மதாபிமான சங்கத்தைத் தோற்றுவித்தார். இச்சங்கம் கண்டதில் ராய. சொ. பெரும் பங்கு கொண்டார். சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்துவருகிருர்.

தனவணிக சமூகத்தில் வளர்ந்த குறைபாடுகளைச் சீர்திருத்தம் செய்யக் கருதி, சித்தார்த்தி ஆண்டு ஆவணித் திங்கள் 26 ஆம் நாள் (11-9-1919) தன வைசிய ஊழியர் சங்கம் கண்டனர். இதிலும் ராய. சொ. பெரிதும் பங்குகொண்டு பணியாற்றினுர். இதன் சார்பில் ரௌத்திரி ஆண்டு ஆவணித் திங்கள் 24 ஆம் நாள் (8-9-1920) "தன வைசிய ஊழியன்" என்ற பெயரோடு ஒரு பத்திரிகை ஆரம்பிக்கப்பெற்றது. இதன் ஆரம்பகால ஆசிரியர் சொ. முருகப்பா. இப்பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு ஆரம்பத்திலிருந்து ராய. சொ. இதன் ஆசிரியராக இருந்துவந்தார். சில ஆண்டுகளுக்குப் பின் இந்தப் பத்திரிகையை "ஊழியன்" என்ற பெயருடன் மாற்றியமைத்துக் கொள்கையைப் பரந்த அளவில் விரிவுபடுத்திச் சுமார் இருபது ஆண்டுகள் ராய. சொ. நடத்தினுர். இன்றைய பத்திரிகை உலகில் முன்னணியில் உள்ளவர்கள் பலர் இவ் 'ஊழியனில்' உதவி ஆசிரியர்களாக இருந்தவர்.

**அரசியல்**

ராய. சொ. சட்டமறுப்பு இயக்கத்தில் சேர்ந்து (9-1-1932) ஒரு வருடத் தண்டனை அடைந்தார். நாட்டுக்கோட்டை நகரத்தார் வகுப்பில் அரசியல் காரணமாக முதல்முதல் சிறை சென்றவர் அன்பர் ராய. சொ. தான். வ வே. சு. அய்யர், கவியரசர் பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா முதலியவர்களுடன் நேரில் பழகியிருக்கிருர்.

ராய. சொ. மாசற்ற தேசபக்தர். தீவிர காந்தியவாதி. மௌலாணு முகமதலி

தலைமை வகித்த பெல்காம் காங்கிரசுக்கும், ராஜன்பாபு தலைமை வகித்த பம்பாய் காங்கிரசுக்கும் ராய. சொ. பிரதிநிதியாகச் சென்றார்.

1938 முதல் 1941 வரையில் காரைக்குடி நகரசபைத் தலைவராக இருந்தார். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினராகவும், தமிழ்நாட்டு காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினராகவும், காரைக்குடி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும் இருந்திருக்கிறார்.

### வெளி நாட்டுப் பிரயாணம்

1930 ஆம் ஆண்டு மலேயாவில் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார். பின்னர் 1935, 1936 ஆம் ஆண்டில் தமது மனைவி உமையாள் ஆச்சியுடன் பர்மா, மலேயா, சிலோன், சுமத்ரா, இந்தோ சைனா முதலிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தும், தமிழைப் பரப்பியும் வந்திருக்கிறார்.

சார்வரி ஆண்டு (ஜனவரி 1961) தைப் பூசத்திற்குப் பர்மா சென்று இருபது நாட்கள் தங்கி இலக்கியப் பணி செய்த பின்னர் தாய்நாடு திரும்பினார். அவ்வமயம் இரங்கூன் நாட்டுக்கோட்டைச் செட்டியார் தரும பரிபாலன சபையார் ராய. சொ. அவர்களுக்குப் பொன்னுடை போர்த்திச் "சிவமணி" என்ற பட்டஞ் சூட்டி பெரு மகிழ்வு கொண்டனர்.

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் கோலாலம் பூரில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகா நாட்டிற்குத் தலைமை தாங்கவும், சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றவும் அழைக்கப் பட்டு மலேயா சென்றார்கள். இருபத்து நான்கு நாட்கள் ஓய்வு ஒழிவின்றி அந்நாடு முழுவதும் சுற்றி, இருபத்திரண்டு இலக்கிய சமயச் சொற்பொழிவுகள் ஆற்றினார்கள்.

### சிவம் பெருக்கும் சீலர்

கோலாலம்பூரில் இயங்கி வரும் அருள் நெறித் திருக்கூட்டத்தார் ராய. சொ. அவர்களின் சைவ சமய ஈடுபாட்டையும், தொண்டையும் சிறப்பிக்கும் வகையில் "சிவம் பெருக்கும் சீலர்" என்ற பட்டம் வழங்கிப் பேருவகை கொண்டார்கள்.

### தமிழ்க் கடல் விருது

1958 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி காரைக்குடி இந்துமத அபிமான சங்கத்தார் தமது அருமைத் தலைவர் ராய. சொ. அவர்களின் மணி விழாவினை வெகு சிறப்பாகக் கொண்டா டினர். அவ்வமயம் ராய. சொ. அவர் கட்குப் பொன்னுடை போர்த்தித் "தமிழ்க் கடல்" என்ற பட்டமும் சூட்டிப் பரவசப்பட்டனர்.

### தமிழ் பரப்பும் பணி

1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கல்கத்தா தமிழ்ச் சங்க அன்பர்கள் அழைப்பை ஏற்று, அங்கு சென்று இரு வாரங்கள் தங்கி தமிழ் மணம் கமழச் செய்திருக்கிறார். மீண்டும் பர்மா சென்று திரும்பிய சமயமும் கல்கத்தாவில் தங்கி இலக்கியப் பெருவிருந்துகள் படைத்திருக் கிறார். நேப்பாளம் சென்று பசுபதிநாதனை நெஞ்சிருத்தித் திரும்பும் பேறும் இவர் பெற்றிருக்கிறார்.

கோயம்புத்தூர், ஈரோடு, பவானி முதலிய இடங்களிலுள்ள மெய்யன்பர்கள் தமிழ்க் கடல் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்திப் பொற்பதக்கம் அணிவித்துத் தங்கள் பாராட்டை வெளிப்படுத்தியிருக் கின்றனர்.

### சமய வாழ்க்கை

சார்வரி, ஐப்பசி மாதம் 15 ஆம் தேதி (31-10-60) ராய. சொ. அவர்களின் அருமை மனைவி உமையாள் ஆச்சி சிவபதவி அடைந்தார்கள். அந்தத் தாங்கொணாத் துயரம் காரணமாக ராய. சொ. அவர்கள் காந்திப் பெம்மான் தங்கும் பேறுபெற்ற தமது ஆசிரமவீட்டில் தங்க மனம் பொருது, காரைக்குடி ஹிந்து மத அபிமான சங்கத்திலேயே தங்கி சமயப் பணியைத் தொடர்ந்து நடத்தினார். சங்கத்தில் பெரியபுராண விளக்கமும், வாரந்தோறும், சனிக்கிழமை மாலை இரண்டு மணி நேரம் இலக்கியக் கூட்டங் களும் நடத்தும் பொறுப்பேற்று, விளக்கமும் தந்திருக்கிறார்கள்.

காரைக்குடி நகரச் சிவன் கோவிலின் மேற்பார்வையாளராக ஓராண்டு இருந்திருக் கிறார். தமிழோடு இசைபாடல் மறந் தறியாச் சிவத்தளியாக அதை விளங்கச் செய்தார். அகமும் புறமும் தூய்மையாகத் துலங்க வேண்டும் என்ற சீரிய நாட்டமுள்ள

ராய. சொவின் நிர்வாகத்தில் நகரச் சிவன் கோயில் சுத்தமே சிவம் என்ற சூழ்நிலையுடன் விளங்கியதில் வியப்பில்லை.

### திருத்தல-திருப்பதி வழிபாடு

சைவ, வைணவ சமரச நோக்கங் கொண்ட அன்பர் ராய. சொக்கலிங்கனுர் நாயன்மார்களின் பதிகங்கள் பெற்று விளங்கும் திருத்தலங்களுக்கும், ஆழ்வார் களின் பாசுரங்கள் பெற்று மிளிரும் திருப்பதி களுக்கும் சென்று வணங்கும் கொள்கையை மேற்கொண்ட சீரிய பணியில் பாடல் பெற்ற சிவத்தலங்கள் 275-ல் 268 திருத்தலங்களுக்கும் பாசுரங்கள் பெற்ற 108 திருப்பதிகளில் 96 திருப்பதிகளுக்கும் இதுவரையில் போய்வந்திருக்கிருர்.

### வடநாட்டு க்ஷேத்திர யாத்திரை

வடநாட்டில் பம்பாய், நாசிக் க்ஷேத்திரங்களுக்கும், கல்கத்தாவில் காளி கட்டம், இராமகிருஷ்ணலயம், வைகுந்த நாதர் கோயில் முதலிய ஆலயங்களுக்கும், அயோத்தியாபுரி, ஸ்ரீ காசியம்பதி முதலிய திருத்தலங்களுக்கும் சென்று க்ஷேத்திரா டனம் செய்து வந்திருக்கிருர்.

### சிவ பூசை

சிவஞானம் குலழந்தூட்டும் சிவாகம நூற்கு எல்லை கண்ட பெருந்தவத்தார் ஈசான குரு சிவாச்சாரியாரால் ராய. சொ. அவர்கள் 1958-ல் 'சிவபூசை' எழுந்தருள்விக்க பெற்ருர்.

ராய. சொ. அவர்கள் சிவபூசை செய்யும் காட்சி சிந்தையை உருக்கிச் சொக்கவைக்கும். அறிவார் அறியக் கூடியதாதலால், அதை எவ்வாறு ஒருவர்க்கு இசைவிக்க இயலும்?

### நூலகக் கொடை

வள்ளல் அழகப்பரின் பொய்யா வண்மையை, தன்னலமற்ற ஈகையை, உடைமை முழுவதும் துறந்த ஒப்புரவைப் புலவர் பெருமான் ராய. சொ. மிக மதித்தார். அம் மதிப்பிற்கு ஒரு சான்ருகத் தாம் வாழ் நாள் முழுவதும் தொகுத்த பெரு நூல்நிலையத்தை அழகப்பாகலைக்கல்லூரிக்கு வழங்கினர். அழகப்பரின் கொடைச் சிறப்பைத் தம் கொடையால் மதித்தார். கல்விக்குக் கொடை செய்த அழகப்பருக்கு நூற்கொடை செய்தார் ராய. சொ. அவரது நூலகம் 1800 நூல்கள் கொண்டது; கிடைத்தற்கரிய பதிப்புக்களும், திங்கள் இதழ்களும், அகர நூல்களும் கொண்டது. திருக்குறள், இராமாயணம் இவற்றின் பல பதிப்புகள் இந்நூலகத்துள் உள. இலக்கண இலக்கிய, சமய, அரசியல் நூல்கள், பல் வேறு உரைநூல்கள், பல்பொருள் பற்றிய உரைநடை நூல்கள் ஏராளமாக இந் நூலகத்தில் உள. ஆனந்த போதினி, செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், குமரன், நவசக்தி, ஊழியன் இதழின் தொகுதிகளும் இந்நூலகத்தில் உள.

### பொன்னுடை போர்த்தல்

"தமிழ்க் கடல்" உவந்தளித்த நூலகக் கொடையை மதித்துப் பாராட்டும் வகையில் அழகப்பா அற நிலையத்தார் ஒரு சிறப்பு விழா நடத்தினுர்கள். அவ்வமயம் ராய. சொ. அவர்களுக்குப் பொன்னுடை போர்த் தப்பட்டது. பொன்னுடை போர்த்திய முன்னுள் மாநிலக் கல்வி மந்திரி திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் ராய. சொ. ஒரு நடமாடும் நூலகம், ஆகவே அவர் தன்கொடையளித்துள்ள அத்தனை நூல் களும் அவரிடம் குடிகொண்டுள்ளன என்று மகிழ்ந்து பாராட்டினுர்கள்.

### தமிழ்ப் பெருநூல்களைப் பரப்பும் பணி

அ. தொகுப்பு :

தமிழ்ப் பெருநூல்களைப் பரப்புவதற்கு ராய. சொ. கண்ட நெறி தொகுப்பு நெறி யாகும். நயம் சான்ற செய்யுட்களைத் தொகுத்து, நிரல் படுத்தித் தக்க குறிப்பும் எழுதி இவர் பதிப்பித்த நூல்கள் பின் வருவன :—

1. காதற்பாட்டு
2. தேனும் அமுதும்
3. திருவாசகத்தேன்
4. தேவாரமணி
5. ஆழ்வார் அமுது
6. பாவைப்பாட்டு
7. பிள்ளைப்பாட்டு
8. திருமணப் பாட்டு
9. தெய்வப் பாமாலை
10. முருகன் பாமாலை
11. அங்கங்களின் பயன்
12. திருமுறைத் தீங்கனி
13. வணக்கப் பாமாலை
14. மாதவ மாலை
15. அண்ணமலை மாலை
16. தில்லைத் திருநடம்

ஆ. கவிதை அஞ்சலி

ராய. சொ. பழமையைப் போற்றிப் புதுமை கொள்ளும் தமிழ்க் கவிஞர். யாப்பு மரபு கெடுவதைப் பொருத புலவர் இவர். காந்திப் பெருமானைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றியும், புதுமை விழைந்தும் விடுதலை நாயனுராகிய ராய. சொ. இயற்றியுள்ள கவிதை நூல்கள் இவை :—

1. காந்திப் பிள்ளைத் தமிழ்
2. காந்திப் பதினெண் பா
3. காந்தி கவித்துறை அந்தாதி
4. காந்தி நான்மணி மாலை
5. காந்தியும் வள்ளுவரும்
6. தாலாட்டும் கும்மியும்
7. புதுமைப் பாக்கள்
8. பெண்ணிலைக் கண்டனச் செய்யுட்கள்

இ. உரைநடை நூல்கள்

ராய. சொ. பைந்தமிழ் சொட்டும் பல உரைநடை நூல்களும் எழுதியுள்ளார். அவையாவன :—

1. காவேரி
2. குற்ருலவளம்
3. நாம் ஆர்க்கும் குடியல்லோம்
4. காதற் கடிதங்கள்
5. இன்பம் ஏது?

■ ஆராய்ச்சி வெளியீடு:

ராய. சொ. தாய் மொழியாம் தமிழிலக்கியத்தின் ஆழ அகலங்களை நன்கறிந்தவர். அதன் விளைவாக அவர் வழங்கியது 'வள்ளுவர் தந்த இன்பம்' ஆகும். சேதுபதி விறலி விடு தூது, வருண குலாதித்தன் மடல் — ஆகிய காதல் பிரபந்தங்களை ஆராய்ந்து விளக்கம் கொடுத்து, நல்ல முறையில் வெளியிட்டிருக்கின்ருர். தொடர்ந்து வில்லி புத்தூராழ்வாரின் சிவபக்தி, கம்பனின் சமரசம் முதலிய பல்வேறு படைப்புகளை வெளியிட விருப்பமும் கொண்டுள்ளார்.

சொல் விருந்து:

பெருஞ் செல்வர்களைத் தமிழ்ச் செல்வராகவும், தமிழன்பராகவும் ஆக்கிய தனிப் பெருமை ராய. சொ. வுக்கு உண்டு, தமிழ் நாட்டில் பல பகுதிகளிலும் இந்திய நாட்டிலும், அயல் நாட்டிலும், ராய. சொவின் சொல்லாற்றலும், நூலாற்றலும் பரவிக் கிடக்கின்றன. அரசியல் பொழிவாயினும், இலக்கியப் பொழிவாயினும் கணீரென்ற ஒலியோடும், அழுத்தத்தோடும் இடித்துப் பொழியும் முகில் போலப் பேசவல்லவர் இவர். ஒளிவுமறைவு இன்றி உள்ளத்துட்பட்டதைப் பட்டாங்கே கூறும் நேர்மையாளர். செய்வன திருந்தச் செய்யும் திறனும் கலையார்வம் கனியும் நெஞ்சமும் பெற்றவர் இவர்.

இப்போது:

வள்ளல் அழகப்பா அவர்கள் அந்த நாளிலேயே தமது கல்லூரியில் ராய. சொ. அவர்களைத் தொடர்பு படுத்த வேண்டுமென்று விரும்பினுர்கள். அன்று அதற்குத் திருவருள் கூட்டவில்லை. இன்று, அழகப்பக் கல்லூரிகளைத் திறம்பட நடத்தி வரும் நிர்வாகி திரு க. வெ. சித. வே. வேங்கடாசலம் செட்டியார் அவர்களின் அன்பழைப்பிற்கிணங்க, இப்போது ராய. சொ. அவர்கள் அழகப்பா கல்லூரி வட்டத்தில் இருந்து தமிழ் பரப்பிவருகிருர். அழகப்பா கலைக்கல்லூரியில் இவ்வாண்டு புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள தமிழ் ஆராய்ச்சித் துறையின் கௌரவத் தலைமைப் பொறுப்பை ஏற்றுத் தமிழ் இலக்கியங்களை ஆய்ந்து வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளார். தவிர, காரைக்குடி, நாகநாதபுரம் பெருமாள், சிவன் கோயில்களின் நிர்வாகப் பொறுப்பையும் ஏற்று, பழுதுபட்டுள்ள அக் கோயில்களைச் சீர்த்திருத்தம் செய்து அவைகளைச் சிறப்பிக்க முனைந்துள்ளார். ஓய்வு பெறவேண்டிய இம்முதிர்ந்த வயதிலும் இளமைக்குரிய அசைவிலா ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் ராய. சொ. அவர்கள் காணப்படுகிருர்கள்.

இங்ஙனம் பல்வேறு துறைகளிலும் பெரும் பணியாற்றியுள்ள தமிழ்க் கடல் ராய. சொ. அவர்கள் நெடுநாள் வாழ்ந்து நமக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக விளங்கி வர வேண்டுமென்று நம் சங்கம் கேடயம் வழங்கும் இந்த நல்ல நாளில் வேண்டிக் கொள்வோமாக!

# நற்றமிழ் வளர்க்கும்

# நாரண. துரைக்கண்ணன்

கெ. பக்தவத்சலம்

[துணைச் செயலாளர், தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை.]

நாவலும், சிறுகதையும் இந் நூற்றுண்டின் புதுமை இலக்கியங்கள். ஆங்கிலத்திலிருந்து தமிழ் வடிவங்கொண்ட இவ்விரு துறைகளுக்கும், இன்று இலக்கணம் வகுப்பது எளிதாக இருக்கலாம். ஆனல், விற்பனையையே குறிக்கோளாகக் கொண்ட மர்மக் கதைகளும், பொழுது போக்கான வெறும் சிற்றின்பக் கதைகளுமே மலியத் துவங்கிய காலத்தில், மக்களின் மனோபாவத்தை உயரச் செய்து, அவர்களின் இரசனை யுணர்ச்சியைப் பண்படுத்தி, சமுதாயப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டிச் சீர்திருத்தம் புரியும் படைப்பிலக்கியங்களை இயற்றி, திசை திரும்பிக் காலவேகத்தில் கவிழவிருந்த கப்பலைக் காப்பாற்றியவர்களை நாம் என்றென்றும் மறவாமல் போற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

இன்று நமக்குப் பழகிப்போன பல்வேறு இலட்சியங்கள் முப்பது, முப்பத்தைந் தாண்டுகளுக்குமுன் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதிருந்தன. நாவலும், சிறுகதைகளும் படியாதவர்க்குரியன என்று அறிஞர்கள் முகஞ்சுளித்த நிலைமாறி, இன்று பேராசிரியர்களும் இத்துறையில் ஊக்கங் கொண்டு, அவற்றை இலக்கியமாக ஒப்புக் கொள்ளுமளவிற்கு அவை வளர்ந்துள்ளன. இந்த மாற்றத்திற்குக் காரணமாயிருந்த முதுபெரும் எழுத்தாளர் பலருள், பூரண பொற்குடம்போல் பொலிந்து வாழும் மதிப்பிற்குரிய நாரண. துரைக்கண்ணன் அவர்கள் தலையாயவர்.

அந்நாளில், ஒழுக்கக் கேடுகளின் காரணங்களைப் புதிய கோணங்களில் ஆராய்வதும், பெண்ணடிமைக் கொடுமை, விதவைத் துயர் முதலியவற்றை விவரிப்பதும், கற்பிற்குப் பாரதியின் பார்வையில் நின்று விமரிசனம் புரிவதும், வறுமையைச் சித்திரிப்பதும், எதையும் தருக்க ரீதியாக விவாதிப்பதுமே புரட்சிகரமான செயல்களாகக் கருதப் பெற்றன. இந்த மாபெருஞ் சாதனையைத் தமது எழுத்தாற்றலால் வெற்றிகரமாகப் புரிந்துவந்த நாவலாசிரியர், நாடகாசிரியர், பழம்பெரும் பத்திரிகை ஆசிரியர் "ஜீவா"தாம், அடக்கமாயிருந்து அரிய பணி புரியும் நாரண. துரைக்கண்ணன் அவர்கள் என்பதைத் தமிழுலகு நன்கறியும்.

இவரது கற்பனை யெல்லாம் ஒன்று திரண்ட உரைநடைக் காவியம் 'உயிரோவியம்'. பல்லாயிரக் கணக்கானவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட இதனை நாடகமாக்கி, மேடையில் நடித்து மெச்சுபுகழ் பெற்றனர் கலைஞர் டி. கே. சண்முகம் குழுவினர். திரு. ரா. வீழிநாதனல் இந்தியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்நாவல் காதலுக்கும், சகோதர நேயத்திற்கும் ஒரு புதிய பொருள் கற்பிக்கும் உணர்ச்சிப் பிழிவாகும்.

இலக்கிய நயத்தில் இதற்குச் சிறிதும் குறையாத பெருநாவல், 'நடுத்தெரு நாராயணன்'. தலைப்பிலேயே கவர்ச்சி மிக்க இந்நாவலில், மனிதன் தனக்குத் தானே வகுத்துக் கொண்ட மேல்—கீழ் முறைகளை மீறி இயற்கை எவ்வாறு செயற்படுகிறது என்பதைத் தருக்க ரீதியாக விளக்கியுள்ளதைப் படித்துச் சுவைத்துப் பாராட்டாத தமிழ் நெஞ்சமில்லை.

சுமார் முந்நூறு சிறு கதைகளும் பதினறு நாவல்களும், பல நாடகங்களும் நவீனத் தமிழ் இலக்கியத்திற்கு "ஜீவா" தந்த நன்கொடைகள்!

இளம் எழுத்தாளர்களின் நவீன இலக்கியப் பண்ணையான 'பிரசண்ட விகடன்' மாதம் இருமுறை பத்திரிகைக்கும், பொன் விழாக் காணவிருக்கும் பழந்தமிழ் இலக்கியத் திங்களிதழான 'ஆனந்த போதினி'க்கும் கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக ஆசிரியப் பொறுப்பேற்று, இன்றளவும் தரங் குறையாமல் செம்மையுற நடத்திவருகின்றர் திரு. நாரண. துரைக்கண்ணன். இந்தப் பத்திரிகைகள் வாயிலாகவளரும் மறுமலர்ச்சி எழுத்தாளர் பலரை ஊக்குவித்து, புதிய புதிய கலை மணிகளையும், கவிஞர்களையும்

அறிமுகப்படுத்தியும் உருவாக்கியும், நாளும் நற்றமிழ் வளர்த்து வருகிறார். நாரண. துரைக்கண்ணன்.

24—8—1906 அன்று, களந்தை. நாராயணசாமியின் பெயர் விளங்க, திருமயிலையில் பிறந்தார் துரைக்கண்ணன். மழவிளம் பருவத்தே தந்தையை இழந்தார். இளமையிலேயே திருக்குறள் விளக்கம் கி. குப்புசாமி முதலியார் போன்றோரை ஆர்வமுடன் அணுகிப் பாடங் கேட்டு முறையாகத் தமிழறிவு பெற்றார். கலா நிலையம் டி. என். சேஷாசலம் முதலியோர் தொடர்பால் பாங்குடன் ஆங்கிலமும் கற்றார். குடும்பப் பொறுப்பேற்று, அச்சுத் திருத்தும் தொழிலிலே தம் வாழ்வைத் துவங்கிய இலக்கியச் செம்மல், அப்பொழுதே தமிழ் இலக்கியக் கழகம், இறைபணி மன்றம் போன்றவற்றின் செயலாளராகப் பொதுவாழ்வில் புகுந்தார்.

இவரது ஆழ்ந்த தமிழ்ப் புலமைக்கு உரமூட்டியவர் அறிவுக் கடல் மறைமலையடிகள். அத்துடன், தமிழ்ப்பெரியார் திரு. வி. க., பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார், மணி. திருநாவுக்கரசர் முதலியோருடன் நட்புரிமையோடு பழகும் பேறு பெற்றார் நாரண. துரைக்கண்ணன்.

அச்சுவாகனம் ஏறிய இவரது முதல் எழுத்தோவியம், 'கலைமகள் விழா' என்னுங் கட்டுரை "சுதேச மித்திரனில்" (24.9.1927) வெளியாயிற்று. அதைத் தொடர்ந்து கலா நிலையம், செந்தமிழ்ச் செல்வி, சித்தாந்தம், சிந்தாமணி, தமிழ்த்தென்றல், குடியரசு முதலிய இதழ்கள் இவரது கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தன. எழுத்தையே உயிர் மூச்சாகக் கொண்டு முழுநேரத் தொண்டாற்ற விழைந்த நா. து. க. அவர்களைத் தமது "லோகோபகாரி"யில் துணையாசிரியராக்கி, 1928–ல் முதலில் பயன் படுத்திக் கொண்டவர் பாரதியின் தோழரும் தேசபக்தருமான பரலி சு. நெல்லையப்பர். பின்னர் சதாவதானம் தெ. கிருஷ்ணசாமிப் பாவலரின் "தேசபந்து" இதழின் பொறுப்பாசிரியராகவும், மணி. திருநாவுக்கரசர் ஆசிரியராக இருந்த 'திராவிட'னில் 1930–ல் துணையாசிரியராகவும், 'இந்தியா' (முதலமைச்சர். பக்தவசலம் அவர்கள் நடத்தியது) 'தமிழ் நாடு', 'ஸ்வராஜ்யா' முதலிய பத்திரிகைகளில் சிறிது காலம் துணையாசிரியராகவும் இருந்து பத்திரிகைத் துறையில் புடமிட்ட பொன்னாகச் சுடர்வீசித் திகழ்ந்தார்.

அக்காலத்தில் ஈடிணையற்ற இலக்கிய இதழாக உலாவந்தது 'ஆனந்த போதினி'. சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை, முத்தமிழ் காவலர். கி. ஆ. பெ. விசுவநாதம் முதலியோர் தொடர்ந்து எழுதிப் புகழ்பெற்ற இவ்விதழின் ஆசிரியராக இருந்தவர், துப்பறியும் கதை மன்னர். ஆரணி. குப்புசாமி முதலியார். இத்துடன் பாமர ரஞ்சகமானதொரு பத்திரிகையைத் துவக்க விரும்பிய, இதன் உரிமையாளர், 1934–ல் 'பிரசண்ட விகடனை'த் துவக்கி, நாரண. துரைக்கண்ணன் அவர்களை அதன் ஆசிரியராக அமர்த்தினார். ஆரணியாரின் மறைவுக்குப் பின் சில நாட்கள் கழித்து, திரு. துரைக்கண்ணன் அவர்களே இரண்டு பத்திரிகைகளையும் கவனிக்க ஏற்பாடாயிற்று.

இவர் பத்திரிகையாசிரியராக இருந்ததனால், அரசியல் தலையங்கங்கள், கலை—இலக்கிய விமரிசனங்கள், பெரியோர் வாழ்க்கை வரலாறுகள் முதலிய பல்வேறு துறைகளிலும் எழுத வேண்டுவதாயிற்று. அத்துடன் தொடர்கதைகள் எழுதும் வாய்ப்பும் கிட்டியது. இவற்றுடன் சிறுகதை, நாடக வளர்ச்சியிலும் இவர் கவனம் செலுத்தினார்.

ஒவ்வொரு துறைக்கும், தனித்தனிப் புனைபெயர்களை வைத்துக் கொண்டார் துரைக்கண்ணன். 'பருந்துப் பார்வை' என்ற பகுதியில் 'வியோ' என்ற பெயரில் இவர் எழுதிய அரசியல் கட்டுரைகள் காந்தியத்தை அரண்செய்வனவாகவும், ஆகஸ்டு இயக்கம்போன்ற சுதந்திரப் போராட்டங்களுக்கு ஆதரவளிப்பனவாகவும் பெருந்தலைவரையும் இடித்துரைக்கும் துணையாகவும் அமைந்தன. சுருங்கச் சொன்னால், அரசியல் நாகரிகத்தைப் பேணி வளர்த்தது இவரது பேனா.

இவ்வாறு பழுத்த அரசியல்வாதியாக விளங்கிய 'வியோ' பழைய இலக்கியங்களை 'மைவண்ணன்' என்ற பெயரால் வழங்கி வந்தார். இவரது விருப்புவெறுப்பற்ற நடுநிலை குன்றா விமரிசனங்களைத் 'துலாம்' என்ற பெயருடன் வெளியிட்டார். 'தமிழை எப்படி எழுத வேண்டும்?' என்ற திறனாய்வுத் தொடர்மூலம், 'வேடிக்கைத் தமிழ்' விரும்பிகளுக்கு — மறுப்பளித்தது

நினைவுகூரத் தக்கதாகும். தமிழில் புலமை மிக்கவர்களால் புதுமை இலக்கியமும் படைக்க முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாகத் தாமே அமைந்ததுடன், இவரைப் பின்பற்றிப் பலரும் எழுதத் தூண்டுகோலாகவும் இவர் விளங்கினர். பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகத் துலங்கும் இவர் கரவற்ற நேர்மையால், பல சமயங்களில் இருபுறமும் இடர்ப் பட்டது முண்டு!

இனிய இசைப் பாடல்களையும், கவிதைகளையும் 'திருமயிலைக் கவிராயர்' 'களந்தைக் கிழார்' என்ற பெயரில் இவர் இயற்றியுள்ளார். வானொலியிலும், பல கவியரங்குகளிலும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் 'குயில்', 'கவிதை' முதலிய இதழ்களிலும் இவரது கவிமணங் கமழ்ந் திருக்கிறது! தமிழ் ஞாயிறு மறைமலை யடிகளார் இவர் கவிதை எழுதுவதை அறிந்து பாராட்டினலும், 'இவரைக் கவிதைகள் எழுத வேண்டாம்' என்று அன்புக் கட்டளை இட்டிருந்தாராம்! ஏன் தெரியுமா? 'தமிழில் பழைய கவிதைச் செல்வம் நிறைய உள்ளது. ஆனல், காலத்திற்கேற்ற உரை நடையும், கதை களும் இல்லை. எனவே, எதையும் இனிய உரைநடையிலேயே எழுத வேண்டும்' என்பது அடிகளார் கருத்து. இந்தக் கருத்தை வலியுறுத்தவே அவர் 'கோகி லாம்பாள் கடிதங்கள்' 'குமுதவல்லி' என்ற நாவல்களையும், சாகுந்தல நாடகத் தமிழாக் கத்தையும் புரிந்தார். ஆசிரியர் மறைமலை யடிகளாரின் வார்த்தைகளுக்குக் கட்டுப் பட்டே தாம் கவிதைத்துறையில் மேலும் முனைய வில்லையென்று ஒரு கவிதை நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிருர் தாரண. துரைக்கண்ணன்.

படைப்பிலக்கியங்களைத் தமக்கு மிகவும் பிடித்தமான 'ஜீவா' என்ற பெயராலேயே எழுதிப் புகழ்பெற்றுள் ளார் தாரண. துரைக்கண்ணன். முன்னர் குறிப்பிட்ட இரு நாவல்களுடன், 'கோகிலா' (கடிதம் விடுதூது), 'தியாகத் தழும்பு', 'தரங்கிணி' முதலிய இவரது நாவல்கள் படித்தோரின் இதயத்தை அலங் கரிப்பதைப்போலவே, ஒவ்வொருவர் இல் லத்திலும் இருந்து அணிபுரியவும் வேண்டியவை.

அரசியல் பின்னணியோடு இவர் எழுதியுள்ள, 'சீமான் சுயநலம்'— பாரதியைப் போன்ற தீர்க்கதரிசனத்துடன் எழுதப் பெற்றதாகும். கடும் எதிர்ப்பிற்கும், விவாதத்திற்கும் காரணமாக இருந்த நாவல் இது. இதில் வரும் 'நளினி' என்ற பாத்திரத்தைப் படிப்பவர் மறக்கவே முடியாது.

'காதலனா? காதகனா?' 'இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்' என்ற நாவல்களின் மூலம் கல்லூரி மாணவர்களிடையே தலை காட்டும் ஒழுக்கக்கேடுகளைச் சுட்டிக் காட்டி, அவைகளைக் களைவதற்கான வழி வகைகளையும் சுட்டிக் காட்டுகிருர் ஆசிரியர். 'யான் ஏன் பெண்ணுப் பிறந்தேன்?' என்ற நாவல் விதவைத் துயரை விவரிப் பது.

இவையேயின்றி ஆங்கிலத்தில் புகழ் பெற்ற சில நாவல்களையும் இவர் தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப மொழி பெயர்த்துள்ளார். டால்ஸ்டாயின் 'அன்னு கரீனு'வை 'சீமாட்டி கார்த்திகேயினி' என்ற பெயரில் இவர் தமிழாக்கியிருப்பது குறிப் பிடத்தக்கது. வில்லியம் ஷேக்ஸ்பியர் இயற்றியுள்ள (Rape of Lucrece) என்ற காவியத்தையும் 'கோன் ஆட்சியின் வீழ்ச்சி' என்ற பெயரில் தமிழாக்கம் புரிந் துள்ளார்.

இவர் தீட்டியுள்ள நாடகங்களில் 'உயிரோவியம்' மிகப்புகழ்பெற்றிருந்தாலும், 'தீண்டாதவர் யார்?' என்ற மற்ருெரு நாடகத்தைப்பற்றியும் குறிப்பிட வேண்டும். இது ஈ. வே. ரா. பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் இருந்த பிரபல தலைவர்களால் நடிக்கப்பெற்றது. கடல்கடந்தும் பரவியுள்ள இந்நாடகம் காந்தியடிகளின் ஹரிஜனப் பிரச் சாரம் ஆரம்பமாகுமுன்பே அரங்கேறியது. 1928–ல் டிராம்வே தொழிலாளர் சங்கத் திற்காக எழுதப் பெற்ற இது பாவேந்தர் பாரதிதாசனின் 'இரணியன்' நாடகத்தைப் போல் மக்களிடையே பரபரப்பூட்டியதா கும். மேல் சாதிப் பெண்ணொருத்தி, தாழ்த் தப்பட்ட இளைஞர் ஒருவரை மணந்ததால் ஏற்படும் அனுபவங்களையே கதைக் கருவாகக் கொண்டு இதில் ஆராய்கிருர் ஆசிரியர்.

'பார்வதி,' 'கவிஞனின் காதலி' 'ஜீவா வின் சிறுகதைகள்' முதலிய இவரது எட்டு

சிறுகதைத் தொகுதிகள் புத்தக உருவில் வெளிவந்துள்ளன. இன்னும் இளந்தலை முறையினருக்குப் படிக்கக் கிடைக்காத சிறுகதைகள் பலவும் நூலுருவில் வெளி வர இருக்கின்றன. கதைத் துறையில் இவர் வெற்றிகரமாகக் கையாண்டுள்ள பல்வேறு உத்திகளையும், நடைச் சிறப் பையும் கண்டு வியப்புறாதவர் இல்லை. இவரது 'வானம் வெளுக்கது' என்ற சிறு கதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 'சாகித்ய அக்காடமி'யினரின் சிறுகதைத் தொகுதியில்' இடம் பெற்றுள்ளது. தன்னி லும் வயதில் இளையவளுக்குத் திருமண மாகிக் குழந்தையுடன் வீட்டிற்கு வரும் பொழுது திருமணமாகாமல் இருக்கும் மூத்த சகோதரியின் மெல்லிய மனக் குமுறல்களை வானத்தில் நடக்கும் மேகத் திரையின் சித்திர விசித்திரப் பின்னணி யுடன் நயம்படக் காட்டும் அரிய சிறு கதை 'வானம் வெளுத்தது'. தெலுங்கு முதலிய பிற தென்னிந்திய மொழிகளிலும் இவரது சிறுகதைகள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

எழுத்தாளர் நலனைப் பாதுகாப்பதில் இவருக்குள்ள ஆர்வமும் அக்கறையும் இவரைத் 'தமிழ் எழுத்தாளர் சங்கம்' தோற்றுவிப்பதில் பங்கு கொள்ளச் செய்தது. தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சட்டதிட்டங் களை வகுப்பதிலிருந்து இன்றுவரை அதன் ஆலோசகர், செயற்குழு உறுப்பினர், துணைத் தலைவர் முதலிய பல பொறுப்புகளை இவர் ஏற்று சிறப்புறப் பணியாற்றி வருகின்றார்.

தமிழக எழுத்தாளர் சங்கத்திற்கு 1947–50 ஆம் ஆண்டுகளில் தலை வராகவும், முற்போக்கு எழுத்தாளர் சங்கத் திற்கு 1951–52ஆண்டுகளில் தலைவராகவும் இவர் இருந்திருக்கிறார். மற்றும் ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றத் தலைவர் (1957–58), தென்னிந்தியப் பத்திரிகையாளர் சம்மேள னம், சென்னை நாடகக் கழகம் முதலிய வற்றின் துணைத்தலைவர், செயற்குழு உறுப் பினர், நடராசா கல்விக் கழகப் பாதுகாவலர் போன்ற பதவிகளைப் பல்லாண்டுகள் இவர் திறம்பட ஏற்று நிர்வகித்துள்ளமை இவரது தொண்டுணர்ச்சியைக் காட்ட வல்லதாகும்.

'பாரதி விடுதலைக் கழகம்' என்ற ஓர் அமைப்பை நிறுவி, பாரதி பாடல்கள் பொதுவுடைமையாக வேண்டும் என்று கிளர்ச்சி செய்து, அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப் பாடுபட்டவர்களில் ஒருவர் நாரண துரைக்கண்ணன். அது மட்டுமன்றி எட்டையபுரத்தில் பாரதி மணிமண்டபம் ஏற்படுவதற்கு அமரர் கல்கியுடன் உறு துணையாயிருந்தவர் இவர். நாகர் கோயில் மூன்றாவது எழுத்தாளர் மாநாடு (14,15-5-48), கோவை மாவட்ட எழுத் தாளர் மாநாடு—முதலிய பல மாநாடு களுக்குத் தலைமைதாங்கி எழுத்தாளர் களுக்கு இலக்கியம் பற்றிய இனிய கருத் துக்களைத் தமக்கே உரிய அமைதியான முறையில் இவர் தெரிவித்துள்ளார்.

'தமிழிசை இயக்கம்' தழைக்கவும், தமிழில் 'கலைக் களஞ்சியம்,' அறிவியல், தொழில் நுட்ப நூல்கள் முதலியன வெளி வரவும் இவரது நாவும், பேனாவும் பெருந் தொண்டாற்றியுள்ளன என்றால் அது மிகை யாகாது. 1942–45-ஆம் ஆண்டுகளில் காந்தியடிகளின் கருத்துக்கு எதிராக இராஜாஜி நடத்திய பிரசாரத்தைக் கடுமை யாகக் கண்டித்து எழுதிய காந்தி பக்தரான இவரே, 'இராஜாஜியின் வாழ்க்கை வர லாறு' ஒன்றையும் முதன் முதல் நேர்த் தியாக எழுதி அவரது சீர்திருத்தத் தொண்டுகளைப் பாராட்டி யிருப்பது இவரது நேரிய நெஞ்சைப் புலப்படுத்துகிறது.

தோற்றத்தில் எளிமை, பழகுதற் கினிமை யுடைய நாரண. துரைக்கண்ணன் அவர்களுடன் அளவளாவி மகிழும் எவரும் இவரது பலதுறை அறிவையும், நினை வாற்றலையும், பெருந்தன்மையையும் காணத் தவறமாட்டார்கள். சென்ற ஆண்டு தமிழ் நாட்டு சங்கீத நாடக சங்கத்தினர் இவரது நாடகப் பணியைப் பாராட்டிப் பொற்பதக்கம் வழங்கிக் கௌரவித்தனர். செங்கற்பட்டு மாவட்டத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர், இவரது இலக்கியப் புலமை யைப் பாராட்டிக் கேடயம் வழங்கிச் சிறப் பித்தனர்.

இத்தகு வித்தகர்க்குத் தமிழ் எழுத் தாளர் சங்கம் இவ்வாண்டு கேடயம் வழங்கிப் போற்றுவது மகிழ்ச்சிக் குரிய பணியாகும். நவீன இலக்கியச்சிற்பி, நாரண. துரைக்கண்ணன் அவர்கள் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து, நந்தா விளக்காய் இலங்கிடச் செந்தமிழ்த்தாய் அருள் புரிவாளாக!

# கேடயங்கள் பெறும் தமிழ் அறிஞர்கள்



திரு. இராய. சொக்கலிங்கம்.



திரு. நாரண துரைக்கண்ணன்.



பதக்கம் பெறும் பிறமொழி அறிஞர்
திரு. ஜே. எம். சோமசுந்தரம்

# பதக்கம் பெறும் இரஷ்ய அறிஞர்



திரு. செமியோன் ரூடின் முதலியோர்

இதில் வலது கோடியில் அமர்ந்திருப்பவர் திரு. செமியோன் ரூடின் அவர்கள். அவருக்கு வலது பக்கம் அமர்ந்திருப்பவர் பேராசிரியர் திரு. இராம. மீனாட்சிசுந்தரம் அவர்கள். மற்றவர்கள் திரு. ரூடினிடம் தமிழ் பயிலும் மாணவர்கள்.

# ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

புலவர் கா. வெள்ளைவாரணன்

[தமிழ் ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.]

தமிழ் நாட்டில் தமது நிர்வாகத்திற்கு வந்த பழுதடைந்த திருக்கோயில்களைத் திருந்திய முறையிற் பழுதுபார்த்து அன்பர் பலரும் வந்து வணங்கி மகிழும் அழகுடைய திருக்கோயில்களாக மாற்றிய அறநிலையக் கண்காணிப்பாளர் ஒருவரைக் குறிப்பிட வேண்டுமானால், அவ்வகையில் முதலில் வைத்து எண்ணத்தக்கவர் நம் மதிப்பிற்குரிய திருவாளர் ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்களாவர்.

இவர் செந்தமிழும் சிவநெறியும் வளரப் பெரும்பணி புரிந்த தமிழ்க் குடும்பத்திலே தோன்றியவர். இவர் தந்தையார் டி. ஜே. மதுரநாயகம் பிள்ளை; தாயார் அகிலாண்டமம்மையார். பிறந்த ஊர் விருதுநகர். பிறந்த நாள் 28–2–1892. இவரது தந்தையார் மதுரநாயகம் பிள்ளை சென்னை அரசின் மருத்துவத் துறையிற் சேர்ந்து சிறந்த மருத்துவராகப் பணியாற்றியவர். திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்கள் சென்னையிலும், திருச்சிராப்பள்ளியிலும் கல்வி பயின்றார். சென்னைச் சட்டக் கல்லூரியிற் பயின்று வழக்கறிஞர் பட்டம் பெற்றார்.

சென்னையிற் கல்வி பயிலுங்கால் இவருக்குத் தமிழாசிரியராயிருந்து தமிழ் நூல்களில் ஆர்வத்தையுண்டாக்கியவர் தமிழ்ப் பெரும் புலவர் கா. நமச்சிவாய முதலியாரவர்களாவர். திருச்சிராப்பள்ளிக் கல்லூரியில் பயின்ற காலத்துப் பண்டித சவரிராய பிள்ளை, அமிர்தம் சுந்தரநாத பிள்ளை, நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஆகிய பெரும்புலவர்களிடம் பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களைப் பயின்றார். அதனால் அரிய தமிழ்ச் செய்யுட்களை ஆங்கிலத்தில் தெளிவாக மொழிபெயர்க்கும் திறன் இவர்பால் அமைவதாயிற்று.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நிரம்பிய தேர்ச்சியும், தென்னிந்திய வரலாற்றில் நல்ல பயிற்சியும், வழக்கறிஞராகிய சிறப்பும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற இவர், 1925–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தில் அறநிலையக் கண்காணிப்பாளர்களுள் ஒருவராக நியமிக்கப் பெற்றார். 1926 முதல் 1928வரை கோவை, சேலம், நீலகிரி ஆகிய மாவட்டங்களிலும், 1928 முதல் 1933வரை அழகர் கோயில் தேவத்தானத்திலும், 1933 முதல் 1940வரை தஞ்சையரசர் ஆட்சிக்குரிய திருக்கோயில்களிலும், 1940முதல் 1944வரை பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி தேவத்தானத்திலும், 1944, 1945–இல் திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவத்தானத்திலும், 1945–1946–இல் சிக்கல் ஸ்ரீ நவநீத சுவாமி தேவத்தானத்திலும், 1946–47இல் திருவரங்கம் ஸ்ரீ அரங்கநாத சுவாமி தேவத்தானத்திலும் நிர்வாக அதிகாரியாக அமர்ந்து ஆற்றிய அரும்பணிகள் தமிழ் வளர்ச்சிக்கும், சைவ–வைணவ சமய வளர்ச்சிக்கும், தமிழ் நாட்டு வரலாற்றுக் கலை வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தனவென்பது அறிஞர் பலரும் அறிந்த செய்தியாகும்.

இவர் தாம் பணி புரிந்த திருக்கோயில்களில் நாள் வழிபாடும், திருவிழாக்களும் ஆகம முறையில் சிறப்புற நிகழ்வதற்கும், வழிபட வரும் அன்பர்கள் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளின் பெருமையை உணர்ந்து வழிபாட்டின் பயனைப் பெறுதற்கும் ஏற்ற வகையில் அவ்வத் திருக்கோயில்களின் வரலாறுகளைச் சிறுசிறு நூல்களாக அவ்வப்பொழுது எழுதி வெளியிட்டுவருதலைத் தமது கடமையாகக் கொண்டார். கோயில்களின் நிதி வசதியை மேன்மேலும் பெருக்கினார். வழிபட வரும் அன்பர்களாகிய செல்வர்களைக் கொண்டு அவரவர்க்கேற்ற திருப்பணியை விருப்புடன் செய்யத் தூண்டினார். அறநிலையக் கண்

காணிப்பாளராகிய இப்பணி இவர்கட்குப் பொருள் வளர்ச்சியில் போதிய செதியை அக் காலத்தில் செய்யவில்லை எனினும், தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல நூல்கள் பலவற்றை எழுதி வெளியிடுதற்கேற்ப இவர் தம் வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்ததெனக் கூறுதல் பொருந்தும்.

வழிபட வருவோர் உள்ளே நுழைவதற்கு அஞ்சும் நிலையிலிருந்த தஞ்சைப் பெரிய கோயிலைக் கலை வளர்ச்சியில் கருத்துடைய அன்பர் பலரும் மகிழ்ந்து போற்றி வழிபடும் முறையில் அத்திருக்கோயிலில் மின்விளக்கு முதலிய வசதிகளைச் செய்தது டன், முதலாம் இராசராசன் தான் பெற்ற வெற்றிக்கு அடையாளமாக எடுப்பித்த அத் திருக்கோயிலின் வரலாற்றைப் பலரும் அறியத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிப்படுத்தினர். தஞ்சையில் மராட்டிய மன்னர் பதின்மரது ஆட்சிக் காலத்துக் கணக்குகள் 'மோடி' என்னும் மொழியில் எழுதப் பெற்றுத் தஞ்சை அரண்மனையில் இருந்த செய்தியை அரசாங்கத்தார்க்கு அறிவித்து, அம் மொழியினை நன்கு தெரிந்த அறிஞராக எஞ்சியிருந்த ஒருவரைக் கொண்டு அதன் இயல்பினை வெளிப்படுத்திப் புதைபொருளாராய்ச்சித் துறையினரைக்கொண்டு அக்கணக்குகளைப் பாதுகாக்க வழிசெய்தவர் திரு.பிள்ளையவர்களேயாவர். கி.பி.1832-ஆம் ஆண்டுவரை தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் ஆட்சியில் 125 ஆண்டுகளில் எழுதப்பெற்ற இக் கணக்குகள் அக்காலத்து மக்களது பொருளாதார நிலையினையும், மராட்டிய மன்னர்களின் ஆட்சிமுறை, வாழ்க்கை முறை ஆகியவற்றையும் அறிந்து கொள்ளுவதற்கு மிகவும் பயன்படுவனவாகும். தஞ்சை அரண்மனைத் தேவத் தானத்திலுள்ள பல கோயில்களும் இவர் காலத்தில் மின்விளக்கு அமைக்கப்பெற்றன. தஞ்சைப் பெரிய கோவில், தாராசுரம் திருக்கோயில் ஆகியவற்றின் தொன்மையும் கலை வளமும் ஆகிய சிறப்புக்களைச் சென்னை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் உணரும்படி செய்து, அவ்விரு கோயில்களும் இக்காலத்தில் இந்திய அரசின் பாதுகாப்பில் வளம்பெறுமாறு செய்து, மேற்படி திருக்கோயில்களின் ஓவியக்கலையினையும் சிற்பக் கலையினையும் பாதுகாத்த பெருமை இவருக்கு உரியதாகும்.

தஞ்சைக் கோட்டையின்மீதிருந்த 36 அடி நீளமுள்ள பீஜப்பூர் பீரங்கியை உடைத்து ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்ய முயன்றபொழுது, அதனை அரசாங்கத்தாரைக் கொண்டு தடுத்து நிறுத்தி, அப் பீரங்கியையும், அது வைக்கப்பெற்ற கோட்டைப் பகுதியையும் இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்பின்கீழ்க் கொண்டுவரத் தூண்டியவரும் இவரே. இவர் தஞ்சையிற் பணிபுரிந்தபொழுது, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராய்த் தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டார். 31-7-1938-முதல் 12-5-1940-வரை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் அமைச்சர் பதவியை ஏற்றுச் சிறந்த முறையில் தமிழ்த் தொண்டு புரிந்தமை குறிப்பிடத் தக்கதாகும். தஞ்சையில் இருந்த காலத்து இவரால் ஆராய்ந்து எழுதப்பெற்ற "சோழர் கோயிற் பணிகள்" என்னும் ஆராய்ச்சி நூல் சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் பலமுறை பாடமாக வைக்கப்பெற்ற தனிச் சிறப்புடையது.

இவர்கள் பழநித் திருக்கோயிலின் நிர்வாக அதிகாரியாக இருந்தபொழுது, அத் திருக்கோயிலில் சிறப்புடைய திருப்பணிகள் பல நிறைவேறியுள்ளன. பழநித் திருமலையில் ஏறிச் செல்லும் அன்பர்கள் வெயிலிலும் மழையிலும் துன்புறுது, இடையிடையே இளைப்பாறும் முறையில், அன்பர் பலரைக் கொண்டு வழிநடைப் பாதையில் பதினொரு மண்டபங்களை எழுப்பினர். இக் கோயிலில் மின்விளக்கு வசதியும், நூல்நிலையமும், நல்ல தண்ணீர் குழாயமைப்பும் இவர் காலத்து ஏற்பட்டனவே. இவரது அரிய முயற்சியால் 1941இல் பழநித் திருக்கோயிலுக்குச் சிறந்த முறையில் கும்பாபிஷேகம் ஒன்று நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும், திருமுறைப் பாராயணமும் நிகழ்வனவாயின. பழநித் தல வரலாறும், 'பழநிப் பள்ளு' 'பழநிப் பிள்ளைத் தமிழ்' ஆகிய நூல்களும் வெளியிடப்பட்டன.

திருச்செந்தூர்க் கோபுரத் திருப்பணி மேலும் தொடர்ந்து நிறைவுபெறுதற்கு ஏற்ற முயற்சிகள் இவரால் மேற்கொள்ளப் பட்டன.

1948முதல் 52வரை சென்னைத் தமிழிசைச் சங்கத்தில் பணிபுரியும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இவர் தமிழிசைச் சங்கத்தின் சார்பில் தமிழிசைப் பள்ளியினைச்

சிறப்புற நடத்துவதற்கும், தமிழிசை இயக்கத் தந்தை செட்டி நாட்டரசர் இராஜா சர் அண்ணாமலை வள்ளல் அவர்களது குறிக்கோள் நிறைவேறத் தமிழ் நாட்டின் தலைநகராகிய சென்னை நகரில் 'இராஜா அண்ணாமலை மன்றம்' தோன்று தற்கும் உரிய முயற்சிகளில் உடனிருந்து உதவிசெய்தார்கள்.

1952முதல் அண்ணாமலைப் பல்கலைக் கழக நூல் வெளியீட்டதிகாரியாக இருந்து, பல்கலைக் கழகச் சார்பில் சிறந்த பல நூல்களை வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

திரு. பிள்ளையவர்கள் தென்னாட்டு வரலாறு, தமிழ் மன்னர் ஆட்சி முறை, திருக்கோயில் வரலாறு, ஓவியம் சிற்பம் முதலியவற்றின் கலைச் சிறப்பு, தமிழிலக்கியம் ஆகிய பொருள்கள் பற்றித் தமிழிலும், ஆங்கிலத்திலும் அவ்வப்பொழுது எழுதியுதவிய கட்டுரைகளும் நூல்களும் பலவாகும். அவற்றுள்,

1. The Great Temple at Tanjore
2. Palani - the Sacred Hill of Muruga
3. Five Tamil Idylls of Pathuppattu
4. Tiruchendur - the Sea-shore Temple of Subrahmaniya
5. A Plan for Tiruchendur
6. Two Thousands year of Tamil Literature

என்பவை குறிக்கத்தக்கன. இவர் பழநியிலிருந்த காலத்து, திருப்பாதிரிப்புலியூர் சிவத்திரு. ஞானியார் சுவாமிகளை அழைத்துப் பழநித் திருக்கோயிலில் பல விரிவுரைகள் நிகழ ஏற்பாடு செய்தார். இவரைக் குறித்து அருள்மிகு ஞானியாரடிகள் கூறிய பொருளுரைகள் இவரது தெய்வ பக்தியையும், சமயத் தொண்டின் சிறப்பினையும் நன்கு புலப்படுத்துவனவாம். 'திருவாளர் ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்கள் தம் ஆற்றலையும், அறிவினையும் நன்கு செலுத்திச் செய்ய வேண்டுவனவற்றைத் திறம்படச் செய்துவருகிறார்கள்; ஆலயம் பற்றிய சமயத் தொண்டினையும் கவனித்து முறையே நடத்துகின்றார்கள். இவர்கள் கல்வியும் அறிவும் ஆற்றலும் அதிசயிக்கத் தக்கவை. இவர்களோடு ஆலயம் பற்றிப் பேசி மகிழ்ந்தோம்' என்பது ஞானியாரடிகள் திரு. பிள்ளையவர்களைப் பற்றி மகிழ்ந்து கூறியதாகும்.

திரு. பிள்ளையவர்கள் 1934 முதல் நம் நாட்டு வரலாறு பற்றியும், கீழ்த்திசைக் கலை, பண்பாடு முதலியன பற்றியும் நாட்டின் பல்வேறிடங்களில் நிகழ்ந்த மாநாடுகளில் கலந்துகொண்டுள்ளார். விசய நகர மன்னரின் அறுநூறாவது ஆண்டு விழாவாக 1936இல் ஹம்பியில் நிகழ்ந்த மாநாட்டில் இவர் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. அகில இந்தியக் கீழ்த்திசைக் கலை மாநாடுகளில் கலந்துகொள்ளத் திருவனந்தபுரம், நாகபுரி, இலட்சுமணபுரி, டில்லி, ஐதராபாத்து முதலிய இடங்களுக்குச் சென்றுவந்தமையும், உச்சயினி, எல்லோரா, அஜந்தா முதலிய வரலாற்றுச் சிறப்புடைய இடங்களைக் கண்டு வந்தமையும், யாழ்ப்பாணம், கொழும்பு, அநுராதபுரம் முதலிய இடங்களுக்குச் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தமையும் கலை வளர்ச்சியில் இவருக்குள்ள பேரார்வத்தைப் புலப்படுத்தும் நிகழ்ச்சிகளாகும்.

அகில இந்திய எழுத்தாளர் பேரவையின் உறுப்பினராகிப் பம்பாய், சென்னை மாநாடுகளில் இவர்கள் கலந்துகொண்டமை எழுத்தாளர்களின் வளர்ச்சியில் இவர்கள் கொண்ட பெருவிருப்பத்தைப் புலப்படுத்தும். சென்னையில் உள்ள தமிழ் எழுத்தாளர் சங்கம் தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அவற்றின் பெருமையை உலகத்துக்கு அறிவித்து வரும் இப் பெரியாருக்கு இவ்வாண்டு பதக்கம் அளித்துப் பாராட்டுவது மிக்க மகிழ்ச்சிக்குரிய ஒரு செயலாகும். இப் பெரியார் நம்மிடையே இன்னும் நீண்ட காலம் வாழ்ந்து தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரக் கூத்தப்பெருமான் அருள்வாராக!

# பேராசிரியர் செமியோன் ரூதின் (செம்பியன்)

பண்டித இராம. மீனாட்சிசுந்தரம் பிள்ளை

[தமிழ் விரிவுரையாளர், வேளாண்மைக் கல்லூரி, கோயம்புத்தூர்]

வேற்றவரையும் நமக்கு ஏற்றவராகச் செய்துகொள்ள உதவுவது கலையுணர்வே. கலைபலவற்றுள்ளும் தலையாயது இலக்கியம். இலக்கியத்தை எழிலுற இயக்குவது மொழியறிவு. இதனை முழுவதும் உணரும் முற்போக்கு நாட்டினர், பல நாட்டு மொழிகளையும் பயில்வதுடன் நில்லாது அவ்வம் மொழிகளின் துணைகொண்டு தம் நாட்டுப் பண்பாடு, கலை, அரசியல் முதலியவற்றைப் பிறர்பால் உய்த்துத் தம் வயப்படுத்த முனைகின்றனர். சோவியத்து நாட்டினர் இத்துறையில் கைதேர்ந்தவர். தமது முயற்சிக்கு உதவும் வகையில் நட்பு நாட்டவரது கூட்டுறவினையும் நாடிப் பெறுவர். இத்தகு ஏற்பாடாகவே 1956–ஆம் ஆண்டு செப்டம்பர்திங்களில் தில்லிமாநகரில் அரசாங்கச் சார்பில் ஒரு நேர்முகத் தேர்வு நடந்தது. சோவியத்து ஒன்றியத் தலைநகராம் மாஸ்க்வாவில் தங்கி வானொலி வாயிலாக அந்நாட்டவர்தம் செய்திகளைத் தமிழர்க்குத் தெரிவிக்கும் பணிக்காக வானொலி வாசகர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க அது நடந்தது.

தேர்வாளருள் ஒருவராகக் காலஞ்சென்ற டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள் வீற்றிருந்தார். அவர் என்னிடம் கேள்வியொன்று தொடுத்தார், "ஆசிரியராகிய நீங்கள் மாஸ்க்வாவில் வானொலியில் பேசுவதுடன் அமைதி கொள்வீர்களா?" என்பதே அது. அதற்கு மறுமொழி தந்த யான்,

"ஒல்லும்வா யெலாம் தமிழ்ப்பணி
ஓவாதே
செல்லும்வா யெலாம் செயல்"

என்னும் குறிக்கோளோடு தான் வெளிநாடு செல்ல விழைகின்றேன்" என்றேன். அதனைக் கேட்டதும் மகிழ்ந்த அவர், 'ரஷ்யாவில்தமிழறிந்தவர்கள் இருக்கின்றனர். லெனின் கிராடில் ஓர் இளைஞரைச் சந்தித்தேன். தமிழில் பேசினார். 'பரமார்த்த குரு கதை'யினைப் பக்கம் பக்கமாக ஒப்பித்துக் கொண்டேயிருந்தார். இன்னும் பலபேர் இருக்கலாம். சென்று தமிழைப் பரப்புக" என்று ஊக்கினார். சோவியத் ஒன்றியத்தைப் பற்றி நான் படித்து அறிந்திருந்தவற்றுள் இந்தச் செய்தி கிடைத்திலாமை எனக்குப் பெருவியப்பாக இருந்தது.

1957, மார்ச்சு 12-ஆம் நாள் மாஸ்க்வா சென்றேன். வெளிநாட்டு மொழி வெளியீட்டகத்திலும், கீழைக்கலைக்கல்லூரியிலும் தமிழ் படிக்க முயன்றுவந்த இரண்டொருவர்மட்டிலும் நல்ல தேர்ச்சி பெறுதவராய் எழுத்துமட்டும் கற்றவராய் இருந்தைக் கண்டேன். டாக்டர் கிருஷ்ணன் சுட்டிய இளைஞர்பற்றித் தெரிந்துகொள்ள முயன்ற காலைச்சரிவர விவரம் கிடைத்திலது. ஆனால், நினையாதமுன் வந்து நேர் நின்றார் அவ்விளைஞர், ஒருநாள். ஆம்; ஆறு திங்கட்குப் பின்னர்தான்!

(Z) ஸுபாவ்ஸ்கி புலிவார் என்னும் தெருவில் உள்ள வெளியீட்டகத்திற்கு ஒருநாள் பிற்பகல் இரண்டு மணியளவில் சென்றேன். நெடிய உருவமுடைய இளைஞர் ஒருவர் வாயிலில் நின்று, கைகூப்பி இன்முகத்துடன் வரவேற்றார். கைகூப்பல் கண்டு வியந்தேன். அது புதுமையன்றோ அந்நாட்டில்! அத்துடன் 'வணக்கம்' என்றும் சொன்னார். என் மகிழ்ச்சி எல்லை கடந்தது; மற்றைய அலுவல்களை மறந்தேன்; அவருடன் அளவளாவினேன்.

மாஸ்க்வாவிற்கு வடக்கே 600 கிலோ மீட்டர் தொலையிலுள்ளது லெனின்கிராடு என்னும் எழில் நகரம். அங்குள்ள பல்கலைக் கழகத்துக் கீழைக்கலைப் பிரிவில் இந்தியும் தமிழும் பயிற்றும் பேராசிரியர்,

செமியோன் ரூதின் என்னும் பெயரினர். தமிழர் ஒருவரைக்கூடக் கண்டு பழகாத வேளையிலேயே தாமே அரிதின் முயன்று தமிழ்மொழியைக் கற்றுத் தேர்ச்சி பெற்ற தக்கார் அவர்; அம்மொழியின் ஆன்ற பெருமையுணர்ந்து, அதன்பால் ஆராக்காதலும் பெருமதிப்பும் வைத்தவர். இத்தனை சேதியையும் அவர் நல்ல தமிழிலே சொல்லக் கேட்டுத் தெரிந்தேன். அமுதம் மாந்தியவரினும் அதிகம் மகிழ்ச்சி யெய்தினேன். ஏன்? ஏறத்தாழ உலகில் வடகோடிக்கு தனிமிகு அண்மைத்தே உள்ள ஊரினர் தமிழிலல்லவா பேசினர்! அது மட்டுமா? தமிழர் எனப்படுவார் பலரும், சிறப்பு நிலையிற் கற்றோருங்கூட, நற்றமிழில் பேசுதற்கு நாணும் காட்சியில் பழகியிருந்த எனக்கு அவரது செந்தமிழ் உரையாடல் இன்பத்தேனகவே இனித்தது. மாஸ்க்வாவில் பணியாற்றத் தமிழர் ஒருவர் வந்துள்ளார் எனக் கேட்டு, நூற்றுக் கணக்கான கல் தொலைவினையும் கருதாது காணும் வேட்கை மீதூர ஓடோடியும் வந்திருந்த அவரது தமிழ்க் காதலின் திறம் உன்னி மகிழ்ந்து மதிப்பதற்குரியதன்றோ!

அந்நாள் முழுதும் அவர் என்னுடனேயே இருந்தார். என் இடத்திற்குக் கூட்டிச்சென்று விருந்தயர்ந்து-ஆம், மொழி விருந்துதான்—உவப்பத் தலைக்கூடி யிருந்தேன். முழுதும் நற்றமிழிலேயே உரையாடினோம். அவரிடமிருந்து பல செய்திகள் தெரிந்தேன். பழந்தமிழ்ப் பால் அயின்றுப் பசியாறினேன் என்றால் சற்றும் மிகையாகாது.

ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு இலத்தீன், இந்தி, வங்காளி, மலையாளம், தமிழ் முதலிய பலமொழி வல்லுனர் இந்த உருசியர் ரூதின். பல்கலைக்கழகத்தே இந்தி மொழிப் பேராசிரியராகப் பணியாற்றினர். "ருசி—இந்தி அகராதி" ஒன்று தொகுத்துளளார். அதற்கு முன்னுரையாகவும், இந்தி மொழியியல் ஆராய்ச்சியாகவும் 120 பக்கத்திற்கு மேலாக அழகிய முறையில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இவர் வலுவிற் கற்றது தமிழ். எவ்வாறு?

1926—ஆம் ஆண்டுக்கு முன்னரேயே மொர்வார்ட் என்னும் உருசிய இளைஞர் ஒருவர் பேச்சுத் தமிழுக்கு துணை நூல் ஒன்று தம் மொழியில் எழுதியுள்ளார். அதனையும், போப்பையர், வீரமாமுனிவர், கால்டுவெல் முதலியவர்தம் இலக்கண — இலக்கியங்களையும் கருவியாகக் கொண்டு, தமது சலியா உழைப்பையே ஆசிரியராகவும் ஆர்வத்தைத் தோழராகவும் கொண்டு, இந்தியத் தென்னகத்துத் தமிழினைத் தேனெனத் தேர்ந்து மாந்திக் கற்றுள்ளார் வடகோடி உருசியர் ரூதின். மொழியின் ஒலியுருவினைச் சற்றும் வழுவின்றி அறிந்திருக்கும் அவரது திறமைகண்டு அவர்பால் பெருமதிப்புக் கொண்டேன். பேசிப் பழகுதற்கு ஆளற்ற ஒருவர்க்கு இத்தகு திறமை வருவதெனின், அது தெய்வ சங்கற்பந்தான்.

என்னைச் சந்திப்பதற்குமுன் வேறு எந்தத் தமிழருடனும் நன்கு அளவளாவியதில்லை என்று சொல்லித் தம்மை என் மாணவராகக் கருதுமாறும் வேண்டினர். பன்மொழிப் புலவரான அவரது அடக்கம் கண்டு வியந்தேன். அவருக்குச் 'செம்பியன்' என்னும் தமிழ்ப் பெயர் பொருத்தமாகும் என்றேன். அதனைத் தீக்ஷாநாமம்போன்று விரும்பி ஏற்று, அன்று முதல் இன்று வரை தமிழில் கடிதம் எழுதும் போதெல்லாம் 'செம்பியன்' என்றே கையெழுத்திடுகின்றார். எனக்கு மட்டுமன்று; கடந்த ஏழாண்டுகளில் அவர் சந்தித்த தமிழரிடத்தெல்லாம் தன்னைச் 'செம்பியன்' என்றே அறிமுகம் செய்து கொள்கின்றார். "செந்தமிழ்ச் செல்வி"யில் வெளியானது ஒரு கடிதம். "ஆனந்த விகடனில்" இன்னொன்று வந்தது. இவையிரண்டும் நான் இந்தியா திரும்பிய பின்னர் எழுதப் பெற்றவை. இவை இரண்டிலும் அவர் 'செம்பியன்' என்றே கையொப்பம் இட்டுள்ளார். தமிழ் நெஞ்சங் கொண்டவர் அல்லரோ!

தமிழகத்துப் பழக்கங்களையும் பண்பாட்டினையும் போற்றிப் பின்பற்றவும் விழைகின்றார் அவர். அவரது மனைவி பெயர் (Z) ஸீனு. அந்த அம்மை உதட்டுச்சாயம் பூசுதலைத் தவிர்க்குமாறு வற்புறுத்துகிறார் செம்பியன்; பொட்டு வைத்துக் கொள்ளுமாறும் தூண்டுகிறார்! ஆணவம் அறவே இல்லாதவராய்த் தமிழ்ப் பண்பாடாம் அடக்கத்தின் தலை நிற்கிறார். மீதூண்

விரும்பார்; மீதூண் மிசையும் உருசியப் பழக்கத்தைக் குறையெனக் கழறுகிருர். மொழி பயிலுதல், இலக்கியம் துய்த்தல், அறிவு பெருக்குதல், அமைதி கொள்ளுதல் இவை தவிர ஆரவாரச் செய்திகளில் நாட்டம் செலுத்திலர். நான் சோவியத்து ஒன்றியத்தில் இருந்த சில ஆண்டுக் காலத்தில் இன்னும் சிலர் தமிழ் பயில முனைந்தனர். அன்னுர் தம் நோக்கமெல்லாம் அரசியலும், சமயச் சாடுதலும் குறிக்கொண்டது. ஆனல், அங்ஙனமின்றித் தமிழ் குறியாகப் பயில்பவர், பயிற்றுபவர் செம்பியன். 'தமிழே தலைமொழி' என்று தேர்ந்துணர்ந்து தமிழுக்காகவே பயில்பவர்.

தமிழில் சில கதைகளைப் படித்தும் தமிழகத்தில் சிலருடன் பழகித் திரிந்தும் ஒரு சில குறுகிய நோக்கினர் எழுதியிருக்கும் இரண்டோர் இலக்கிய வரலாற்றினைப் படித்தும், தம்நாடு திரும்பியதும் தமிழைக் கைவரக் கற்றவராகத் தருக்கித் தாறுமாருக உருசிய மொழியில் தமிழ்மொழி பற்றிக் கட்டுரை எழுதியும் கதைத்தும் திரியும் உருசியர் இரண்டொருவரையும் எனக்குத் தெரியும். அன்னுர் மொழியாழங் காணுதவராதலின், அருமையறியாது பிதற்றுகின்றனர். ஆனல், ருதின் மொழியில் மூழ்கியவர். 'தமிழ், தனிச் செம்மொழி; வேறு எந்தவகைத் துணையுமின்றிச் செம்மாந்து இயங்கி, முற்ற வளர்ந்தும் கன்னிமை மாருத கன்னல் மொழி; சங்கத் தமிழ் ஏற்றம் உடையது; தமிழை இலக்கண வரம்பு கடவாது எழுதுதலும் பேசுதலும் வேண்டும்; அதனை கொச்சையாகக் கற்கக்கூடாது' என்னும் துணிபு உடையவர் அவர்.

தமிழகத்திலிருந்து அங்கு வந்த ஆசிரியை ஒருவர் 'அதாவது' 'வந்து', 'என்னன்னு', 'சொல்லச்சே' முதலிய சொற்களை இடையிடையே கலந்து பேசித் தமிழைச் சிதைக்கின்ருர் என்று மனங் கவன்று எனக்குக் கடிதம் எழுதினுர் செம்பியன். தமிழ் நலம் பேணும் தக்கார் அல்லரோ!

1960 செப்டம்பரில் மாஸ்க்வாவில் நிகழ்ந்த "25–ஆவது அனைத்து நாட்டுக் கீழைக் கலை அறிஞர் மாநாட்டில்" (XXV International Orientalogists' Congress), 'தமிழ்ச் சங்கம்' என்ற ஒன்று கிறித்துவச் சகாப்தத்திற்குமுன்பு இருந்ததே கிடையாது என்று சிலர் உண்மையுணராமல் பேச நேர்ந்தது. அக்காலை அங்கிருந்த செம்பியன் மனம் வெதும்பினர்; சீற்றமும் கொண்டார். ஆனல், பிரதிநிதியாக அன்றி பார்வையாளராக மட்டும் வந்திருந்த காரணத்தால் மறுத்துப் பேச வாய்ப்பின்மையால், மனம் மறுகினுர்.

தற்போது தமிழ்மொழி ஒன்றினையே பயின்று வருகின்ருர் அவர். சங்க இலக்கியம் முதல் எல்லாவற்றையும் பயில்கின்ருர். லெனின்கிராடு பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பகுதி நிறுவி அதற்குத் தலைமை ஆசானுகத் திகழ்கின்ருர். பாடத்திட்டமும் எளிதாக அன்றிக் கடியதாகவே வைத்துள்ளார். நான் கூடத் தயங்கினேன். ஆனல், அவரது மறுமொழி என்ன தெரியுமா? "விளையாட்டுப் படிப்பாகிவிடக் கூடாது. எங்கள் மாணவர்க்குப் பாடமாக வைத்துவிட்டால், எவ்வளவு கடுமையாயினும் எதனையும் நன்ருகப் பயின்று விடுவர்" என்ருர்.

பாடம் நடத்துவதிலும் மிக்க கண்டிப்புடையவர் அவர். ஒருமுறை நான் லெனின்கிராடு சென்றிருந்தேன். நூலகத்தில் தமிழ்ச்சுவடிகள் காணும் ஆவலைத் தெரிவித்தேன். என்னையழைத்துச் சென்று நூலகத்தாரிடம் அறிமுகம் செய்ததும், உடனே போய்விட்டார். காரணம் பின்னர்தான் புரிந்தது. அன்று நன்னூல் சூத்திரங்களில் மாணவர்க்குத் தேர்வு வைத்திருந்தாராம். என் வருகையின்போது மாணவர்க்கு மிகுதியான ஊக்கம் பிறத்தல் வேண்டும் என்னும் கருத்தில் தேர்வு நடத்தியதாகச் சொன்னுர். (அன்று எடுக்கப்பட்ட நிழற்படந்தான் இம்மலரில் வெளியிடப்பட்டுள்ளது.) ஒரே ஆசிரியர் இருந்துகொண்டு நான்காண்டுப் பட்டப் படிப்புக்குரிய பாடங்களையும் நடத்திச் சமாளிக்கிருர். நம் தமிழகத்திலும் நடவாத சாதனை என்றல் மிகையாகாது.

தமிழகம் போந்து புலவர்களை நேரில் கண்டு பழகும் வேட்கை மிகுதியாகக் கொண்டுள்ளார் அவர். அவரை அழைத்து வந்து நம் தமிழகத்திற்கு அறிமுகம் செய்யும் முயற்சியிலும் இறங்கினேன். ஆனல், நம்

நாடுபோன்று வேண்டியாங்கு இயங்குதற்கு உரிமைபெற இயலாத நாடாகையால், அந்த வாய்ப்பு அவர்க்கு இன்னுங் கிட்டிலது. எனினும், அவரது மாணவியர் இருவர் தமிழகத்துக்கு வந்து தங்கிப் பயின்று மீண்டுள்ளனர். சென்னைப் பல்கலைக் கழகத்தே ஓராண்டு தங்கியிருந்த இஸ்பெல்லா கந்ராச் சேவா என்ற தங்கை 24—9—1963 இல் பொள்ளாச்சியில் பெருங் கூட்டமொன்றில் தமிழில் பேசி மக்களை வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தினர். அது கேட்டு அவரது ஆசிரியர் செம்பியன் வந்தது போன்றே மகிழ்ந்தேன். காலஞ் சென்ற பாவேந்தர் பாரதிதாசன் எல்லையற்ற எக்களிப்புடன் அவரது பேச்சுகளைப் பாராட்டினர். ஆண்டுதோறும் பல மாணவ மாணவிகளுக்குத் தமிழ் பயிற்றுவித்து வருகிறார் பேராசிரியர் செம்பியன்.

என்னைத் தமது ஆசிரியராக மதித்து அடிக்கடி கடிதம் எழுதிவந்தார். நல்ல சொற்களையே பயன்படுத்தித் தூய தமிழில் அவர் எழுதியுள்ள கடிதங்கள் பல என்னிடம் உள்ளன. ஒலி வடிவத் தூய்மையுடன் மட்டுமன்றி வரிவடிவச் செம்மையும் அழகுபொலிய எழுதியிருக்கிறார். 'சோவியத் யூனியன்' என்பதற்கு 'சோவியத் ஒன்றியம்' என்னும் மொழி பெயர்ப்பை அவருக்கு அறிவித்தேன். ஏற்புடையதான அதனைப் பாராட்டி அவ்வாறே எழுதி வருகின்றார். 'யூனியன்' என்பதற்கு 'ஒன்றியம்' சரியானது என்பதைத் திரு. செம்பியன் கடிதம் வழி அறிந்த திரு. இராமலிங்கனார் அவர்கள் 'செந்தமிழ்ச் செல்வி' இதழிலே ஒரு பாராட்டுக் கட்டுரையே எழுதியுள்ளார்.

கூர்த்த மதி கொண்டவர் ருதின். எனவே, உயர்ந்த மொழிபெயர்ப்பாளர். சோவியத் ஒன்றியத்தில் பல மொழிகளிலும் அகராதி வெளியிடுகின்ற பழக்கம் உண்டு. அதன்படி "தமிழ் – ருஷிய அகராதி" வெளியிடப்பட்டது. 38,000 சொற்களைக் கொண்ட அதனை உருவாக்கியதில் பெரும் பங்கு தமது பேராசிரியர் செம்பியனையே சாரும். அவருடைய கண்காணிப்பில் நல்ல பல சொற்கள் சேர்க்கப்பெற்று நல்ல பல குறிப்புகளுடன் வெளியாகியுள்ளது அந்த அகராதி. தமிழினை முறையாகப் பயிலாத உருசியரும் தமது மொழிக் கூற்றுக்களைத் தமிழில் பெயர்த்தலுக்கு நல்ல துணையாகப் பயன்படுகிறது அந்த அகராதி. தமிழ் எழுத்து மட்டிலும் தெரிந்த உருசியர் தமிழ்ச் சுவடிகளைத் தாமே படித்துப் புரிந்து கொள்ளுவதற்கு இந்த அகராதி பெரிதும் துணையாக உதவும் தரத்தது.

நான் சோவியத்து ஒன்றியத்தில் வாழ்ந்த காலத்தில், வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் என்னுடன் கலந்து பழகி, என் சொற்பொழிவுகளின்போதும் உடனிருந்து ஊக்கி உதவினர். அதன் பிறகு கடந்த ஏழாண்டுக் காலமாக இந்தியாவிலிருந்து சோவியத்து ஒன்றியத்துக்குச் செல்லும் தமிழர் யாராயிருப்பினும் லெனின்கிராடில் அவர்களைத் தமிழ் நெஞ்சுரிமையுடன் வரவேற்றுத் தமிழறியா மொழி பெயர் தேயத்தில் தமிழில் அளவளாவி அவர்களை மனமகிழச்செய்து இன்பூட்டியுய்க்கின்றார் என்பதைப் பலரும் சொல்ல அறிந்திருக்கின்றேன்.

மாஸ்க்வா வானொலி வாயிலாக யாண்டுதோறும் செப்டம்பர் 11–ஆம் நாளிலும், ஜனவரி, 14–ஆம் நாளிலும் தவறாமல், நான் அங்கிருந்த காலத்தில், நல்ல தமிழிலேயே பாரதி பற்றியும் தமிழ்விழாப் பற்றியும் அவர் ஆறு ஏழு முறை பேசியுள்ளார். தமது மாணவரையும் பேசவும் பாடவும் செய்துள்ளார். அப்பேச்சுகளில் 'எந்தமிழ்' என்றும், 'எங்கள் பாரதி' என்றும் உரிமை முழக்கம் செய்துள்ள பேராசிரியர் செம்பியன் அவர்கள் காடும், யாறும், மலையும், நாடும் இடைப்பட்ட சேணெடுந் தொலையிலுள்ளவராயினும், உணர்ச்சியால் தமிழர்; புலமையால் தமிழ்ப் பேராசிரியர்; பேச்சால் பேருரையாளர்; செயலால் தமிழ்த் தொண்டர்; தொண்டால் தமிழ்க் காவலர்; வேற்று நாட்டிலே நம் தமிழன்னைக்கு ஏற்றம் தேடும் எழுத்தாளர். எனவே, உலகின் வடகோடியில் வாழும் நம் தமிழ் எழுத்தாளரைப் பாராட்டி சிறப்புச்செய்ய நம் சென்னை எழுத்தாளர் சங்கம் முன் வந்தது சாலப் பொருத்த முடையது. இறைவன் இன்னருளால் இன்னும் பல்லாண்டு செம்மையுடனிருந்து முட்டின்றித் தமிழ்ப்பணி புரிக பேராசிரியர் செம்பியன்!

அதிகமான மக்கள்
சேமித்து இலாபமடைகிறார்கள்

"பாங்க் ஆப் மதுரை லிமிடெட்
சேமிப்புக் கணக்கு"

$3\frac{1}{2}\%$

வட்டி

தினசரி இருப்பின்பேரில் அளிக்கிறது

* கணக்கு துவக்குவதற்கு வேண்டிய குறைந்தபட்சத் தொகை ரூ. 5/-
* வங்கி வழங்கும் செக்குகளின் மூலம் வாரம் ஒன்றுக்கு ரூ. 5,000/- வரை கணக்கிலிருந்து திரும்பப் பெறலாம்.

நீங்களும் ஏன் இன்றே ஒரு கணக்கைத்
துவக்கக் கூடாது?

இயக்குநர்குழு

திரு கருமுத்து தியாகராசன்—தலைவர்

திரு உ. ராம. மெ. சுப. சேவு. அ. அண்ணாமலை செட்டியார்

திரு ந. சொ. அரு. அருணாசலன் செட்டியார்

திரு பி. கு. நா. கும. வயிரவன் செட்டியார்

திரு K. திருமலைசாமி ஐயர்

திரு I. A. சிதம்பரம் பிள்ளை

T. K. ராமசுப்பிரமணியம்,
காரியதரிசி.

பாங்க் ஆப் மதுரை லிட்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : 82-83, கீழ ஆவணி மூலவீதி, மதுரை.

# தமிழகமும் நானும்

**விஷ்ணுபாத பட்டாச்சார்ஜீ**

[டாக்டர் விஷ்ணுபாத பட்டாச்சார்யா எம். ஏ. அவர்கள் வங்காள நாட்டவர். வங்காள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். இவர் தமிழ் மொழியையுங் கற்றவர். இப்போது அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியியில் துறைப் பகுதியில் ரீடராக இருக்கிருர். இவர் பன்மொழிப் புலவர். அஸ்ஸாமி, ஓரியா, இந்தி, உருது, பஞ்சாபி, குஜராத்தி, மராத்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சம்ஸ்கிருத மொழிகளையும் அறிந்தவர். இந்திய நாட்டு மொழிகளைக் கற்பதும் சுற்றுப் பிரயாணஞ் செய்வதும் இவருடைய விருப்பமான பொழுதுபோக்காகும். கிழக்குப் பாகிஸ்தானில் பரிசல் மாவட்டத்தில் 1918இல் பிறந்தவர். இவர் தமிழில் எழுதிய கட்டுரை இது.]

ஏறக்குறைய ஏழு ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1957 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நான் முதல் தடவையாகத் தமிழ் நாட்டுக்கு வந்திருந்தேன். அப்போது ஒரு வாரம் தங்கினேன். அதுவே நான் தமிழ் நாட்டுடன் ஏற்படுத்திக் கொண்ட முதல் அறிமுகம்.

தமிழ் நாட்டைச் சுற்றிப்பார்த்த பின்னர் நான் என் அனுபவங்களை எனது தாய்மொழியாகிய வங்கமொழியில் ஓர் 'இன்பச் செலவு' நூலாக வெளியிட்டேன். அப்பிரயாண நூலின் இறுதிப் பகுதியில் நான் பின்கண்டவாறு எழுதியிருக்கிறேன் :-

"தமிழகமே ! விடைபெறுகின்றேன். நான் இன்னும் வருவேன்; அடிக்கடி வருவேன் உன்னிடம். பண்பாட்டிலும் கலையிலும் இலக்கியத்திலும் நீ மிகவும் பழமை பெற்றுள்ளாய். உன் மண்ணில் பிறந்தவர்கள் திருவள்ளுவர், ஔவையார், கம்பர், பாரதியார், ஆழ்வார், நாயன்மார் ஆகிய பெரியோர்கள். உன் மார்பில் பல கற்கோயில்களும் குகைக் கோயில்களும் எழுந்துள்ளன ; வானத்தைத் தொடுகின்ற கோபுரங்கள் தோன்றியுள்ளன. உன் காலடியில் நடராஜருடைய ஊழிக்கால நடனம் ; உன் குரலில் தேவாரமும் திருவாசகமும். உன்னை அறிந்து கொள்வதற்குச் சில நாட்கள் போதா. நான் பார்த்தவை சில ; ஆனால் பார்க்க வேண்டியவை பல. நான் அறிந்தவை சில ; ஆனால் அறிந்து கொள்ள வேண்டியவை பல.

தமிழகமே ! நான்போய் வருகிறேன். ஆனால், என் மனத்தை உன்னுடைய மண்ணில், பனை-தென்னை மரங்களின் குளிர்ந்த நிழலில், பரந்த கடற்கரையில், காவிரி—தாமிரவருணி ஆற்றின் படிகளில், காடு-மலை—வயல்களில் விட்டுச் செல்கிறேன்."

மேற்கண்ட என்னுடைய இறுதிச் சொற்களில் உணர்ச்சி இருக்கலாம். ஆனால் "உயர்வு நவிற்சி" (exaggeration) இல்லை. நான் தமிழ் நாட்டில் இருந்தது ஒரு வார காலந்தான். ஆனால், தமிழகத்தைப் பற்றிய ஆர்வந்தான் என் உள்ளத்தில் வளர்ந்து வருகின்றது. பின்னர் நான் பணிபுரியும் கல்கத்தாவிற்குத் திரும்பிச் சென்றேன். நான் கல்கத்தாவில் இருந்த போதிலும் தமிழ்நாட்டிற்குச் சென்று தங்கியிருக்கவேண்டும் என்ற ஆசையே என் உள்ளத்தில் அதிகரித்தது. நான் பார்த்த வற்றினும் அதிகமாகப் பார்க்க வேண்டியுள்ளது ; நான் அறிந்தவற்றினும் அதிகமாக அறிந்து கொள்ளவேண்டியுள்ளது.

இவ்வாறு ஆறு ஆண்டுகள் கழிந்தன. இப்பொழுது நான் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறையில் (Linguistics Department) வங்கமொழி இலக்கியத்தின் ரீடராகப் (Reader) பணிபுரிகின்றேன். என்னை இங்கே அமர்த்திய பல்கலைக் கழகத்தாருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கிருந்து போவதற்கு முன்னர் நான் இரண்டு முக்கியப் பணிகளை முடிக்க விரும்புகிறேன் :— (1) தமிழ் மாணவர்களுக்கு வங்கமொழியில் நல்ல பயிற்சி கொடுத்து வங்க இலக்கியத்தை நன்கு புரிந்துகொள்ளச் செய்வது (2) நான் தமிழை நன்கு கற்றுத் தமிழர் பண்பாட்டையும், தமிழகத்தையும் புரிந்துகொள்வது.

தற்பொழுது வங்கத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே அரசியலிலும், சமயத் துறையிலும்தாம் தொடர்பு காண முடிகின்றது; இலக்கியத் துறையில் மிகவும் குறைந்த அளவு தொடர்பே உள்ளது. சுவாமி விவேகானந்தர் தமது புகழொளியை உலகிற்குப் பரப்பச் சென்னை மக்கள் பேருதவி புரிந்தார்கள் என்பது யாவரும் அறிந்ததே. திரு. அரவிந்தர் புதுச்சேரியில் இருந்தபொழுது, சுப்பிரமணிய பாரதியாருக்கும் அவருக்கும் இருந்த தொடர்பினைத் தமிழகம் நன்கு அறியும். தாகூர் போன்ற வங்கப் பெருமக்களது இலக்கியம் தமிழகத்திற்குப் புதிதல்ல.

தமிழகத்தை இவ்வாறு அறிந்து கொள்வது வங்க மக்களின் கடமை ஆகும். வங்காளிகளில் ஒரு சிலராவது தமிழை நன்கு கற்றுத் தமிழை வங்க மக்களுக்குப் போதித்துத் தமிழ் நாட்டுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்த வேண்டும். இதற்குப் பெருமுயற்சி தேவை.

ஆங்கில மொழியின் வாயிலாகத் திருக்குறள் வங்காள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. டாக்டர் சுனீதிகுமார் சாட்டர்ஜீ அவர்கள் ஒரு சில கட்டுரைகளில் தமிழகத்தை அறிமுகப் படுத்தியுள்ளார். வைணவத் துறவியாகிய ஸ்ரீ யதீந்திரா இராமானுஜதாஸ் அவர்கள் திருப்பாவையையும், திருவாய்மொழியையும் வங்கமொழியில் மொழிபெயர்த்துள்ளார். தகுதியில்லாத நானும் ஓரளவு இத்துறையில் முயல்கின்றேன். ஆனால் இவையெல்லாம் தனிப்பட்ட மனிதர்களது சொந்த முயற்சியே. நமது அரசாங்கம் இத்துறையில் பணி புரிவோர்க்கு உதவிசெய்ய வேண்டும்.

# பம்மல் சம்பந்தர்

**பெரி. சிவனடியான்**

[தமிழ் விரிவுரையாளர், காரைக்குடி.]

இயலிசையோ டிணைந்த தமிழ் நாட கத்தை
இந்நாட்டார் மறந்திருந்த காலந் தோன்றி
உயிருட்ட முன்வந்தான் ஒருவன்; ''பம்மல்''
ஊர்தந்த தமிழ்இளைஞன்; ஒளியின் [செல்வன்;
அயராமல் இரவதனைப் பகல்போ லாக்கி
அருந்தமிழில் நாடகங்கள் அமைத்துத் [தந்தான்,
பெயர்பொருளில் நாட்டமிலாப் [பேர றிஞன்
பிறர்புகழுக் குரியவனாய் வாழ்ந்த செம்மல்

நாடகத்துத் தந்தையென நாட்டோ ரெல்லாம்
நாவாரப் புகழ்கின்ற நிலையைப் பெற்றும்
வீடகத்துக் குமரியென அடக்க மாக
விளங்கியநற் றிருக்குமரன், எளிமை [மிக்கான்
நாடகத்துப் புதுநிலவாய் ''மனோக ராவை''
நம்மெதிரே படைத்தஅருங் கரங்கள் [கொண்டான்
ஏடகத்தில் அவனுருவைக் காணச் சொல்லி
இன்றெங்கே ஒளிந்தானோ? சொல்வீர் ! [சொல்வீர் !

நாடகங்கள் நலிகின்ற நிலை யுணர்ந்தோ
நாமிருக்கக் கூடாதென் றோடி விட்டான் ?
தேடரிய முத்தமிழைச்சித்தி ரம்போல்
சிற்றரங்கில் காட்டியவன் சென்றதெங்கே?
பாடல்பெறும் சம்பந்தன் பழங்கள் கொண்டு
படைப்பதற்குச் சங்கரதாஸ் சாமி முன்னர்
ஆடலினிப் போதுமென ஓடி விட்டான்;
அவனடியை நாம்பணிந்து வாழ்வோம் ! [வாழ்வோம் !

——( o )——

# தென்னுப்பிரிக்காவில் தமிழர்கள்

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம்

தென்னுப்பிரிக்கா தேசம் மலைப் பிரதேசமும் மேடும் பள்ளமும் மிகுந்ததொரு நாடு. ஆனுலும், அது இயற்கை வளம் மிகுந்து எழிற்போர்வை போர்த்தி யொளிர் கின்றது. நெல்லும், கரும்பும், கோதுமை யும், பயிர்களும் நிமிர்ந்து நின்று வளர்ந்து அந்நாட்டில் உணவுப் பஞ்சம் சிறிதும் இன்றி மக்களின் வயிற்றை நிரப்பி மனத் தைக் களிப்பித்து வருகின்றன. ஆனுல், இந்நிலைமைக்கு முழுக் காரணமாயிருந்த வர்கள் அந்நாட்டுச் சுதேசிக் கறுப்பரும் அல்லர்; விதேசி வெள்ளையரும் அல்லர். அந்நாட்டுச் சர்க்காரால் பிரியப்பட்டுப் பல முறைகள் நம் இந்திய சர்க்கார் மூலம் பிடி வாதமாக அழைக்கப்பட்டுக் கடைசியாக 1860ம் ஆண்டில் சென்னைத் துறைமுகத்தி லிருந்து புறப்பட்ட கப்பல் ஒன்றில் ஏறி டர்பன் துறைமுகத்தில் 1860ம் ஆண்டு நவம்பர் மாதம் பதினுரும் தேதி சென்று இறங்கிய நம் தமிழ் மக்களாலும், அவர்க்குப் பின் வேறு சில கப்பல்களில் சென்று இறங் கிய தமிழர்களாலும், ஒரு சில குஜராத்தியர், இந்தி மொழியினராலும், அவர்களது பின் சந்ததியினராலும்தாம் முன்பு பாலைவனமாக இருந்த அந்நாடு சோலைவனமாகவும், பயிர் தழைத்துப் பரிமளிக்காத அந்நாடு பல உயிர்தழைத்திட்டு ஓங்கி நிற்கவும் இயன்றது. இன்றைய தென்னுப்பிரிக்காவின் நிலச்செழிப்பும் நலக்கொழிப்பும் அந்நாள் தமிழரின் பலக்கொழுப்பாலும் குலத்தழைப் பாலும் ஒத்துழைப்பாலும் உருப்பெற்று ஓங்கி வளர்ந்து நிலவுகின்றன எனின் மிகை யாகாது. எனவே, வயிற்றுப் பிழைப்புக்கு வழியின்றிப் பிறநாட்டில் பயிற்றுப் பிழைப்பைச் செய்தாகிலும் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று தென்னுப்பிரிக்காவிற்குத் தமிழர்கள் செல்லவில்லை அன்று. உழைப் பிற் சிறந்தமைக்காக அவ்வரசாங்கம் விடுத்த அழைப்பிற் கிணங்கி அங்குச் சென்று, பிழைப்பிற் சிறந்தவராகி இன்று தழைப்பில் சிறந்தும் விளங்குகின்றவர் அத்தமிழர்.

ஒரு நூற்றுண்டுக்குள் அத்தமிழரின் வாழ்க்கை முறையில் நினைக்கமுடியாத மாறுதல்களும் முன்னேற்றமும் புரட்சிகளும் நிகழ்ந்துள்ளன. நாலுமுழ வேட்டியும் தடித்ததொரு 'கோட்டும்', தலை மயிரும் தலைப்பாகையும் மெதுவாக ஒவ்வொரு தலை முறையாக மறைந்து, இன்றையதினம், காலங்கி, ஷர்ட்டு, டை, கோட்டு, ஹாட்டு, பூட்டு, கிராப்பு தலைஆகிய மேனுட்டு நடை, உடை, பாவனை முழுவதும் தென்னுப்பிரிக்க தமிழர்களை ஆட்கொண்டு அலங்கரிக் கின்றன. ஆலயங்களில் பூசை செய்யும் பூசாரிகள் அவ்வப்போது தமது காலங்கி யைச் சுற்றி ஒரு நாலுமுழ வேட்டியைத் தட்டுச் சுற்ருகக் கட்டி, அதைக் கயிற்றினுல் இறுகப் பிணைத்து நகைப்பிற்கிடமான வகை யில் நடமாடுவதைத் தவிர, சில திருமணப் புரோகிதர்களும் இவ்வாறு உடுத்துவதைத் தவிரத் தமிழர்களில் ஆண் மக்கள் அனை வரும் ஆங்கில உடையிலேதான் நடமாடு கின்றனர்.

ஆனுல், அந்நாட்டுத் தமிழ்ப்பெண்கள் இன்னும் இந்நாட்டுத் தமிழ்ப் பண்பைத் தமது ஆடையலங்காரங்களிலும் கைவிட்டு விடவில்லை. அவர்களுக்கே உரிய கவர்ச்சி கரமான உடலுடனும், கூந்தல் அலங்காரத் துடனும் அவர்கள் நமது நாட்டுப் பெண் களின் புடவைகளையும், ஜாக்கட்டுகளையும் தாம் வெகு நாகரீகமாக அணிந்து இலக்குமி போன்று காட்சியளிக்கின்றனர். ஆனுல், அவர்களிடம் கிழக்கும் மேற்கும் கொண் டுள்ள வழக்கும் வாழ்க்கைமுறையும் சங்கம மாகித் தழைத்து அவர்களுக்கு என்றே ஒரு தனிப் பொலிவையும் சுவைமிக்க காம் பீரியத்தையும் வழங்கி மெருகேற்றியுள்ளன. அந்தத் தாய்மார்களெல்லாம் எந்த ஆண்

மகனையும் கைகுலுக்கிப் புன்முறுவல் சிந்தி வரவேற்கத் தவறுவதும் இல்லை; அதைத் தவருக நினைப்பதும் இல்லை. ஆனுல், அடுத்த விநாடியே "வணக்கம்" என்ற தனித் தமிழ் வரவேற்பை வழங்குதலையும் மறப்பதில்லை. அவர்கள் கூடிய அளவு தமிழிற் பேசத் தவிக்கிருர்கள். அன்னைத் தமிழை அரவணைத்து ஆர்வத்துடன் பேசும் அவர்களது தமிழ் நமது சென்னைத் தமிழை யொத்திருக்கின்றது. அத்துடன் கூட ஒரு விதச் சிறிய இழுப்பு, ஒரு கவர்ச்சிகரமான கொச்சை மணம், இவைகள் கலந்து தென்னுப்பிரிக்கத் தமிழ்த்தாய் ஆருயிரம் மைல்களுக் கப்பால் அன்ன நடையிட்டு அன்புடன் வாழ்கிருள். ஆனுல் அவர்கள் ஆங்கிலம் பேசினுல், ஆங்கில மாதரும் ஆச்சரியப்படுமாறு அதே தொனி, வேகம், உச்சரிப்பு, பாவனை, அனுயாசம் முதலிய வற்றுடன் பேசி இன்பமூட்டுவர். நானும் பலமுறை பிரமித்துள்ளேன்.

விருந்தினரை உபசரிப்பதில், உணவு வகைகள் செய்து பரிமாறுவதில், பரிவுடன் வற்புறுத்தி உணவு ஊட்டுவதில் அந் நாட்டுத் தமிழ்த் தாய்மார்கள் நம் நாட்டினரைவிடக் கொஞ்சம் அதிகமான தரத்தினர்கள் எனக் கூறின், அது மிகை யாகாது. நம் நாட்டுப் பெண்களது கூச்சம் அங்கே இல்லாமையே இதற்குக் காரணம்.

இருபத்தைந்து வயதுக்குட்பட்ட பெண்கள் பொதுவாகவும், திருமணமாகாத பெண்கள் சிறப்பாகவும் ஆங்கிலேயர்களின் 'கௌன்' அணிந்து, ஆங்கில மாதரின் கூந்தல் அலங்காரம் செய்துகொண்டு, ஆங்கிலத்தையே தாய்—தந்தை மொழியாகக் கொண்டு பேசி, தமிழ் மொழிப் பயிற்சி யின்மையின் அதை அறவே புறக்கணித்து ஆங்கிலத் திரைப் படங்களையே பார்த்து அனுபவித்து, இடையருது வானொலியின் ஆங்கிலக் கதைகள், நாடகங்கள், பாடல்கள் ஆகியவற்றையே சலியாது கேட்டு, தாமும் சதாசர்வகாலம் ஆங்கிலப் பாடல்களையே முணுமுணுத்து நடமாடுவது விபரீதக் காட்சியா வியப்புக்குரியதா அல்லது விதி யின் விளையாட்டா என்பதற்கு என்னுல் விடையிறுக்க இயலவில்லை.

இன்றைய இளம் தமிழ் வாலிபரின் நிலை இதைவிட மேனுட்டு மோகத்தில் முன்னேற்றமுடையதாகும். இந்த வரும் தலைமுறையரின் போக்கைப் பார்ப்பவர்க்கு அந்நாட்டின் தமிழ்மொழியின் எதிர்காலம் நம்பிக்கையூட்டுவதாகவே இல்லை. சர்க்கார் திட்டப்படி பள்ளிக்கூடங்களில் தமிழுக்குச் சிறிதுகூட இடமில்லை. தனியார் பிரத்தியேக மாகத் தமிழ் கற்பிக்கும் பள்ளிகளோ வெகு சிலவே; அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் மாணவர் தொகைமிகமிகச் சிறிது.

இன்று, துரதிருஷ்ட வசமாக நமது தமிழ் மக்களிலும் மாணவர்களிலும் பெரும் பாலானவர்களைப் பீடித்துள்ள மொழி நோய் தவருன உச்சரிப்புத்தான். இந்தத் தொத்து நோய் அந்நாட்டு மக்களிடம் இன்னும் அதிகமாகவே பரவியுள்ளது.

"உளகௌாம் உணர்ந் தோதற்கரியவண்
நிளவுளாவிய நிர்மளி வேனியன்"

இதுதான் அவர்களது கடவுள் வாழ்த்து. எழுத்துப் பிரித்துப் படிக்கத் தெரியாமை யினுலே "ஓசை யொளி யெளா மாணுய் நீயே" என்றுதான் அனைவரும் பாடுகின் றனர். பழிப்பதற்கு இதை நான் எழுத வில்லை; உண்மையை மக்கள் அறிவதற் காகவேதான்.

சமீப காலத்துச் சட்டம் ஒன்றின் காரணமாக, அந்நாட்டுத் தமிழர்கள் இந்தியாவிலுள்ள பெண்களைத் திருமணம் செய்து அழைத்துச் செல்ல இயலாது. ஆதலால், அவர்கள் வேறு வழியின்றித் தம்முள் கலப்பு மணம் செய்ய முற்பட்டு அதுவே இயற்கையாகியும் வந்துவிட்டது. ஐந்து பெண்களையுடையதொரு கவுண்ட ருக்கு, முதலி, செட்டி, பத்தர், பிள்ளை, நாயுடு என்ற ஐவகைச் சாதியின் மருமகன்மார் அமைவது சர்வ சாதாரணம். ஆதலால் அந்த அளவுக்குச் சாதியை ஒழித்துவிட்டனர் அத்தமிழர். ஆனுல், தமது சாதிப்பெயரை வெகுகெட்டியாகப் பிடித்துக் கொண்டுள்ளனர். நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களின் இயற்பெயரே நமக்குத்தெரியாது. எஸ். ஏ. பத்தர், வி. எஸ். ஐயர், எஸ். எம். நாடார், கே. எம். பிள்ளை எம். பி. நாயுடு, எஸ். கே. மூட்லி (முதலி) என்றுதான் வழங்குகின்றன அவர்களது பெயர்கள். இத்துடன், ஜேக் நாயுடு, மேக்கே, ஜியார்ஜ், ஜான்ராமன், வில்லி அமிர்தம், ஜோசபைன் பார்வதி என்று

ஆண்களும் பெண்களும் முறையே கிறித்துவ முதற்பெயரோடு அழைக்கப் படுவதும் உண்டு.

இன்று தென்னுப்பிரிக்காவிலுள்ள சுமார் ஐந்து லட்சம் இந்திய மக்களில் ஏறக்குறைய இரண்டரை லட்சம் பேர் தமிழர்கள். இவர்களில் பெரும்பாலோர் டர்பன் நகரில்தான் உள்ளனர். ஏனையோர் நெட்டால் மாகாணத்தின் ஏனைய பகுதி களிலும், டிரான்ஸ்வால் மாகாணத்திலும் குடியிருக்கின்றனர். இவர்களில் மிகப் பெரும்பாலோர் இந்துக்கள்தான். அநேக மாக ஒவ்வொரு நகரத்திலும் சிற்றூரிலும் சிவன், விஷ்ணு, முருகன், கண்ணன் இராமன், காளி, மாரியம்மன் முதலிய சகல தெய்வங்களுக்கோ அல்லது ஒரு சில வற்றிற்கோ ஆலயங்கள் உள்ளன. காவடி யெடுத்தலுக்கு இந்நாட்டில் அதிக மதிப்பும் பெருமையும் உண்டு. தீ மிதித்தலும் அநேக ஊர்களில் நடைபெறுகின்றன. வெள்ளையர்கள் பலர் இதைப் பாராட்டிப் பங்கும் கொள்கின்றனர். மாரியம்மனுக்கு ஆடு, கோழி முதலிய உயிர்கள் ஆயிரக் கணக்கில் ஆண்டுதோறும் பலியிடப்பட்டு வருகின்றன.

ஒவ்வோர் ஊரிலும் வார வழிபாட்டுச் சங்கம், திங்கள் திருச்சபை, வள்ளலார் சபை முதலிய பஜனை வழிபாட்டுக் கழகங் கள் உள்ளன. அமாவாசை, கார்த்திகை, ஏகாதசி முதலிய மாதாந்தர நன்னுட்களை யும், சோம வாரம், சுக்கிர வாரம், சனி வாரம் முதலிய வாராந்திர நாட்களையும், பொங்கல், தீபாவளி, ஆருத்ரா, ஏகாதசி, வருடப்பிறப்பு முதலிய ஆண்டு விழாக்களை யும் வெகு விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர். ஒவ்வொருவரும் தமது ஒவ்வொரு பிறந்த தின விழாவினை கேக், காண்டில் முதலியவற்றுடன் கிறிஸ்துவப் பாணியிலேதான் கொண்டாடுகின்றனர். கிறிஸ்துமஸ் பண்டிகை தமிழ்ப் பண்டிகை யைப் போலவே மிகமிகக் குதூகலத்துடன் கொண்டாடப் படுகின்றது. ஆண்கள் எல்லாரும் ஆலயத்தில் காலணியை மட்டும் கழற்றிவிட்டுச் சென்று வழிபடுகின்றனர். பூசாரிகளுக்குப் பூசை செய்யத் தெரியாது.

அரசியல் உத்தியோகங்கள் அறவே மறுக்கப்பட்டுள்ள தமிழர்கள் ஏனைய இந்தி யர்களைப் போலவே, வாணிபம், வைத்தியம், ஆசிரியர் தொழில், விவசாயம் முதலிய வற்றில் தலைசிறந்து விளங்குகின்றனர். இப்போதுள்ள ஆண், பெண் குழந்தை கள் அனைவரும் பள்ளிக்குச் சென்று கல்வி பயில்கின்றனர். அங்குள்ள தமிழர்கள் அனைவரும் இன்னுங்கூட நமது தமிழகத்தைத்தான் தாயகமாகக் கருதிப் பெருமையடைகின்றனர். ஒவ்வொருவரும் தம் வாழ்வில் ஒரு முறையாவது பாரத நாடு வந்து போகத் துடிக்கின்றனர். ஒரு சிலருக்கே இது வாய்க்கின்றது.

நம்மிடம் உள்ள சில குறைபாடுகளும் அவர்களிடம் உள்ளன. கட்டுப்பாடும் ஒற்றுமையும் இல்லை. பல பிளவுகளும் போட்டியுணர்ச்சியும் உள்ளன. குடிப் பழக்கமுங் கூட அங்குச் சற்று அதிகம் தான். ஏழை மக்களும் உள்ளனர். ஆனாலும், தென்னுப்பிரிக்கத் தமிழர்கள் அனைவரும் தமிழ் நாகரீகத்திற் பெருமை கொண்டு, இன்று அந் நாட்டினரின் மதிப்பைப் பெற்று நன்கு வாழ்ந்து வரு கின்றனர் என்பதில் மட்டும் சந்தேகமே இல்லை!

## நன்றி விருத்தம்

அழிகின்ற புவனம் சமைக்கின்ற பிரமனும்
ஆதிநான் முகனவனினும்
ஆற்றல்மிக வுடையராய் அழியாத [புவனங்கள்
அழகுமிக வே படைத்தும்
பழிநின்று பிரமன்செய் பாத்திரம் போலாது
பண்பரும் பார் மன்னரும்
பார்த்துப் படித்துச் சுவைத்துப் பல்காலமும்
பாராட்டி மகிழுவண்ணம்
பொழிகின்ற மையினுல் பொருள்செய்
தம் கையினுல்
பொலிவுமிகு பாத்திரங்கள்
பொற்புடனமைக்கின்ற கற்புடனுழைக் [கின்ற
பொற்றமிழ் எழுத்தாளர்தம்
செழிகின்ற சென்னைத் திருச்சங்கம் [அடியனேன்
செய்ததொரு சிறு தொண்டினைச்
சீராட்டியும் பரிசு பாராட்டியும் தந்த
செந்தமிழ் வழக்கு வாழ்!

# கல்கத்தா தேசிய நூலகம்

கே. சுப்பிரமணியன்

[நூலகர், டி. ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா நிறுவனம்—அம்பத்தூர்]

இந்தியா சுதந்திரம் அடைந்ததும் நாடெங்கணும் வெடித்தெழுந்த ஆர்வத்தால் உந்தப்படாத, வளர்ச்சியடையாத துறையே இல்லை எனலாம். நூலகத் துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இதனால்தான், தற்போது நாட்டின் பெரிய நகரங்களில் மட்டுமல்லாது, சிறு நகரங்களிலும் பட்டி தொட்டிகளிலும் நூலகங்களையும், கிளை நூலகங்களையும், நூல்வழங்கு நிலையங்களை யும், இயங்கு நூலகம் செயற்படும் இடங் களையும் காண்கிறோம். தற்போது நம் நாட்டில் உள்ள நூலகங்களில் தலைசிறந்த நூலகம் கல்கத்தாவில் உள்ள தேசிய நூல் நிலையம். எப்படியோ செயற்பட்டுவந்த நூலகத்தைச் சீர்ப்படுத்தி மேலும் மேலும் வளர்ந்தோங்கும் வண்ணம் " இம்பீரியல் நூல்நிலையம் " என்ற பெயரில் அமைத்த பெருமை கர்சன் பிரபுவைச் சாரும். யூனியன் ஜாக் பறந்த இடத்தில் மூவர்ணக் கொடி பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கிய போது, இந்நூலகம் தேசிய நூலகமாக மாற்றியமைக்கப் பட்டது. பல ஆங்கிலேய கவர்னர் ஜெனரல்களுக்குக் குளிர்கால மாளிகையாகப் பயன்பட்ட விசாலமான, அமைதியின் உறைவிடமாம் பெல்விடியர் (Belvedere) மாளிகையில், தேசிய நூல் நிலையத்தை அமைப்பதற்குத் திரு. பி. எஸ். கேசவன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறக் காரணமாய் அமைந்தவர் அப்போது கவர்னர் ஜெனரலாகப் பணி யாற்றிய தமது இராஜாஜி அவர்கள்தான். வெளிநாட்டவரும் கண்டு வியக்கும் வண்ணம், உலகத்தின் சிறந்த நூல் நிலையங் களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்க நிலைக்கு இந்நூலகத்தை உயர்த்திய பெருமை திரு. பி. எஸ். கேசவன் அவர் களைச் சாரும். இந் நூலகத்தின் வளர்ச்சியே தமது மூச்சு என்று 15 ஆண்டுகளுக்கு மேல் இதன் தலைவராக இருந்து அரும் பெருந் தொண்டாற்றியவர் அவர். அவரது ஆர்வத்தின் பயனை இப்போது இந் நூலகத்தில் காண முடிகிறது.

இந்நூலகத்தில் ஏறத்தாழ 12 இலட்சம் நூல்கள் உள்ளன. நம் நாட்டில் வெளியாகும் எல்லா மொழி நூல்களும், மாத, வார, நாள் ஏடுகளும் — சுருங்கச் சொன்னால் அச் சேறும் எதுவும்—இங்கு வந்து சேர்கின்றன. எண்ணற்ற கையெழுத்துப் பிரதிகளும், ஓலைச் சுவடிகளும் இங்கு உள்ளன; சிறந்த பிறமொழி நூல்களும், சஞ்சிகைகளும் இங்கே உள்ளன; சுமார் 7000 சஞ்சிகைகள் இங்கே உள்ளன. யுனெஸ்கோவின் எல்லா வெளியீடுகளும் இங்கே கிடைக் கின்றன. (சென்னை கன்னிமாரா நூலகத் திலும் யுனெஸ்கோ வெளியீடுகள் அனைத் தும் கிடைக்கின்றன.) இதுமட்டுமல்லாமல், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, சர் அசு தோஷ் முகர்ஜி, சர் ஜாதுநாத் சர்க்கார், சென், புஹார் போன்றோர் அன்பளிப்பாகத் தந்துள்ள ஒப்பற்ற கலைச் செல்வங்களும் இங்கே உள்ளன. பேராசிரியர்கள், மாண வர்கள், வணிகர்கள், வெளிநாட்டு ஆராய்ச்சி யாளர்கள் வாழ்க்கையின் எண்ணற்ற துறை களில் உள்ளோரும் இங்கு வந்து படித்துப் பயன் பெறுகின்றனர். சுமார் 510 பேர் தினமும் இங்கு வந்து செல்வதாக இங் குள்ள பார்வையாளர்கள் ரிஜிஸ்டர் தெரிவிக்கிறது.

மொழியியல் வல்லுநர் டாக்டர் சுநீதி குமார் சட்டர்ஜி அவர்கள் அடிக்கடி இங்கு வந்து படிக்கிறார்; வேண்டும் நூல்களை வீட்டுக்கு எடுத்துச் செல்கிறார். "சாகிப், பீபி, குலாம்", "காசு கொடுத்து வாங்கி னேம்" (கடிதியே கின்லாம்) போன்ற பல புகழ்பெற்ற நாவல்களை எழுதியுள்ள வங்க எழுத்தாளர் பிமல்மித்ரா தினமும் ஆறு ஏழு மணி நேரம் நூலகத்திலேயே இருந்து படிக்கிறார்; எழுதுகிறார். தற்போது அவரது

கதையோ, நாவலோ இடம் பெறாத வார, மாத பத்திரிகையே வங்க மண்ணில் இல்லை எனலாம். "தாமரை இலைத் தண்ணீர்," "சௌரங்கி" போன்ற நாவல்களை எழுதியுள்ள வங்க இளம் எழுத்தாளர் சங்கர் நேரம் கிடைக்கும் போதெல்லாம் இங்கே படிக்க வந்து விடுகிறார். இன்ன இன்ன நூல்கள் வேண்டும் என்று முன்னதாகவே எழுதிவிட்டுக் கே. ஏ. அப்பாஸ் அவர்களும், குஷ்வந்த்சிங் அவர்களும் இங்கு வந்திருந்தார்கள். நேரம் கிடைக்கும் போது 'சோமலெ' அவர்களும், பேராசிரியர் சீநிவாசராகவன் அவர்களும் இங்கே வரத் தவறுவதில்லை. சில மாதங்கட்கு முன் இங்கே வந்திருந்த பேராசிரியை சிவகாம சுந்தரி அவர்கள், 'எனக்கு மட்டும் வேறு கடமைகள் இல்லாவிட்டால், நான் இங்கேயே தங்கிப் படித்துக் கொண்டே இருந்து விடுவேன்' என்று குறிப்பிட்டார்.

கல்கத்தாவிலிருந்து 1964–ஆம் ஆண்டு ஜனவரி முதல் மாதந்தோறும் வெளியிடப் படும் இந்தியத் தேசிய நூல் விவரப் பட்டியலும் (Indian National Bibliography), ஆண்டுக்கொருமுறை தமிழில் தமிழ் நூல்களைப் பற்றி வெளிவரும் இந்தியத் தேசிய நூல் விவரப்பட்டியல்: தமிழ்ப் பகுதியும் (Indian National Bibliography: Tamil Fascicule) மொழியின் இலக்கிய வளர்ச்சியைப் பாரபட்சமின்றிக் கணிக்க உதவுகின்றன. மொழியின் சில துறைகளில் பல நூல்கள் வெளிவருவதையும் இன்னும் சில துறைகளில் நூல்கள் ஒன்றுமே வெளிவராமல் இருப்பதையும் புள்ளி விவரங்களுடன் இந்நூல்களிலிருந்து அறிகிறோம். 1961–ஆம் ஆண்டில் வெளிவந்த இந்திய விஞ்ஞான நூல்விவரப் பட்டியலிலிருந்து (A Bibliography of Scientific and technical publications) தமிழ் மொழியில் மருத்துவத் துறையில் பல நூல்கள் இருப்பதையும், புகைப்படக் கலை பற்றி ஒரு நல்ல நூல் கூட இல்லை என்பதையும் காண்கிறோம்.

மலையாள இலக்கியத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழில் இன்னும் பல கவிதை நூல்களும், இன்னும் பல நாடக நூல்களும் வெளிவர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது கண்கூடு. ஆங்கில–தமிழ் அகராதிகள் தமிழில் பல உள்ளன. தமிழ்–ஆங்கில அகராதிகள் எத்தனை என்று விரல் விட்டு எண்ணி விடலாம். இந்தி–தமிழ் அகராதிகள் நான்கு ஐந்து உள்ளன. ஆனால், அண்டை மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு மொழி அகராதிகள் உண்டா என்றால், இல்லை என்றே கூறவேண்டிய வருந்தத் தக்க நிலை.

இந்திய மொழி பெயர்ப்பு நூல் விவரப் பட்டியல் (Index Translationum Indicarum) இலக்கிய வளர்ச்சியில் நாட்டங் கொண்டோர் அனைவருக்கும், சிறப்பாக மொழிபெயர்ப்பாளர்களுக்கும் மிகவும் பயனுள்ள நூல். 1962–ஆம் ஆண்டில் தமிழில் வெளியான மொழி பெயர்ப்பு நூல்கள் எத்தனை? எந்த எந்த மொழி நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன? மூல நூல்களின் பெயர்கள் என்ன? மூல ஆசிரியர்கள் யார்? மொழி பெயர்ப்பாசிரியர் யார்? தமிழில் இருந்து வேறு எந்த மொழிக்காவது மொழி பெயர்ப்பு உண்டா? இந்தியாவில் மொழிபெயர்ப்பு நூல்கள் எந்த மொழியில் அதிகம்? அதிகப்படியான நூல்களை மொழி பெயர்த்தவர் யார்? — இவை போன்ற வினாக்கள் பலவற்றிற்கும் விடையளிக்க வல்லது இந்நூல். மொழிபெயர்ப்பாசிரியர்களுக்கு இந்நூல் எவ்வளவு பயன்படும் என்பதை மேலும் விரித்துக் கூற வேண்டியதில்லை.

இந்தியத் தேசியப் பௌதிக ஆய்வுக் கூடத்தில் (National Physical Laboratory) உள்ள இன்ஸ்டாக் (Indian National Scientific Documentation Centre) ஆற்றும் பணியைப் பலர் அறிந்திருப்பார்கள். நம் நாட்டிலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் வெளியாகும் விஞ்ஞான சஞ்சிகைகளில் உள்ள கட்டுரைகளைப் பொருள்வாரியாகப் பிரித்து, ஆசிரியர், தலைப்புக் குறிப்புகளுடன் மாதந்தோறும் வெளியிடுகின்றனர். எவ்வளவு குறுகிய கால அளவில், எங்கெங்கோ வெளியாகும் பத்திரிகைகளில் உள்ள கட்டுரைகள் பற்றிய விவரங்களை இவ் வெளியீடு அளிக்கின்றது என்பதைப் பாருங்கள். இதேபோல் சமூக, இலக்கிய, பொருளாதார, அரசியல் துறைகளிலும் நூல்விவரப் பட்டியல்கள் விரைவில் வெளிவர இருக்கின்றன. இதனால் மேலும் சிறந்த பயன் கிடைக்கும்.

# அந்தமான் சாரவர்


கா. வேழவேந்தன்

[வழக்கறிஞர், சென்னை.]


1. நீலப்பட் டாடை மீது
நின்றகல் மரக தம்போல்
கோலத்தீ வந்த மானும்
குலுக்கிடும் கடலின் மீது
வாலழ கோடு காணும்
வடிவழும் பசுமை சூழ்ந்த
சோலையும் கண்டு விட்டால்
சொர்க்கத்தின்பேச்சா தோன்றும்?

2. தென்தமிழ் மாந்த ரைப்போல்
சீர்விருந் தளிக்கும் தென்னை !
பொன்னீட்டித் தருவ தாலே
பொலிவுடன் ஆடும் பாக்கு !
என்மீதே மணமு டித்தோர்
இமைசோர்வர் என்னும் தேக்கு!
என்னென்ன பெயரென் றில்லா
எத்தனை மரங்கள் அங்கே !

3. உளங்கவர் அந்த மானில்
உயிர்போக்கும் விலங்கே இல்லை!
களங்கமாய் ஆதி மாந்தர்
கான்பொந்தில் வாழு கின்றார் !
இளகாத உள்ளங் கொண்ட
இச்'சார வர்க ளெ'ன்போர்
குளவிபோல் வாழு கின்றார் !
கொடுமையை என்ன சொல்
[வோம் !

4. நச்சிலே அம்பைத் தோய்த்து
நம்மக்கள் கண்ணில் பட்டால்,
இச்சென்று சொல்லு முன்னே
எய்கிறார் மாரி போலே !
அச்சவம் சிதையில் கண்டால்
அடிபட்ட முள்ளம் பன்றி
குச்சிசூழ் தெருப்பில் ஏறும்
கொடுங்காட்சி எதிரே தோன்
[றும் !

5. நிறமெலாம் கறுப்பு; அன்னோர்
நெஞ்செலாம் இருட்க றுப்பு !
அறமெலாம் அவர்க்குத் தூரம் !
ஆடையோ கண்ட தில்லை !
திறத்தோடு பன்றி மானைத்
தேடியே வேட்டை யாடி
நறநற வெனக் கடித்து
நாச்சுவை தணித்து வாழ்வார் !

6. தனிஒரு மரங்கு டைந்து
தக்கதோர் ஓடம் செய்வர் !
பனியேனும் இருளே யேனும்
பரந்திடும் அலையில் சென்று
தனிமீனை அம்பு கொண்டே
நல்வேட்டை ஆடும் இந்த
மனிதரின் ஆற்றல் தன்னை
மறுப்பவர் ஒருவர் உண்டா ?

7. 'ஓங்கியர்' என்று கூறும்
ஒருவகைக் காட்டு மாந்தர்
மூங்கிலின் இலையைக் கொண்டு
மூடியே மானங் காப்பார் !
தீங்கிலா அன்னோர் நம்மைச்
சேர்ந்திங்கே பழகு கின்றார் !
தாங்கொணாத் துயரி ழைக்கும்
'சாரவர்' திருந்து வாரோ ?

8. இருள்சூழ்ந்த காட்டை வெட்டி
எழில்சூழும் சாலை போடும்
அருந்தமிழ்த் தோழ ரங்கே
ஆண்டினில் நால்வர் ஐவர்
தருகிறார் உயிரை என்றால்
தாங்குமா நெஞ்சம்? இன்றே
ஒருவழி காண வேண்டும்;
உயிர்களை மீட்க வேண்டும் !

9. "கொல்லுங்கள் அவரை" என்றால்
கூடாது என்று கூறி,
எல்லோர்க்கும் உரிமை இந்த
எழில்தீவு என்கின் றார்கள் !
சொல்லுங்கள்; தென்ன கத்துத்
தொழிலாளர் உயிர்கள் மட்டும்
புல்லாமோ என்று கேட்போம்;
போகட்டும் ஆள்வோர் காதில் !

# MEENAKSHI GROUP OF MILLS

MADURA (SOUTH INDIA).

---

Manufacturers of:

Single yarn in counts Nf14 to Nf84, carded and combed, in hanks and in cones for Weaving and Hosiery Factories and Grey Gada. Grey and Bleached Mills, Long - Cloth, Dyed Cloth etc.

---

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai, Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd. Trichur.

# the new plato 66

*at the old price*

**Rs. 4/-**

**The Plato-66 is now better than before with new features.**
**★ A new reflector clip for lasting spring action.**
**★ Reinforced nib-end for additional strength and service.**

Plato remains your trusted pen by keeping in step with modern advances.







Sole distributors
**BEST FOUNTAIN PEN DEPOT,**
**P. B. NO. 2421, BOMBAY 2.**

a mhatre product

PLATO

Shilpi M. P. 64

சங்க உறுப்பினர் கடிதம் :

# அமெரிக்காவில் தமிழ் இசை

சங்கீத பூஷணம் எஸ். ராமநாதன்
இசைப் பகுதி,
வெஸ்லியன் பல்கலைக்கழகம்.

மிடில்டவுன் (Conn.)
நவம்பர் 25, 1964.

அன்புடையீர்,

வணக்கம். நலம்.

சென்ற வாரம் 20-ஆம் தேதி தொடங்கி மூன்று நாட்கள் டிட்ராயிட் நகரத்தில் இசை மகாநாடு நடந்தது. வெஸ்லியன் பல்கலைக் கழகத்தின் சார்பில் நான் அதற்குப் பிரதிநிதியாகச் சென்று நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். "காவடிச் சிந்து-தமிழ் நாட்டுப் பாடல் வகை" என்ற பொருள் பற்றிப் பேசியும் பாடியும் விளக்கம் தந்தேன். அன்று இரவு வீணைக்கச்சேரி செய்தேன். பல்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்தும் இசைப் பேராசிரியர்கள் வந்திருந்தார்கள். கொலம்பியா, ஏல், பென்ஸில்வேனியா, வாஷிங்டன், மிசிகன், இல்லினாய், கோல்கேட் முதலிய பல்கலைக்கழகங்கள் எனக்கு அழைப்பு அளித்துள்ளன. கிறிஸ்துமஸ் விடுமுறைக்குப்பின் அவ்விடங்களுக்குச் செல்லலாம் என்று இருக்கிறேன்.

இப்போது ஹாமில்டனில் உள்ள கோல்கேட் பல்கலைக்கழகத்தில் டாக்டர் ஸ்கெல்டன் அவர்களின் விருந்தினனாக வந்துள்ளேன். இங்கே இந்து சமயம் கற்பிக்கும் பேராசிரியர் கென்னத்மார்கன் அவர்களுடைய வகுப்பில் தென் இந்தியாவின் சமய இசை பற்றிச் சொற்பொழிவாற்றிப் பாடினேன். அவர் பல்வேறு சமயங்களின் இசையை ஒலிப் பதிவு செய்து நூல்நிலையத்தில் வைத்துள்ளார். ஏழாம் நூற்றாண்டின் தேவார இசையை நான் பாடிக் காட்டியபோது அவர் அதை மிகவும் பாராட்டி ஒலிப்பதிவு செய்துள்ளார்.

வெஸ்லியன் பல்கலைக் கழகத்தில் ஏறக்குறைய பதினைந்து மாணவர்கள் தென்னாட்டு இசை பயிலுகின்றனர். ஐவர் வீணை கற்கின்றனர். எங்கள் வெஸ்லியன் குழு (Music Study Group)-ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் கச்சேரி செய்துள்ளது; கார்னேகீ மண்டபத்தில் கச்சேரி செய்துள்ளது; டெலிவிஷனிலும் தோன்றியுள்ளது.

அமெரிக்க இசைக் கலைஞர்களும் இசை மாணவர்களும் பல்வேறு நாடுகளின் இசை முறைகளையும் கற்கின்றனர். இந்திய இசையில் அவர்களுக்கு ஈடுபாடும் மதிப்பும் இருக்கின்றது. வரும் ஆண்டுகளில் மேலும் மேலும் அமெரிக்க மாணவர்கள் நம் நாடு வந்து நம் இசையைக் கற்க விரும்புகிறார்கள்.

வெஸ்லியன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் ஹெல்பர் (Helfer) இந்திய வரலாறு, இந்திய சமயம் இரண்டையும் பற்றி விரிவுரை ஆற்றுகிறார். மாணவர்கள் கற்கும் முறை நுண்மையாகவும் போற்றுதற்குரியதாகவும் உள்ளது.

நண்பர்கள் அனைவருக்கும் என் அன்பைத் தெரிவிக்கும்படி வேண்டுகின்றேன். அனைவரையும் கண்டு அளவளாவும் நன்னாளை ஆவலுடன் எதிர் நோக்குகிறேன்.

அன்பு,

எஸ். இராமநாதன்.

மௌலானா அபுல்கலாம் ஆஜாத்: இந்திய விடுதலை வெற்றி ரூ. 6-50
ராதா குமுத முகர்ஜி: இந்தியாவின் அடிப்படை ஒற்றுமை ரூ. 2-50
பார்த்தசாரதி: தமிழ்நாடு தந்த தலைவர்கள் ரூ. 1-25

ஓரியண்ட் லாங்மன்ஸ் லிமிடெட்
36-A, மௌண்ட் ரோட், மதராஸ் - 2.



## Helping to develop more horse-power

**The TVS group of companies serves you, by serving the road transport operator, to give you efficient, low-cost transport.**

TVS

# எழுத்துக் கலை

## முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்

"மின்னுவதெல்லாம் பொன்னல்ல" என்பதைப் படித்திருக்கிறோம். "வெளுத்ததெல்லாம் பாலல்ல" என்பதைப் பார்த்திருக்கிறோம். "பேசுவதெல்லாம் பேச்சல்ல" என்பதைக் கேட்டிருக்கிறோம். "எழுதுவதெல்லாம் எழுத்தல்ல" என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

எழுதிக் கொண்டிருப்பவர் எழுத்தர். எழுத்தைக் கையாள்பவர் எழுத்தாளர். எழுத்தை அறிந்தாள்பவர் எழுத்தறிஞர். நூறு எழுத்தரில் ஓர் எழுத்தாளரையும், நூறு எழுத்தாளரில் ஓர் எழுத்தறிஞரையும் காணலாம். எழுத்தரும், எழுத்தாளரும் எழுத்தறிஞராக மாறுவது நாட்டிற்கு நல்லது.

"இலக்கணம்" என்பது சட்டம்; வரம்பு. இது யாருக்குத் தேவையில்லாவிடினும், எழுத்தாளர்க்குத் தேவையான ஒன்று. "எழுத்தாளனுக்கு இலக்கணம் தேவையில்லை" எனக் கூறுபவர்கள் தமிழகத்திற்குத் தேவையில்லாதவர்கள்.

பேசுவதுபோல எழுதுவது தவறு. அவ்வாறுதான் எழுதவேண்டும் என்பது ஒரு தவறான கருத்து. தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ளவர்கள் ஒவ்வொரு வகையாகப் பேசுகிறார்கள். அதிலும் ஒவ்வொரு பிரிவினரும் வெவ்வேறு வகையாகப் பேசிவருகின்றனர். இவர்களில் "யார் பேசுவது போல?" எனக் கேட்டால், விடையே வராது. பேச்சுக்கலை வேறு; எழுத்துக்கலை வேறு. இரண்டும் ஒன்றாக வேண்டும் என விரும்புகிறவர்கள் "பேசுவதைப் போல எழுதுங்கள்" எனக் கூறாமல், "எழுதுவதைப்போல் பேசுங்கள்" எனக் கூறுவது நலமாகும்.

சிறந்த எழுத்தாளர்களால் எழுதப் பெறும் எழுத்து நன்னிலத்தில் விளைந்த நெல் போன்றது. மற்றது களர் நிலத்தில் விளைந்த பதர்போன்றது. நெல்லைத் தேய்த்து உமியை ஊதிவிட்டால் அரிசி காணப்படுவதுபோல, எழுத்தைப் படித்து நீக்கிவிட்டால் கருத்து காணப்பட வேண்டும். கருத்து இல்லாத எழுத்தும், அரிசி இல்லாத பதரும் எவருக்கும் பயன்படா. எழுத்துகளைக் குறைத்துக் கருத்துகளை நிறைத்து எழுதுவது நல்லது. பல பக்கங்களில் ஒரு கருத்து காணப்படுவதைவிட ஒரு பக்கத்தில் பல கருத்துகள் காணப்படுவதே எழுத்தாகும்.

பொழுதுபோக்குக் கதைகள் நமக்குத் தேவையில்லாத ஒன்று. பிற நாடுகளுக்கு வேண்டுமானால், அவை தேவைப்படலாம். நம் நாட்டு மக்களுக்கு உழைக்கவும், உண்ணவுமே பொழுது போதவில்லை. கடுமையாக உழைத்துப் பல திட்டங்களை நிறைவேற்றித் தீரவேண்டிய நாட்டில் பொழுதுபோக்குக் கதைகள் மக்களின் அறிவையும், ஆற்றலையும் போக்க உதவுவதன்றி வேறு எதற்கு உதவப்போகிறது என்பதைப் பொழுதுபோக்கு எழுத்தாளர் எண்ணிப்பார்த்தல் வேண்டும். கதைகளை எழுதுவதிலும் – காதற்கதைகளை-அதிலும்- காமக்கதைகளை எழுதுவது தீயொழுக்கத்தை வளர்ப்பதாக வந்து முடியும். கல்வி, அறிவு, ஒழுக்கம், கலை, நாகரீகம், பண்பாடு உழவு, தொழில், வணிகம், சமூகம், சீர்திருத்தம், அரசியல் ஆகியவற்றில் ஆக்கமும், ஊக்கமும் உண்டாகுமாறு எழுதுவது நாட்டிற்குச் செய்யும் நற்பணியாக அமையும்.

இலக்கியங்கள் அனைத்தும் குறிக்கோளையுடையவை. இலக்கு—குறிக்கோள். குறிக்கோள் இல்லாத எழுத்தும், குறிக்கோள் இல்லாதவாழ்வும் பயனற்றவை.

"எங்கு! செல்கிறோம்" என்று எண்ணுமை லேயே சாலையில் நடந்துகொண்டிருப்பவனும், "எதைச் சொல்லுகிறோம்" என்று எண்ணுமையிலேயே எழுதிக்கொண்டிருப்பவனும் ஒரே படகில் செல்லவேண்டியவர்கள்.

எவரும் எந்தமொழியிலும் எழுதலாம். ஆனால், அவர் அந்த மொழியை நன்கறிந்தவராக, அம்மொழியில் பற்றுள்ளவராக இருத்தல் வேண்டும். இன்றேல், எழுதும் மொழியல்லாத வேற்று மொழிச் சொற்கள் அவரறியாமலே புகுந்து அவரது எழுத்தை வீணாக்கிவிடும். பல மொழிச் சொற்களைக் கலந்து எழுதுகிறவர்கள் எந்த ஒரு மொழியையும் நன்கறியாதவரும், எந்த ஒரு மொழியிலும் பற்று இல்லாதவருமாகவே காட்சியளிப்பர்.

மகா ராஜ மான்ய ராஜ ஸ்திரீ, விவாக முகூர்த்தப் பத்திரிகை, வதூவரர்கள் என்பவைகளெல்லாம் மறைந்து திருவாளர், திருமண அழைப்பு, மணமக்கள் என்பனவெல்லாம் வெளிவந்தபிறகும், அக்கிராசனாதிபதி, பிரசங்கி, வந்தனோபசாரம் என்பவைகளெல்லாம் ஒழிந்து, தலைவர், சொற்பொழிவாளர், நன்றிகூறல் ஆகியவை வழக்கத்திற்கு வந்துவிட்ட இக்காலத்திலும்கூடப் "பறவை" இருக்க பக்ஷியையும், "பூ" இருக்க புஷ்பத்தையும், "கால்" இருக்க பாதத்தையும் தேடிப்பிடித்து எழுதுவது எதன் பொருட்டோ? "சோறு, தண்ணீர்" என்பவைகளைக் "கானா, பானி" என்றோ, "போஜனம், தீர்த்தம்" என்றோ "ரைஸ், வாட்டர்" என்றோ பிறர் எழுதலாம். அதைத் தமிழன் எழுதலாமா? எழுதினாலும், அதைத் "தமிழ்" எனலாமா?—என்பவைகளைப் பிறர் எண்ணிப்பார்க்காவிட்டாலும், எழுத்தாளர் எண்ணிப்பார்க்க வேண்டும்.

"பலமொழிச் சொற்களையும் கலந்து எழுதினால்தான் ஒரு மொழி வளரும்" என்பது "கல்லையும், மணலையும் கலந்து அளந்தால்தான் அரிசி கூடும்" என்பதைப் போன்றது. அரிசியும், பருப்பும் உணவுப் பொருள்களே. எனினும், அவை தனித்தனியே இருக்கும்போதுதான் அரிசிக்கும் மதிப்பு; பருப்புக்கும் சிறப்பு; இரண்டும் கலந்து விட்டால் கண்டதும் உண்டாவது வெறுப்பு!

"அட்ஹாக் கமிட்டி, லோக் சபா, ஆகாசவாணி, விவித்பாரதி" ஆகியவைகளெல்லாம் புரியும்போது, "தமிழ்ச் சொற்கள் தமிழனுக்குப் புரியாது" எனக் கூறுவது தமிழுக்கும், தமிழனுக்கும் மானக்கேடாகும். யாராகிலும் ஒருவர் தமிழ்ச் சொல் தனக்குப் புரியவில்லை என்றால், அவர் தமிழ் படிக்கவில்லை என்று பொருள். தமிழ்ச் சொற்கள் அவருக்குப் புரியவேண்டுமானால், அதற்குரிய ஒரே வழி அவர் தமிழைப் படிக்கவேண்டும் என்பதே. அதைவிட்டுத் தமிழ் படியாத மக்களுக்குப் புரியும்படி எழுதுகிறேன் என எழுதுவது ஒரு புதிய கதம்ப மொழி ஒன்றை உருவாக்க உதவுமேயன்றித் தமிழை வளர்க்க உதவாது.

நல்ல தமிழில், சிறந்த நடையில், மிகுந்த கருத்துக்களை, குறைந்த எழுத்துக்களில் எழுதுவதே உயர்ந்த படைப்பாக இருக்கும். என்றாலும், இதையும் வளரவிடாமல் அழித்து ஒழிக்கும் பூச்சிகள் இரண்டு இருக்கின்றன. ஒன்று இலக்கணப் பிழை; மற்றொன்று அச்சுப் பிழை. வளரும் பயிராக இருக்கும் எழுத்தாளர்கள் இப் பூச்சிகளால் தாக்கப்படாமல் இருப்பது நலமாகும்.

மக்களைத் திருத்த எழுத்துத் துறையே தலைசிறந்தது. இதையறிந்தே அறிஞர் வால்டேர், "வாள்முனையை விடப் பேனாமுனையே அதிக வலிமையுடையது" என்றார். எனினும், ஒழுக்கமற்றவனுடைய வாளோ, ஒழுக்கமற்றவனுடைய பேனாவோ வெற்றிபெறாது; வெற்றிபெற்றாலும் நிலைத்து நில்லாது. ஆகவே, "ஒழுக்கமுள்ளவனுடைய எழுத்துக்கு ஒரு தனி எடையுண்டு" என்பதை எழுத்தாளர்கள் முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும்; அடுத்துத் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும்; பிறகே பிறரைத் திருத்த முனைய வேண்டும்.

சிலர், சிலரை வைது எழுதி மிரட்டிப் பணம் பெற்று வாழ்கிறார்கள்; சிலர், சிலரை வாழ்த்தி எழுதிப் போற்றிப் பணம்பெற்று வாழ்கிறார்கள். இவர்கள் இருவருமே எழுத்துலகிற்கு வேண்டாதவர்கள். உண்மையை ஒளிக்காமல் தீமையற்ற சொற்களால் அச்சமற்று எழுதும் எழுத்தே அனைவராலும் வரவேற்கப்பெறும்.

"இன்ன நூலைப் படித்து நட" எனக் கூறுவதற்குத் தகுதியுடைய நூல்கள் பல இப்போது தோன்றிவருகின்றன. இது போதாது. "இன்ன ஆசிரியரைப் பார்த்து நட" எனக் கூறுவதற்குத் தகுதியுடைய ஆசிரியர்கள் பலர் இப்போது தோன்றியாக வேண்டும். இன்றேல் எழுத்துலகம் வாழாது.

நாளிதழ்களுக்கு ஒரு நாளே உயிர். மறுநாள் பிறந்தால் இது இறந்துவிடும். கிழமை இதழ்களுக்கு ஒரு கிழமையும், திங்களிதழ்களுக்கு ஒரு திங்களும் உயிர் உண்டு. ஆண்டு மலருக்கு அடுத்த மலர் பிறக்கும்வரை உயிர் இருக்கும். பிறகு இறந்துவிடும். ஒரு நல்ல இலக்கியப் படைப்பு என்றால், குறைந்தது அது அடுத்த தலைமுறைவரையிலாவது உயிர்பெற்றிருக்க வேண்டும். இன்றேல், அது உயிர் இலக்கியமாக இராது. உலகிலேயே அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பெற்றதும், 98 தலைமுறை வரையில் நிலைத்து நிற்பதுமான சிறந்த இலக்கியம் தமிழில் உள்ள 'திருக்குறள்' ஒன்றே எனக் கூறிப் பெருமையடைய தமிழ் எழுத்தாளர்க்கு மட்டுமே உரிமையுண்டு.

சில பெரிய மனிதர்களோடு நட்புக் கொள்ள வேண்டுமானால், அதற்கேற்பச் சில நல்ல பழக்கங்களும் நம்மிடையே இருந்தாகவேண்டும். இன்றேல், அந் நட்பு நிலைத்திராது. அதுபோன்றே நாம் பேனாவோடு பழகுவதாக இருந்தாலும், அதற்கு முன்னே, பெருந்தன்மையோடு சிறிதாவது பழகியிருக்கவேண்டும். பெருந்தன்மையோடு பழகியறியாதவர்கள் பேனாவோடு பழகத் தகாதவர்கள்.

நல்லதைப் படித்து, நல்லதைக் கேட்டு நல்லதை எண்ணி, நல்லதைச் சொல்லி, நல்லதைச் செய்து, நல்லதை எழுதும் எழுத்தாளர்கள் நம் நாட்டில் பெருகவேண்டும்.

வாழட்டும் தமிழகம் !
வளரட்டும் எழுத்துலகம் !

---


தந்தி : NARCO
தபால் பெட்டி எண் : 26

**நாராயணன் அண் கோ,**

**75, கோவிலூர் ரோடு,**

**காரைக்குடி—1.**

※

எங்களிடம் எல்லாவித சைக்கிள்களும், அவைகளுக்குரிய சாமான்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும். வருகைதந்து, உவப்புற்று, வாணிபத்தை வளர்க்க வேண்டுகிறோம்.

# தென்னாப்பிரிக்க எழுத்தாளர்கள்

டாக்டர் எஸ். திரிபுரசுந்தரி ("லக்ஷ்மி")

உலகத்தின் மிகப்பெரிய கண்டங்களில் இரண்டாவதாக மதிக்கப்படும் இருண்ட கண்டமெனும் ஆப்பிரிக்காவில் சுமார் இருபத்திரண்டு கோடி மக்கள் வசிக்கின்றனர். ஏழுவகை இனத்தினரான இம்மக்கள் பேசும் மொழி எழுநூறு. இருண்ட கண்டத்தின் தென் பகுதியை வியாபித்துக் கொண்டிருக்கும் தென் ஆப்பிரிக்காவில் நான் சுமார் எட்டு வருடங்கள் தங்கியிருந்தேன். சரித்திரப் பிரசித்திபெற்ற நன்னம்பிக்கை முனை தென் ஆப்பிரிக்காவின் தெற்கு எல்லையாக அமைந்துள்ளது. மேற்குக்கரைக்கு அட்லாண்டிக் மகா சமுத்திரம் அரணாக அமைய, கிழக்குக் கரையை இந்துமகா சமுத்திரம் தழுவி நிற்க, வடக்கே லிம்போபோ ஆறு எல்லைக்கோடிடப் பரவி நிற்கும் தென் ஆப்பிரிக்காவின் நிலப்பரப்பு பிரஞ்சு நாட்டைப்போல் இரு மடங்கும், நெதர்லாந்தைப்போல் 33 மடங்கும் பெரியது.

நெட்டால், ஆரஞ்சுபிரீஸ்டேட், கேப், டிரான்ஸ்வால் என்று நான்கு இராஜதானிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள தென் ஆப்பிரிக்காவில் வசிக்கும் மக்கள் இரண்டு வகையினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஐரோப்பியர், ஐரோப்பியர் அல்லாதார் எனப்படுவர்.

சுமார் முன்னூற்று ஐம்பது வருடங்களுக்கு முன்னர் டச்சு கிழக்கு இந்தியக் கம்பெனியார் கடல் மார்க்கமாகக் கிழக்கு இந்தியத் தீவுகளுக்கும் ஹாலந்திற்கும் இடையே வியாபாரம் நடத்திக்கொண்டிருந்தனர். நீண்ட நாட்கள் கடலிலேயே பிரயாணம் செய்யவேண்டியிருந்த கப்பல்களுக்கு இடையே ஒரு தங்குமிடம் அவசியம் எனக் கருதியே 1652ஆம் ஆண்டு 'ஜான்வான்ரிபீக்' என்பவர் நூறு வெள்ளைக்காரர்களுடன் டேபிள் குடாவின் கரையோரம் வந்து குடியேறினர். அவரது வழித்தோன்றியவர்கள்தாம் இன்று தென் ஆப்பிரிக்காவில் வசிக்கும் வெள்ளைக்கார மக்கள். இவர்களின் எண்ணிக்கை இருபத்தைந்து லட்சம் ஆகும். இதே சமயம் ஆப்பிரிக்காவின் மத்தியப் பகுதியிலிருந்து தென்பாகத்தை நோக்கி நகர்ந்து வந்து கொண்டிருந்தனர் நீக்ரோவர்கள். இன்றைய தென் ஆப்பிரிக்காவில் வாழ்கின்ற ஒரு கோடி ஆப்பிரிக்கர்களின் மூதாதையர்கள் இவர்கள். ஆப்பிரிக்கர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் இடையே ஏற்பட்ட கலப்பினால் உதித்தவர்கள்தாம் இந்நாட்டில் வாழ்கின்ற பதினைந்து லட்சம் கலப்பு வர்க்கத்தினர். இவர்களைக் 'கலர்டு' (Coloured) என அழைக்கின்றனர். நம்நாட்டு ஆங்கிலோ இந்தியர்களுக்கு இவர்களை ஒப்பிடலாம்.

செழுமைமிக்க நெட்டால் இராஜதானியில் கரும்பைப் பயிர்செய்ய நுழைந்த வெள்ளைக்காரர்களின் வேண்டுதலின்பேரில் 1860 ஆம் ஆண்டு தொழிலாளிகளாகக் குடியேறியவர்கள் இந்நாட்டில் வாழ்கின்ற பெரும்பாலான இந்தியர்கள். கடுமையான உழைப்பாலும், திறமையாலும் நூறு வருடகாலத்திற்குள் இவர்களில் பலர் படிப்படியாக உயர்ந்து கல்வி, செல்வம் இரண்டிலும் மிகவும் முன்னேறி, "ஒப்பந்தக் கூலி" என்ற நிலையிலிருந்து பெரிய வியாபாரிகள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், வக்கீல்கள என்று பலதுறைகளிலும ஈடுபட்டு வாழ்கின்றனர். ஒப்பந்தக் கூலிகளாகச் சென்றவர்களில் பெரும்பாலோர் தமிழர், ஆந்திரர், இந்தி பேசும் வடநாட்டவர். இந்தியத் தொழிலாளிகள் நெட்டாலுக்குள் பிரவேசித்த அதே சமயம் வியாபாரிகளாகவும், பள்ளி ஆசிரியர்களாகவும், புரோகிதர்களாகவும் பெருவாரியான எண்ணிக்கையில் குஜராத்தியர், முகம்மதியர், சில தமிழர், வங்காளியர், பாரசி மக்கள் முதலியோர் இங்கு வந்து குடியேறினர்கள். இவர்கள்

அனைவரது சந்ததியார்கள்தாம் இன்றைய தென் ஆப்பிரிக்க இந்தியர்கள். எண்ணிக்கையில் இவர்கள் ஐந்து லட்சம் மக்கள். அதில் இரண்டு லட்சத்திற்குச் சிறிது அதிகமானவர்கள் தமிழர்கள்.

வேறு நாட்டில் வாழ்வைத் தேடிவந்த இவர்கள் அனைவரும் வாழ்க்கைப் போராட்டத்திலே தங்களது கருத்து முழுவதையும் செலுத்த நேரிட்டபோதிலும், சித்திரம், சிற்பம், ஓவியம், எழுத்து இவைகள் வாழ்விற்கு இன்றியமையாதவை என்று உணர்ந்து கொண்டிருந்தனர். இன்றையத் தென் ஆப்பிரிக்காவில் வாழும் ஐரோப்பியர், ஐரோப்பியர் அல்லாதார் இருவரிடையேயும் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் சிலர் உள்ளனர். உலகச் சந்தையிலிருந்து ஆங்கிலப் புத்தகங்களை அதிகம் வாங்கிப்படிப்பவர்களில் தென் ஆப்பிரிக்க மக்கள் இரண்டாவது ஸ்தானம் வகிக்கின்றனர் என்ருல், இந்நாட்டில் ஆங்கில எழுத்தாளர்களுக்கு வளமான தொரு வருங்காலம் உள்ளது என்று தீர்மான மாகக் கூறலாம்.

ஐரோப்பிய எழுத்தாளர்களில் உலகப் பிரசித்தி பெற்ற ஆலன் பேடனை அறியாதவர்கள் எழுத்துலகில் மிகவும் குறைவு எனலாம். ஐம்பத்தைந்து வயதான ஆலன் ஆரம்பத்தில் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்தவர். ஜோஹன்ஸ்பர்க் அருகே உள்ள ஆப்பிரிக்க சிறுவர்களின் சீர்த்திருத்தப்பள்ளியில் நீண்ட காலம் வேலை பார்த்து வந்தார். அந்தச் சூழ்நிலை அவருடைய புகழ்பெற்ற நாவலான "Cry the Beloved Country" எனும் புத்தகத்திற்குக் கருவூலமாகியது என்ருல் அது மிகையல்ல.

ஓய்வை நாடி நார்வே நாட்டிற்குச் சென்றிருந்த சமயம் ஆலனுக்கு முதன் முதலாகப் புத்தகம் எழுதவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஹோட்டல் அறைகளிலும், கப்பல் மேல்தளத்திலும், ஓடும் ரயிலிலும் நேரம் கிடைத்தபோதெல்லாம் உள்ளத்தில் பொங்கி எழுந்ததை எழுதிக் குவித்துக் கொண்டிருந்தார்.

ஐரோப்பா முழுவதும் சுற்றிவிட்டு அமெரிக்காவுக்குச் சென்ற ஆலன் பேடன் தமது கைெயழுத்துப் பிரதியை அங்கு ஒரு பிரசுரகர்த்தாவிடம் காட்டினர்; உடனே அது புத்தகமாக அச்சிடப்பட்டது. 7,50,000 காப்பிகள் மிக விரைவில் விற்றதுடன் ஆலனின் புகழ் ஐரோப்பா, அமெரிக்கா இரண்டிலும் விரைவில் பரவியது. பின்னர் இந்தப் புத்தகம் பல ஐரோப்பிய மொழிகளிலும், ஜப்பானிய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டன. இக்கதை சங்கீத நாடகமாக அமைக்கப்பட்டு, பிரசித்தி பெற்ற பிராட்வே அரங்கிலும் பலமுறை ஏற்றப்பட்டது. முடிவில் சினிமாப் படமாகவும் ஆக்கப்பட்டது. இவர் எழுதியுள்ள மற்றப் புத்தகங்கள் "Too late the Phalarope", "Biography of Mr. J.H) Hifmeyer", "Sponona" முதலியன.

இந்நாட்டில் வாழ்கின்ற மற்ற ஆங்கில எழுத்தாளர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் குமாரி நடினு கார்டிமர், திருமதி டாரிஸ் லெஸ்ஸிங், குமாரி மாரிஸ் மூரே முதலியவர்களாவர். இவர்களைத் தவிர, 'ஆப்பிரிக்கான்' எனும் (டச்சு கலந்தமொழி. மொழியில் எழுதுகின்ற வெள்ளைக்கார எழுத்தாளர்கள் பலர் இந்நாட்டில் உள்ளனர். அவர்களில் பிரசித்திபெற்றவர்கள் திரு. லாரன்ஸ் வான்டர் போஸ்ட்டு, உடிஸ்கிரிக் என்பவர்களாவர்.

கலப்பு வர்க்கத்து மக்களிடையே யிருந்து எழுத்துலக சேவைக்கு வந்துள்ள பீட்டர் ஏப்ரகாம் எனும் ஆங்கிலமொழி எழுத்தாளரும் குறிப்பிடத்தக்கவர். இவரது புத்தகங்களுக்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நல்ல வரவேற்பு உள்ளது. ஆப்பிரிக்க எழுத்தாளர்களில் புகழ்பெற்றவர்கள் எசக்கில், ஆல்பர்ட்டுலுதலி என்பவர்கள்.

நாவல், சிறுகதை, கட்டுரை, கவிதை இவைகளைத்தவிர சரித்திரம, ஆராய்ச்சி நூல்கள் முதலியன எழுதிப் புகழ்பெற்றுள்ள எழுத்தாளர்கள் பலர் உள்ளனர் இந்நாட்டில். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் டாக்டர் பிரயன்டு, ஸ்ரீமதி ஹில்டாகூப்பர், டி. வி. பல்வின், ஏ. டபிள்யூ. வெல்ஸ், மைக்கேல் மக்னீல், ஆளவ் ஷரானர் முதலியவர்கள் ஆவர்.

இந்தியர்களில் எழுத்தாளர்கள் என்று குறிப்பிடத்தக்கவர்கள் யாரும் இல்லை என்பது ஒரு பெருங்குறைதான். காலஞ்சென்ற டர்பன் முனிசாமிப்பிள்ளை என்பவரின இலக்கியக் கட்டுரைகள் பல தமிழ்நாட்டுப்

பத்திரிகைகளில் இடம் பெற்றிருக்கின்றன. இதைத் தவிரத் தமிழில் ஆராய்ச்சி நூல்கள், நாவல்கள், சிறுகதைகள் எழுதியுள்ள எழுத்தாளர்கள் யாருமே இந்நாட்டில் கிடையாது. குஜராத்தி, இந்சி, உருது முதலிய மொழிகளிலும் குறிப்பிடத்தக்க எழுத்தாளர் யாரும் கிடையாது. சமீபத்தில் இந்தியப் பெண்மணியான டாக்டர் அனுசூயாசிங் என்பவர் ஆங்கிலத்தில் தான் எழுதிய "Behold the Earth Mourns" என்ற நாவலை வெளியிட்டார். இது இந்த அம்மையாரின் முதல் முயற்சி. இவரை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தியப் பெண்களில் இவர்தான் முதல் எழுத்தாளர். தென் ஆப்பிரிக்காவில் தங்கி எழுத்துலகிற்கு சேவை செய்த பெருமை எட்கார்டுவாலஸ், ரைடர்ஹாகர்டு, ருட்யார்டு கிப்ளிங் போன்ற பிரபல எழுத்தாளர்களுக்கு உரித்தாகும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆரஞ்சு பிரீ ஸ்டேட் எனும் இராஜதானியின் தலைநகரான புளுப்பாண்டின் என்ற நகரத்திலிருந்து வெளிவரும் "Friend" எனும் பத்திரிகை ஆசிரியராகக் கொஞ்சகாலம் பணிபுரிந்தார் ருட்யார்டு கிப்ளிங். ஜோஹனஸ்பர்க்கிலிருந்து வெளிவரும் "Rand Daily Mail" எனும் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார் எட்கார்டுவாலஸ்.

கேப் ராஜதானியில் உள்ள ஸ்வார்ட்ஸ் பர்க்கு எனும் மலையில் இரண்டு மைல் தூரம் உள்ளே வியாபித்து நிற்கும் காங்கோ குகை என்று ஒன்று உள்ளது. இதை உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதி வருடம் பூராவும் பல ஆயிரக்கணக்கான யாத்திரீகர்கள் வந்து கண்டு களிக்கின்றனர். இயற்கை குடைந்து வைத்துள்ள பளிங்கு மாளிகைபோல் பார்ப்பவர்களுக்கு பிரமிப் பூட்டும் இந்தக் குகையைக் கண்டு அதிசயித்து நின்ற ரைடர்ஹாகர்டு தமது "King Salomon's Mines" எனும் பிரசித்திபெற்ற புத்தகத்தை எழுதியதாக சரித்திரம் கூறுகிறது.

---


THE EMBLEM OF RELIABILITY

MUSIC TREAD

FULL CIRCLE RETREADING

**with quality control at every stage**

卐

**MADURA SOUTH INDIA CORPORATION**

**PRIVATE LIMITED**

80, SEMBUDOOS STREET, MADRAS-1.

Telephone { Office : 23291 / Factory : 27275 }    Telegrams : "MUSIC"

# இலக்கியத் திறனாய்வு

ரா. ஸ்ரீ. தேசிகன்

[முன்னாள் ஆங்கிலப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை.]

திறனாய்வுத் துறையில் நாம் இறங்குவதற்கு முன்பு, திறனாய்வோன் எத்தகைய பண்புகளைப் பெற்றவனாய்த் திகழவேண்டும் என்பதை நாம் அறிந்துகொள்ளுவது இன்றியமையாதது. முதன்முதலாக உலகத்தில் தோன்றிய சிறந்த இலக்கியப் படைப்புகளின் வனப்பை மாந்தி மாந்தி அவன் தன்னுடைய உள்ளத்தை ஓர் உரைகல்லாய்ச் சமைத்துக் கொள்ளவேண்டும். இப்படி அமைந்த உரைகல்லை வைத்துக்கொண்டு புதிய படைப்புகளைத் துருவி ஆய்வது அவன் கடமையாகும்.

தன்னைச் சமன் செய்துகொண்டு எதையும் நோக்குவதுதான் சாலச் சிறந்ததாகும். அவனிடத்தில் நாட்டுப் பற்றிற்கோ, இனப் பற்றிற்கோ இறையளவேனும் இடமில்லை. சமயப் பற்றும் திறனாய்வுத் துறையில் குறுக்கே நின்று பெரிய இன்னலை விளைவித்துவிடும் என்பதில் யாதோர் ஐயமுமில்லை.

கலை கலைக்காகவே மிகக் கவின்பெறத் திகழவேண்டும் என்னும் கருத்தில் ஒரு பேருண்மை கோயில் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். திறனாய்வு உலகத்தில் யாதொரு சார்பையும் நுழையவிடாமல் இருப்பதன் பொருட்டு நாம் விழித்தே இருக்கவேண்டும். திறனாய்வும் திறனாய்வுக்காகவே மிளிரவேண்டும் என்பதை நாம் மனத்தில் இருத்திக் கொள்ளுவதுதான் முறையாகும்.

இளங்கோ அடிகள் தம் 'சிலப்பதிகாரத்தை' இயற்றும்போது, தன்னை மறந்துதான் இருந்தார் என்பது அவர் அமைத்த அமரப் படைப்பின் வாயிலாக நன்கு புலனாகின்றது. பாத்திரங்களோடு தாம் ஒன்றாய் இரண்டறக் கரைந்துவிடுவதுதான் கவிஞனுக்கு உரிய சிறந்த பண்பாகும். 'ஆய்ச்சியர் குரவையில்' காணப்படும் பாடல்கள் ஒரு வைணவனாலும் இசைக்க முடியாதவையாய்ச் சமைக்கப்பட்டன என்பதை யார்தான் ஓரமாட்டார்கள்!

சாத்தனார் இயற்றிய 'மணிமேகலை'யில் உயர்ந்த சொல்லாட்சியை நாம் உணர்ந்தாலும், அதை அத்துணை மாபெரும் நூலாகக் கருத இடமில்லை. ஏனெனில், அது ஒரு பிரசார நூலாகும்.

திறனாய்வுத் துறையிலும் வேறு எதையும் நோக்காது தம்முன் நிற்கும் படைப்பின் குணச் சிறப்புக்களையும் குற்றங் குறைகளையும் அச்சமின்றி ஆய்வுப்புலவோன் எடுத்துக் கூற வேண்டும். வரலாற்றில் ஒரு கவிதை சிறந்த இடம் பெற்றிருக்கக்கூடும். அதனால் அதை வானளாவப் புகழக்கூடாது. தமக்குப் பிடித்த கவிஞனையோ, சிறுகதை எழுத்தாளனையோ வரம்பு கடந்து போற்றும் குழுவும் நம்மிடையே தோன்றிவிட்டது. ஒரு குழுவுக்கப்பால் இருக்கக்கூடிய ஒன்றை எத்துணை சிறப்பு வாய்ந்ததே ஆயினும் புறக்கணித்துவருவது கலைப் பண்பிற்கு முரண்பட்டதாகும். எந்த இலக்கியப் பூம்பொழில்களிலும் நாம் வண்டினம்போலத் திரிந்து இலக்கியத் தேனை நுகரவேண்டும். இலக்கியம் நம் நாட்டைமட்டும் சார்ந்ததன்று. அதன் எல்லை இப்பரந்த ஞாலமேயாகும்.

காலவெள்ளத்தை நீந்தி நிற்கும் படைப்புகளே — என்ஞ்ஞான்றும் நாம் வணங்கும் படைப்புகளாகும். இலக்கியம் என்றும் இடையறாது ஓடுகின்ற ஓர் உயிர் ஆறாகும். அதற்கு ஒரு மரபுண்டு. மர

பென்றால், நம் நாட்டின் இலக்கிய மரபை மட்டும் அது சுட்டவில்லை. எல்லா நாட்டு இலக்கிய மரபுகளையும் நாம் அதன்கீழ் அடக்கவேண்டும். "மரபும். தனிப்பட்ட மனிதனின் ஆற்றலும்" (Tradition and Individual Talent) என்னும் கட்டுரையில் தாம்கொண்ட கருத்துக்களை நயம்பட டி. எஸ். எலியட்டு இயம்பியுள்ளார். மரபென்பது ஒரு பெருங்கடலாகும்; கவிஞனின் ஆற்றல் அதிலிருந்து எழும் அலையை ஒக்கும். இந்த மரபில்லாமற் போகுமாயின் தனிப்பட்ட படைப்புக்கு ஓர் உயிர்நாடி தோன்றாமற் போய்விடும்.

யாப்பிலக்கணம் கற்காமலேயே கவிதைகள் புனையும் கவிஞர்களைப் பார்க்கின்றோம். யாப்பிலக்கணம் கற்றதனால் மட்டும், கவிதை அரும்பிவிடாது என்பது உண்மையே. ஆனால் மரபை உடைப்பதற்கும் மரபின் இயல்பை ஒரு கவிஞன் அறிதல் வேண்டுமன்றோ!

பாரதி மகாகவியானதற்குக் காரணம் அவர் இலக்கண உதவியின்றி ஆவேசத்தில் பாடியதே என்று ஒருவர் கூறினால், அவருடைய அறியாமையை என்னென்று சாற்றுவது! ஆவேசம் ஒன்றையும் புதிதாய்ச் சமைத்துவிடாது; வெறும் பாழில் அது ஒன்றையும் எழுப்பிவிடாது என்பதை அவர் மறந்தார் போலும்! ஒரு படைப்பை இரண்டு முறைகள் வாயிலாக நாம் எழுப்பக் கூடும். படைப்புக்குற்ற அமிசங்களைத் திரட்டிக்கொண்டேபோனால், அது நம்முன் காட்சியளித்துவிடும். படைப்பிற்குப் புறம்பாயுள்ள எதையும் இரக்கமின்றிக் கழித்துக் கொண்டே போனாலும், நாம் விழையும் உருவம் உயிர் பெற்று எழுந்துவிடும். இம் முறை மைக்கல் ஆஞ்சலோ ஆண்டகைத்திறனாகும். எடுத்துக்கொண்ட கல்லைச் செதுக்கிக் கொண்டேபோவார்; அப்பொழுது அக்கல்லில் அருந்துயில் கொண்டிருந்த உருவம் மிகக் கவின்பெற அவர் முன் நடனமாடத் தொடங்கிவிடும்.

இதுதான் அவர் கண்ட உண்மை. இதுவே கலையின் இறுதியான குறிக்கோளாகும். ஒருவன் வகுத்துக்கொண்ட பொருளுக்குத் தக்க உருவம் சமைந்திருக்கிறதா என்பதைத்தான் காண வேண்டும் என்று குரோச்சே கூறுகின்றார்.

ஒரு படைப்பின் இறுதியைத் தொடக்கத்திலேயே உணரவேண்டும்; அதன் தொடக்கம் இறுதியில் அலரவேண்டும். உடலும் உயிரும்போல் பருந்தும் நிழலும் போல இடையறாத தொடர்பு இலக்கியப் படைப்பில் வேண்டும் என்பதைத் திறனாய்வுப் புலவன் வற்புறுத்த வேண்டும்.

ஒரு படைப்பாம் யாழில் எழுப்பிய ஆதார சுருதிக்கேற்றவாறு மற்றைய நரம்புகள் அடங்கிப் போகும்படி அதை மீட்டுவதுதான் கலையின் உச்சியாகும்.

தம் நாட்டுத் திறனாய்வுத் துறையில் வெறும் வியப்புக் குறிகளைத்தாம் பார்க்கின்றோம்: 'எத்தனை அழகு! எத்தனை சுவை!' என்று சொற்களை அடுக்கிக் கொண்டேபோனால், அது திறனாய்வாகி விடாது. இலக்கிய நடையிலும் நாம் கவனிக்க வேண்டிய ஓர் அமிசமும் உண்டு. வடசொல் தென்சொல் என்று பாராது கருத்திற்கேற்ற சொல் எது என்பதை ஆய்ந்து வழங்கவேண்டும். சொற்கள் கிடைக்காத நிலையில்தான் அன்னிய நாட்டு மொழிகளின் உதவியை நாம் நாடவேண்டும். சான்றாக, 'தேவர்கள் புஷ்ப வருஷம் வருஷித்தார்கள்' என்று வரியை அமைக்க வேண்டியதில்லை. 'வானவர்கள் மலர்மழை பொழிந்தார்கள்' என்று உரைத்தால் போதாதா? உன்னிப்பாருங்கள்.

கருத்தரங்கில் உண்மை ஒளியையே தஞ்சமாகப் புகுந்து ஒரு நக்கீரன்போல் கடவுளோடு வாதாடவேண்டும். ஒரு நசிகேதஸைப் போல நமனோடுங்கூட நாம் போர் புரியவேண்டும். வானமே இடிந்து விழுந்தாலும் உண்மையை நாடுவதுதான் திறனாய்வோனின் குறிக்கோளாகும்.

# சம்ஸ்கிருத நாடகங்கள்

பெ. திருஞான சம்பந்தன்

[வடமொழிப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை]

சம்ஸ்கிருத காவியத்தில் உரைநடை, செய்யுள் இவ்விரண்டும் விரவிவரும் சம்பூ, நாடகம் ஆகிய பிரிவுகள் அடங்கும். நாடகத்தைப் பற்றி விரிவாகக் கூறிய முதல் நூல் 'பரதநாட்டிய சாஸ்திர'மாகும். இந் நூல் கி. பி. மூன்றும் நூற்றாண்டில் எழுந்த தென ஒரு சாராரும், கி. மு. மூன்றும் நூற் றாண்டில் தோன்றியதென மற்றொரு சாராரும் கூறுவர்.

இந் நூல் தோன்றிய விதம் அந் நூலின் முதற்பகுதியிலே கீழே குறிப்பிட்டுள்ளவாறு காணப்படுகிறது: "வேதத்தில் கூறப்பட் டுள்ள பொருளை சூத்திரர் அறிய மாட்டா ராகையின் எல்லா வருணத்தாருக்கும் பொதுவான ஐந்தாவது வேதத்தை இயற்றும் படி தேவர்கள் பிரமனை வேண்ட, பிரமனும் இருக்கு வேதத்தினின்று நூற்பொருளையும், சாமவேதத்தினின்று பாடற் பகுதியையும், யஜுர் வேதத்தினின்று அபிநயப் பகுதியை யும், அதர்வவேதத்தினின்று மெய்ப்பாடு (ரசங்)களையும் எடுத்துக் கொண்டு ஐந்தாம் வேதமாகிய 'நாட்டிய வேதத்'தை இயற்றி னர். நாடகக் கலையில் தேவர்கள் வல்லவ ரல்லராகையால், பரத முனிவரைத் தன் புதல்வரைக் கொண்டு நடிக்கும்படி பிரமன் ஏவ, பரதரால் முதலில் 'அமிர்த பந்தனமும்' பின்னர் 'திரிபுரதாகமும்' நடிக்கப்பட்டன" எனக் கூறப் பட்டுள்ளது.

இக் குறிப்பின் அடிப்படையில் வேதத் தோடு தொடர்புள்ளது சம்ஸ்கிருத நாடகத் தோற்றம் என மாக்டானல் கூறுவர்; கிரேக்க நாடகமே மூலம் என விண்டிஷ் என்பார் கூறுவர். வேதத்தில் நாடகத்தைப் பற்றிய குறிப்பின்மையாலும், பொதுமக்க ளிடையே பயிலப்படும் பிராகிருத மொழிகள் பெருவாரியாக நாடகங்களில் கையாளப் படுவதாலும், பண்டைத் தமிழ் நூலில் இயல், இசை, நாடகம் என்ற கூறுபாடு காணப்படுவதாலும், 'பரதர்' என்ற மக்கள் திராவிட இனத்தைச் சார்ந்தவராயிருக்கக் கூடும் என்ற ஒரு கருத்தையும் ஒட்டித் திராவிடர் தொடர்பினால் வடமொழி நாடகம் தோன்றியிருக்கக்கூடும் எனப் பேராசிரியர் இந்துசேகர் கூறியுள்ளார்.

சம்ஸ்கிருத நாடகங்கள் (ரூபகங்கள்) பத்து வகைப் படுவன. அவை நாடகம், பிரகரணம், அங்கம், வியாயோகம், பாணம், ஸமவகாரம், வீதீ, பிரஹஸனம், டிமம், ஈஹாமிருகம் என்பவை ஆகும். இவற்றுள் நாடகமும் பிரகரணமும் பெரும்பாலான நாடகாசிரியர்களால் கையாளப்பட்டுள்ளன. நாடகத்தில் ஐந்து முதல் பத்து அங்கங்கள் இருக்கலாம். கதைப் போக்கில் எப்படிக் கதையின் மையப் பொருள் தொடங்கி, வளர்ந்து, இடருற்று, இடர் நீங்கப் பெற்று முடிவுறுகிறது என்பதை உணர்த்தும் வகையில் கதை அம்சத்தை ஐந்து சந்திகளாகப் பிரித்திருக் கின்றனர். ஒன்பது வகை மெய்ப்பாடு களில் காதல், வீரம் இவை இரண்டும் பெரும்பாலும் நாடகங்களில் கையாளப் படுபவை. 'நாடகத்தில்', தேவர், வேந்தர், உயர்ந்த மனிதர், இருடிகள் ஆகியோர் நாடக பாத்திரங்களாக அமைக்கப் பெறுவது மரபு. பிரகரணத்திலோவெனில், வணி கர், அமைச்சர் போன்றோரும், பொது மகளிரும் முக்கியப் பாத்திரமாக இருப்பர். 'நாடக'த்தின் கதை பெரும்பாலும் இராமா யணம், பாரதம், புராணம் ஆகியவற்றி லிருந்து எடுத்தாளப் பெறும். 'பிரகரண'த்தில்

---

குறிப்பு :—இக் கட்டுரையில் 'நாடகம்' என்ற சொல் உலகியல் வழக்கை ஒட்டிப் பொதுப் பெயராகவே வழங்கப்படுகிறது. சம்ஸ்கிருத நாடக இயலில் 'ரூபகம்' என்பதே பொதுச் சொல். 'நாடகம்' பத்து வகை ரூபகங்களுள் ஒரு வகை. ஒரு பாத்தி ரத்தின் தோற்றம், சொல், செயல், பண்பு ஆகியவை நடிகனிடத்தில் ஆரோபிக்க (ஏற்ற)ப்படுவதால், நடிகர்கள் பங்கு பெறும் இலக்கியத்திற்கு 'ரூபகம்' என்று பெயர்.

கதை ஆசிரியரின் கற்பனையினின்று எழுவதாகும். 'டிமத்'தில் நான்கு அங்கங்கள், 'ஸமவகாரத்'தில் மூன்று. 'வியாயோகம்' போன்றவற்றுள் ஒன்று என்றும், சந்திகளின் எண்ணிக்கையிலும் சுவையிலும் வேறுபட்டு நிற்பவை பிற 'பிரகரணங்கள்' என்றும், தொடக்கத்தில் ஓரங்க நாடகமாகிய 'பாணம்,' மூவங்க நாடகமாகிய 'ஸமவகாரம்' போன்ற 'ரூபக' வகைகள் வழக்கிலிருந்தன என்றும், பின்னர் அவையே வளர்ச்சியுற்று விரிவான 'நாடக' வகை தோன்றியதென்றும், ஆசிரியர்களின் முழு ஆற்றலையும் வெளிப்படுத்த 'நாடக' வகை இடமளித்ததால், பிற வகைகள் வழக்கொழிந்தன என்றும் ஆய்வாளர் கூறுவர்.

பொதுவாக 'பூர்வரங்கம்' என்று சொல்லப்படுகிற தெய்வ வழிபாட்டிற்குப் பின்னர் நாடகம் தொடங்கும். முதலில் சூத்திரதாரன் தன் மனைவி அல்லது நண்பனுடன் நாடகாசிரியன், நூல், நாடக நிகழ்ச்சிக்குரிய காலம் ஆகியவை பற்றி உரையாடுவான். உரையாடலின் இறுதியில் முதலில் தோன்றவேண்டிய நாடக பாத்திரத்தை இயல்பாக அறிமுகப் படுத்திவிட்டுச் சென்று விடுவான். நாடக மேடையில் காட்டத்தகாத, காட்ட இயலாத, காட்ட வேண்டாத போர், சிறப்பு, உண்டி போன்றவற்றைச் சேவகர், தோழியர் முதலிய சிறு பாத்திரங்களின் உரையாடல் வாயிலாக ஆசிரியர் சுட்டுவது வழக்கம். 'விஷ்கம்பகம்,' 'பிரவேசகம்' என்று அழைக்கப்படும் இப்பகுதிகள் இரண்டு அங்கங்களுக்கிடையே வரும். முடிவில் ஆசிமொழியான 'பரத வாக்கியம்' இடம்பெறும்.

சம்ஸ்கிருத நாடகங்கள் எண்ணிறந்தன. சிலவற்றின் கால வரையறை தெளிவாக்கப்படவில்லை.. முக்கிய ஒருசில நாடகங்களின் சிறப்பியல்புகளையே ஒருவாறு வரிசைப் படுத்தி இங்கே நாம் காணக்கூடும்.

காளிதாசரே நாடகாசிரியர்களுள் தலை சிறந்தவர் எனினும், அவருக்கு முன்னரே பாஸன், கவிபுத்திரன் போன்றோர் சிறந்த நாடகாசிரியர்களாகத் திகழ்ந்தனர் என்பது அவரது கூற்றிலிருந்து தெரிகிறது. பாஸனால் எழுதப்பட்டவை என்று கருதப்படுகின்ற நாடகங்கள் பதின்மூன்று. அவற்றுள் பாஞ்சராத்ரம், தூதவாக்கியம், மத்யமவியாயோகம், தூதகடோத்கசம், கர்ணபாரம், ஊருபங்கம் என்பவை மகாபாரதக் கதைப் பகுதிகளைத் தழுவியவை. 'பிரதிமா நாடகமும்' 'அபிஷேக நாடகமும்' இராமாயணப் பகுதிகளைத் தழுவியவை. 'பால சரிதம்' பாகவதக் கதையை ஒட்டியது. 'பிரதிக்ஞா யௌகந்தராயணம்,' 'சுவப்நவாசவதத்தம்,' 'சாருதத்தம்,' 'அவிமாரகம்' ஆகியவை பிற கதைகளை அடிப்படையாகக் கொண்டவை. இவை அனைத்தும் நடிப்பதற்கேற்ற எளிய வாக்கியங்கள் அமையப் பெற்றவை. விறுவிறுப்பும் ஓட்டமும் கொண்டவை.

காளிதாசன் இயற்றிய நாடகங்கள் மூன்று. அவை 'மாளவிகாக்கினி மித்திரம்,' 'விக்கிரமோர் வசீயம்,' 'அபிக்ஞான சாகுந்தலம்' என்பன. 'மாளவிகாக்கினி மித்திரம்' ஐந்து அங்கங்களைக் கொண்டது. கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அக்கினி மித்திரன் என்ற அரசனுக்கும் மாளவிகை என்ற அரசிளங்குமரிக்கும் இடையே அந்தப்புரத்தில் நிகழ்ந்த காதலை மையமாகக் கொண்ட நாடகம். 'விக்கிரமோர்வசீயம்' புரூரவஸ் என்ற மன்னனுக்கும் உர்வசீ என்ற தேவமாதிற்குமிடையே விளைந்த காதலை அடிப்படையாகக் கொண்டது. இதிலும் ஐந்து அங்கங்களே உள்ளன. நான்காவது அங்கத்தில் உர்வசியைப் பிரிந்த புரூரவஸ் புலம்புகின்ற காட்சி, சீதையை விட்டுப் பிரிந்த இராமன் இராமாயணத்தில் புலம்புவதை ஒத்த உருக்கமான காட்சி. விதூஷகன் என்ற கோமாளி இம்மாதிரி நாடகங்களில் தோன்றி அரசனுக்கு உற்ற நண்பனாக வருணிக்கப்படுவது மரபு. 'அபிக்ஞான சாகுந்தலம்' என்ற நாடகம் ஏழு அங்கங்களைக் கொண்டது. இதில் வரும் சகுந்தலையும், துஷ்யந்தனும், கண்வரும், பிறரும் அமரத்துவம் பெற்ற பாத்திரங்கள். இக்கதை மகாபாரதத்தினின்றும் எடுக்கப் பெற்றுக் கவிஞனின் அற்புத ஆற்றலால் நாடக இயல்புகள் முற்றிலும் கொண்ட ஒரு கலைப் படைப்பாகத் திகழ்வது. இந் நாடகம் நம் நாட்டிலும், பிற நாடுகளிலும் பல மொழிகளில் பெயர்க்கப் பட்ட சிறப்பு வாய்ந்தது. ஜோன்ஸ், கெதேபோன்ற மேனாட்டு நல்லறிஞர்களாலும், பாணன், தண்டி போன்ற சம்ஸ்கிருதக் கவிமணிகளாலும், அரவிந்தர், மறைமலை அடிகள் போன்ற பெருமக்களாலும் இந் நூல் போற்றப்படுவதில் வியப்பென்ன ?

காளிதாசனுடைய நாடகங்களில் இயற்கையும் மனிதப் பண்பும் இழைந்தோடுவதைக் காணலாம். கருத்துக்களைக் குறிப்பால் உணர்த்தும் பெற்றியைக் காணலாம். சொன்னயத்தையும், பொருட்செறிவையும் கொண்ட காவியப் பண்பினைக் காணலாம். உணர்ச்சியையும் மெய்ப்பாட்டையும் சித்திரிக்கும் சிறப்பினைக் காணலாம். உவமை நயத்தை ஆள்வதில் ஒப்பற்றவர் அவர். குணச்சித்திரங்களைத் தீட்டுவதில் திறம் படைத்தவர். அவர்களை அத்தனை ஏற்ற இடத்தில் அமைக்கும் ஆற்றல் மிக்கவர்

'பிரகரண' வகையைச் சார்ந்தது 'சூத்ரகன்' என்பவர் இயற்றிய 'மிருச்சகடிகை' ஆகும். சூத்ரகர் என்ற அரசன் ஓர் நாடகாசிரியர். இவர் கிறிஸ்துவ சகாப்தத் தொடக்கத்தில் வாழ்ந்திருக்கக் கூடும் எனச் சிலர் கருதுகின்றனர். இந் நூல் பத்து அங்கங்களைக் கொண்டது. வாணிபத் தொழில் புரிந்த சாருதத்தன் என்னும் அந்தணன் ஈத்துவந்து வறுமையிலே செம்மையாக வாழ்ந்தவன். அவனே கதாநாயகன். நற்பண்பின் உறைவிடமாய், கலைக் களஞ்சியமாய் விளங்கிய வசந்தசேனை என்னும் பொது மகள் அவரைக் காதலிக்கிருள். அந்நாட்டு வேந்தனின் மைத்துனனுகிய சகாரன் வஸந்தசேனையைக் காதலிக்கிருன். ஒவ்வாக் காதலால் சகாரன் அவளையும், அவள் காதலனை சாருதத்தனையும் துன்புறுத்துகிறன். இறுதியில் வஸந்தசேனையின் தூய காதலே வெல்கிறது. இது எளிய நடையில் எழுதப்பட்ட உயிரோட்ட முடைய விறுவிறுப்பான நாடகம். காதலோடு நகைச்சுவை, அவலச்சுவை முதலிய பலவும் இதில் இடம் பெற்றுள்ளன.

விசாகதத்தன் என்பவரால் 'முத்ராராக்ஷஸம்' என்னும் நாடகம் கி.பி. ஏழாம் நூற்றுண்டில் எழுதப்பட்டது. இது ஏழங்கங்கள் கொண்டது. நந்த வம்சத்தை அழித்து, சந்திரகுப்தனை அரசனுக்கி, அவனுடைய ஆட்சி நிலைபெறுவதற்கு நந்தர்களுக்கு உற்ற அமைச்சனுக இருந்த ராக்ஷசனை அரசியல் சூழ்ச்சிகளால் சந்திரகுப்தனுக்கே மந்திரியாகச் செய்வித்த சாணக்கியனின் அருஞ் செயல்கள் இதில் விவரிக்கப் பட்டுள்ளன. இதில் பெண்பாத்திரமே இல்லை. அரசியல் நிகழ்ச்சிகளையே முழுவதும் அடிப்படையாகக் கொண்ட தனிச் சிறப்பு வாய்ந்த நாடகம் இது.

கி.பி. எட்டாம் நூற்றுண்டில் கான்யகுப்ஜத்தில் வாழ்ந்த பவபூதி என்னும் ஆசிரியர் காளிதாசனுக்கு அடுத்த நிலையில் போற்றப்படும் நாடகாசிரியர். இவர் எழுதியுள்ள 'மஹாவீர சரிதமும்,' 'உத்தரராம சரிதமும்' இராமாயணக் கதையைச் சித்தரிக்கும் நாடகங்கள். முன்னையதில் வீரமும் பின்னையதில் சோகமும் முக்கிய மெய்ப்பாடாகும், 'மாலதீமாதவம்' என்னும் 'பிரகரணம்' காதற்சுவையை மையமாகக் கொண்டது. ஆசிரியர் கையாளுகின்ற நடை கடினமானது. தனது புலமையை நீண்ட சொற்றெடர்களிலும், செய்யுட்களிலும் கொட்டியிருக்கிருர். ஆதலால், காளிதாசனது நாடகங்களைப்போல் நடிப்பதற்கு இவை எளியவை அல்ல.

பல்லவ வேந்தனுன மகேந்திர விக்கிரவர்மன் (600 630) 'மத்தவிலாச பிரஹசனம்' என்ற நகைச்சுவை மிக்க நாடகத்தை இயற்றியுள்ளான். அதே காலத்தில் ஹர்ஷவர்த்தனர் 'ரத்னுவளி,' 'பிரியதர்சினி' 'நாகானந்தம்' என்ற நாடகங்களை இயற்றினுர். இவை நாடக இலக்கணங்களைப் பின்பற்றி எழுதப்பட்டவை. முன்னைய இரண்டும் காளிதாசனின் 'மாளவிகாக்னிமித்திரத்'தை ஒத்த முறையில் உதயணன் வரலாற்றை அடியொற்றி எழுதப்பட்டவை. இவை நாலங்கங்கள் கொண்ட 'நாடிகை' வகையைச் சார்ந்தவை. 'நாகானந்தம்' ஐந்து அங்கங்கள் கொண்ட நாடகம். இதில் காதலும் சாந்தமும் இடம்பெறுகின்றன. அஹிம்சை வலியுறுத்தப் படுகிறது.

பதினென்ரும் நூற்ருண்டில் வாழ்ந்த கிருஷ்ணமிசிரர், 'பிரபோதசந்திரோதயம்' என்ற நாடகத்தை இயற்றினுர். இது அத்வைத வேதாந்தக் கருத்துக்களை விளக்குவதற்கு நாடக முறையைப் பயன் படுத்தும் ஒரு புது முயற்சி. இதில் வரும் பாத்திரங்கள் 'விவேகம், மகாமோகம்' போன்ற கருத்துக்களேயன்றி மக்கள் அல்லர். இவ்விரண்டிற்கும் போர் நிகழ்வதாகவும், பிரபோதம் என்ற சந்திரன் உதயமானவுடன் இப்போர் முடிவடைவதாகவும் கூறுவது இது. இத்தகைய நாடகங்கள் நடிப்பதற் கேற்றவையாக அமையாததில் வியப்பில்லை.

*With Best Compliments*

FROM

# Sri Palaniappa Transports

*(Approved by Indian Banks' Association)*

**Fleet Owners and Cargo Movers.**

*Head Office:*

18, Basin Water Works Street, Madras

Phone: **20191** & **20192**

Grams: "**PALTRANS**" Madras.

*Branches:*

Throughout Gujarat—Maharashtra—Mysore—Madras
Kerala & Andhra States

*Our Bombay Branch:*

Flat No. 24-A, Fourth Floor,
Swastik Chambers,
Carnac Road, **Bombay-1.**

Phone Call: 262398.

*Ahmedabad Branch:*

2044/2, Haranvali Pole Naka
Near Panchkuwa Gate

**Ahmedabad-1.**

# தமிழ் நூற்றொகை

வே. தில்லைநாயகம்

[நூலகர், கன்னிமாரா பொது நூலகம், சென்னை.]

## நூல் :

பஞ்சினை நூற்று இழை ஆக்கி உருவாக்குவது நூல். அதுபோலவே உவமையாகு பெயராய்ச் சொற்களை இழைத்து, இணைத்து உருவாக்குவதும் நூல் என்று பெயர் பெற்றது.

நூல் ஒருவர் கருத்தை அடுத்தவருக்கு எடுத்துரைக்கும் கருவியாய், ஒரு குறிப்பிட்ட உருவில் அடங்கியதாய், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எளிதில் எடுத்துச் செல்ல வசதியாய் அமைவதாகும்.

இங்ஙனம் அமையும் நூல் அறியாமையை அகற்றி அறிவினை வளர்க்கவேண்டும். ஆழமான கருத்தையும் எளிய நடையில் இனிய சொற்களால் நிரல்பட எடுத்துரைக்க வேண்டும். அதுவும் வாழ்வின் அடிப்படையான அன்புபற்றி, பொருள் பற்றி, இன்பம்பற்றி, அறம்பற்றி அழகாகச் சொல்லவேண்டும். சரியாகச் சொன்னால், தன்னூலாசிரியர் பவணந்தியார் கூறியது போல எழுமதம் தழுவி, ஐயிரு குற்றமகற்றி அழகு பத்தும் சேர்த்து முப்பத்தியிரண்டு உத்திகளுடன் இலங்க வேண்டும்.

இத்தகு நூற்கள் ஆதியில் களிமண் கட்டியில், பாப்பிரசு கோரைத் தாளில், தோலில், மெழுகு தடவிய பலகையில், ஓலையில்,உலோகத் தகட்டில், கடைசியாகக் காகிதத்தில் உருவாகி வந்தன. இதற்குக் காலமும், பொருளும், சக்தியும் அதிகம் தேவையாயிருந்தது. எனவே, நூற்களின் உற்பத்தி மிக அருகியே இருந்தது.

ஆனால், அறிவு முன்னேற்றத்தின் விளைவால் — காகிதம் கண்டு பிடிக்கப்பட்டதின் தொடர்பால் — அச்சுக்கலை வளர்ச்சியின் தொடர்பால் — பழைய நிலை மாறிவிட்டது. இன்று அழகான அமைப்பில், வண்ண ஓவியங்களுடன் கண்டாரைப் பிணித்து, காணுதாரும் வேட்ப, பொழுதாயிரம் நூல்கள் வெளிவந்த வண்ணமாயுள்ளன.

## உலகிலே :

ஐக்கிய நாடுகள் அவை வெளியீடொன்றின் கணக்குப்படி 1962–ல்மட்டும் வெளியான நூற்களின் சில விவரமாவது :

| நாடு | நூல்கள் |
|---|---|
| ருஷியா | 79,140 |
| ஐக்கிய அரசு | 25,079 |
| ஜப்பான் | 22,010 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 21,901 |
| ஜெர்மனி (மேற்கு) | 21,481 |
| இந்தியா | 11,086 |
| நெதர்லாந்து | 9,674 |
| ஸ்பெயின் | 9,556 |
| செக்கோசுலாவாகியா | 8,703 |
| ருமேனியா | 7,359 |
| போலந்து | 7,162 |
| ஜெர்மனி (கிழக்கு) | 6,540 |
| யுகோசுலாவியா | 5,637 |
| சுவிட்சர்லாந்து | 5,633 |
| சுவீடன் | 5,472 |
| வியட்நாம் | 1,515 |
| கிரீசு | 1,277 |
| நியூசிலாந்து | 1,212 |
| சில்லி | 1,040 |
| பெரு | 791 |
| கியூபா | 736 |
| அல்பேனியா | 571 |
| கௌதமாலா | 500 |
| ரொடிஷியா | 369 |
| மலாசியா | 338 |
| சாதி அரேபியா | 321 |
| சிங்கப்பூர் | 237 |

## இந்தியாவிலே :

பிற நாடுகளை மறந்து இந்தியாவை மட்டும் பார்த்தால் கூட, ஓராண்டில் (1963 – 64ல் மட்டும்) கன்னிமாரா

நூலகத்திற்குக் கணக்குக் கிடைத்த வரை 13,412 நூல்கள் வெளியாயுள்ளன.

அவற்றின் விவரமாவது :

| மொழி | நூல்கள் |
|---|---|
| ஆங்கிலம் | 4,686 |
| இந்தி | 2,727 |
| மராத்தி | 1,167 |
| தமிழ் | 1,164 |
| வங்காளி | 722 |
| குஜராத்தி | 696 |
| தெலுங்கு | 548 |
| மலையாளம் | 544 |
| கன்னடம் | 375 |
| உருது | 341 |
| ஓரியா | 54 |
| அசாமி | 27 |
| பிற | 131 |

## நூற்றொகை :

இப்படி வெளியாகும் நூல்களில் தமிழ் நான்காவது இடம் பெறுகிறது. இந்த முறையிலே மனிதன் எழுதத் தொடங்கிய நாளிலிருந்து இன்றுவரை ஆயிரமாயிரம் நூல்கள் — தமிழ் நூல்கள் — வெளியாகியுள்ளன. அவைகளைப் பற்றியெல்லாம் படிக்கத் தெரிந்தவர் — படிக்க விரும்பியவர் — வரன் முறையாக அறிந்துகொள்ள ஒருவழி தேவை. அதற்கான முயற்சிதான் — நூல்களின் தொகை — 'நூற்றொகை' எனப்படும். இந்த நூற்றொகை நூல்களின் பெயர்களை மட்டும் தொகுத்துக் கொடுக்கலாம். நூல்களையும் ஆசிரியர்களையும் இணைத்துச் சொல்லலாம்; நூல்களின் முழு விவரத்தையும் விளக்கிச் சொல்லலாம்; ஒரு துறையில் உள்ளவைகளை ஒன்றுக்கிக் காட்டலாம்; ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெளியானதைச் சேர்த்துக் கூறலாம்; ஒரு குறிப்பிட்ட செயலுக்கு எடுத்துக் காட்டலாம். இப்படிப் பல வகையிலே பல தமிழ் நூற்றொகைகள் வெளியாயுள்ளன. எனினும், நூற்றொகை இல் பகுப்பு முறைப்படி நூற்றொகைகளை 12 வகையாகப் பிரிக்கலாம். அவையாவன :

### 1. படிப்புப் பெயர்ப் பட்டிகள் (Reading lists)

இது நல்ல நூல்களின் தொகுப்பு. படிக்கும் கருத்துடைய ஒருவருக்கு உதவுவதற்காகத் தொகுக்கப் படுவதாகும். பெரும்பாலும் நூலகங்களும், நூலகக் கழகங்களும் வாசகர்களின் நன்மைக்காக அப்போதைக் கப்போது ஒரு குறிப்பிட்ட தலைப்பில் தொகுத்துத் தரப்படும்.

இம்முறையிலே சென்னைப் புத்தகாலய சங்கம் சில படிப்புப் பெயர்ப் பட்டிகளை முன்னால் வெளியிட்டது.

இதிலேயே சற்று உயர்நிலை கொண்டது பாடத்திட்ட நூற்றொகைகள் (Curricular Bibliographies). இதனைப் பல்கலைக் கழகங்களும், பிற உயர் கல்வி நிலையங்களும் ஒவ்வொரு வகுப்புக்கும் பாடப் புத்தகமாகச் சில நூல்களையும், குறிப்புதவு நூல்களையும் அறிவித்து வருவது வழக்கம்.

இம்முறையிலே சென்னை, ஆந்திர, அண்ணாமலை, கேரள, வெங்கடேசுவரா, மைசூர் பல்கலைக் கழகங்கள் வெளியிடும் தமிழ் நூற்றொகைகள் காணத் தக்கவை.

### 2. ஆக்கியோரின் நூற்றொகைகள் (Authors' Bibliographies)

இது ஒவ்வோர் ஆசிரியரும் தனது நூல்களிலே ஒரு பொருள்பற்றி விளக்கிக் கொண்டு போகும்போதே, அதன் சம்பந்தப்பட்ட வேறு பல நூல்களை இடையிடையே அல்லது அடிக்குறிப்பாகக் குறிப்பிடுவதுண்டு. சில சமயம் அவை நூலின் கடைசியில் தொகுத்தும் தரப்படுவதுண்டு.

இம்முறையிலே பூரணலிங்கம் பிள்ளை, சீனிவாசப்பிள்ளை, கனகசபைப்பிள்ளை, மறைமலையடிகள், திரு. வி. கலியாணசுந்தரனார், உ. வே. சாமிநாதையர், ஜெகவீர பாண்டியனார், மயிலை சீனி. வேங்கடசாமி, மு. வரதராசன் முதலிய தமிழறிஞர்கள் தங்கள் நூல்களில் எண்ணற்ற நூல்களைக் குறிப்பிட்டுள்ளனர்.

### 3. நூலக நூற்பட்டிகள் (Library Catalogues)

ஒவ்வொரு நூலகமும் தன் இருப்பு விவரத்தை அச்சிட்ட நூற்பட்டியாக வெளியிடுவதுண்டு. இது அந்த நூலகத்திலுள்ள நூல்களின் விவரத்தைமட்டும் — ஆசிரியர், நூல் தலைப்பு, வெளியான காலம் — தரும்.

இம் முறையிலே இலண்டனிலுள்ள பிரிட்டன் காட்சியகம் சார்ந்த நூலகத்தி

லுள்ள தமிழ் நூல்களின் பட்டியலொன்று 1909-ல் வெளியாயிற்று. அதைத் தொகுத்தவர்கள் ஜி. யு. போப்பும், எல். டி. பார்னெட்டும் ஆவர். அதற்கு அனுபந்தமாக பார்னெட்டு தயாரித்த பட்டியொன்று 1931-ல் வெளியானது.

இதைப் போலவே திருப்பனந்தாளில் அமைந்திருக்கும் செந்தமிழ் கல்லூரியின் 'சகல கலாவல்லி நூல்நிலையப்' புத்தகப் பட்டியலொன்று 1947-ல் வெளியாயது.

இதைப் போன்றே அவ்வப்போது பல நூலகங்கள் பல நூற்பட்டிகள் வெளியிட்டுள்ளன.

### 4. நூல் தேர்வு பெயர்ப் பட்டிகள் (Book-selection lists)

இம்முறையிலே பெரும்பாலும் தேசீய நூலகக்கழகங்கள், பெரு நூலகங்கள், நூலக அலுவலகங்கள் நூலகத் துறையிலும், குறிப்பிட்ட பொருள் துறையிலும் விவரமறிந்தவர்களைக்கொண்டு நூலகங்களுக்கு உதவும் வகையில் நூற் தேர்வு பெயர்ப் பட்டிகள் வெளியிடுவதுண்டு.

இதன்படி சென்னை புத்தகாலயச் சங்கம் சில பட்டிகளை வெளியிட்டது. 1953-ல் சென்னை பொது நூலக நெறியாளர் அலுவலகம் சில பட்டிகளை வெளியிட்டது.

### 5. நூலார்வலர் நூற்றொகைகள் (Bibliophilic Bibliographies)

இது நூலார்வலர் தான் கொண்ட நூலார்வத்தின் காரணமாகத் தொகுத்த நூற்றொகையாகும். இது ஒரு மொழியில் வெளியான நூற்றொகையாக இருக்கலாம்; அல்லது குறிப்பிட்ட ஒரு பொருள் பற்றிய தொகையாகவும் இருக்கலாம்.

இம்முறையிலே டெய்லர் பாதிரியார் வெளியிட்ட கீழை நாட்டுக் கையெழுத்துப் படி முதலிய நூல்களின் நூற்பட்டியும், கிறிஸ்துமதப் பிரசாரகர் ஜான் மர்டாக் 1865-ல் வெளியிட்ட அச்சிட்ட நூல்களின் பட்டியும் குறிப்பிடத் தக்கவை யாகும்.

### 6. வணிக நூற்பட்டிகள் (Trade Catalogues)

இன்று கிடைக்கும் நூல்களின் விவரத்தை—ஆசிரியர், நூல் தலைப்பு, பொருள் விளக்கம், விலை, வெளியீட்டாளர், வெளியான காலம் முதலியன நல்ல முறையில் தருவன வணிக நூற்பட்டிகளாகும்.

இம்முறையிலே இன்று சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், வள்ளுவர் பண்ணை, பாரி நிலையம், ஸ்டார் பிரசுரம், அல்லயன்ஸ் கம்பெனி, கலைமகள் காரியாலயம் முதலிய வணிக நிலையங்கள் தங்களிடம் கிடைக்கும் நூல்களின் பட்டியை அவ்வப்போது வெளியிட்டு வருகின்றன.

### 7. பதிப்பாளர் நூற்பட்டிகள் (Publishers' Catalogues) :

இன்று ஒவ்வொரு பதிப்பாளரும் தங்களின் நூல்களை விளம்பரப் படுத்தும் பொருட்டு நூற்பட்டிகள் வெளியிட்டு வருகின்றனர். இவை நூலின் மதிப்பீட்டையும் பிற விவரங்களையும் தொகுத்துத் தருகின்றன.

இம்முறையிலே சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அதன் 1008 நூற்களுக்கான நூற்பட்டியொன்று வெளியிட்டுள்ளது. இது ஒரு புது முயற்சி; முதல் முயற்சியுங் கூட. இதையடுத்து 1958-ல் வள்ளுவர்பண்ணை வெளியிட்ட நூற்பட்டியும் குறிப்பிடத்தக்கது.

### 8. உரிமை நூற்பெயர்ப் பட்டிகள் (Copyright Lists)

ஒவ்வோர் அரசும் தனதாட்சிப் பகுதியில் வெளியாகும் நூற்களின் வெளியீட்டுரிமையைக் காக்கவும், கண்காணிக்கவும், நூலகப் பணிக்காகவும் சில சட்டங்களைக் கையாண்டு வருகிறது.

அம்முறையிலே இந்தியாவில் —தமிழகத்தில்— 1847-லும், 1914-லும் நிறைவேற்றப்பட்ட உரிமைப் பதிவுச் சட்டங்கள் (Copyright Acts of 1847, 1914&1957) படி நூல்களின் உரிமை பதிவு செய்யப்படுகின்றன. ஆனால், அந்த விவரங்கள் நூலாக வெளிவருவதாகத் தெரியவில்லை. நூலாக வெளிவரின் உதவியாயிருக்கும்.

அதையடுத்து 1867-ல் நிறைவேறிய அச்சகம், நூற்பதிவுச் சட்டம் (Press and Registration of Books Act, 1867)படி தமிழகத்தில் பதிவான நூல்களின் பட்டி ஒன்றை அரசு தமிழ்நாட்டு அரசிதழில் வெளியிட்டு வருகிறது.

இம்முறையிலே 1867-முதல் 1889-வரை பதிவான நூல்களுக்கான தொகுப்பு நூற்பட்டி ஒன்று 1894-ல் சென்னை ஆவணக்களரி (Madras Record Office) யால் வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து 1890—1900 ஆண்டுகளுக்கான தொகுப்பு ஒன்று 1963-லும், 1901—1910 ஆண்டுகளுக்கான தொகுப்பு ஒன்று 1964-லும் வெளியாகியுள்ளன ஆங்கிலத்தில்.

அதைப் போலவே 1867-முதல் 1900-வரை பதிவான தமிழ் நூல்களின் தொகுப்பு நூற்பட்டி ஒன்று தமிழ் நாடு அரசினர் 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தா'ரால் வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை முதல் தொகுதியில் மூன்று பகுதிகள் வெளிவந்துள்ளன. 1901-முதல் 1950-வரை பதிவான நூல்களுக்கு நூற்றொகை வெளியிடத் திட்டமுள்ளது.

இதையடுத்து 1948—ல் நிறைவேறிய சென்னை மாநில நூலகச் சட்டம் (Madras Public Libraries Act, 1948) கொண்டு தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ள நூலகங்களுக்கு உதவும் வகையில் தமிழகத்தில் 1951-ல் வெளியான தமிழ் நூல்களின் தொகை ஒன்று 1957-ல் சென்னைப் பொது நூலக நெறியாளரால் வெளியிடப்பட்டது. தொடுத்து 1954-ஜனவரி—மார்ச்சு காலப் பகுதிக்கு ஒரு நூற்றொகையும், 1954-ஏப்ரல்—ஜூன் காலப் பகுதிக்கு ஒரு நூற்றொகையும் வெளியாயது.

இப்பணி சில நிர்வாக காரணங்களால் தொடர்ந்து நடக்க இயலவில்லை. எனினும், அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, 1964 ஜூலை முதல் தமிழ்நாட்டு நூற்றொகை (தமிழ்) திங்கள் தோறும் வெளியாகிறது.

இதைத் தொடுத்து இந்திய அரசாங்கம் இந்தியாவிலுள்ள முக்கிய நூலகங்கள் நான்கிற்கு—(தேசீய நூலகம், கல்கத்தா; கன்னிமாரா பொது நூலகம், சென்னை; நகரமன்றமைய நூலகம், கல்கத்தா; பாராளுமன்ற நூலகம், தில்லி)— ஒவ்வொரு பதிப்பாளரும் அவர்கள் வெளியிடும் நூல்கள், பருவ வெளியீடுகள், செய்தித்தாள்கள் ஒவ்வொன்றிலும் ஒரு படியை இலவசமாக அனுப்பிவைக்க வேண்டுமெனப் பொது நூலக வினியோகச் சட்டம் [Delivery of Books (Public libraries) Act, 1954] ஒன்று நிறைவேற்றியது.

அதன்படி கல்கத்தா தேசீய நூலகத்திற்கு வந்த நூல்களின் தொகை ஒன்று (Indian National Bibliography) 1958-முதல் ஆங்கிலத்தில் வெளிவருகிறது. அதில் ஒரு பகுதி தமிழ் நூல்களின் விவரங்களைத் தருகிறது. இவ் வெளியீடு 1958 முதல் 1963 வரை மூன்று திங்கட்கொரு முறை வெளிவந்து ஆண்டிற்கொருமுறை தொகுப்பாக வெளிவந்தது. 1964 முதல் திங்கள் தோறும் வெளிவருகிறது.

இதையடுத்து ஒவ்வொரு ஆண்டிலும் வெளிவந்த தமிழ் நூல்களின் பட்டியைத் தனியாகத் தமிழிலும் தரப்படுகிறது. இதன்படி இதுவரை 1958-லிருந்து 1962 வரை வந்திருக்கிறது.

இந்த முயற்சிகளைத் தவிர தனிப்பட்ட முறையில் சென்னை புத்தகாலயச் சங்கதினர் சென்னை ஆவணக் களரியிலுள்ள நூல்களுக்கு விவரம் தொகுத்தனர். ஆனால் அதைத் தொடர்ந்து தொகுத்து வெளியிட முடியாது அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கு விற்று விட்டனர். இன்றும் அவை அந்நிலையிலேயே யுள்ளன. அச்சேறுங் காலம் என்றே!

இதைத் தவிர மத்திய கல்வித்துறை அறிவுரைக் குழு தில்லியில் நடைபெற்ற 24-வது 25-வது கூட்டங்களில் நாட்டின் பல்வேறு மொழிகளிலும் வந்துள்ள குழந்தை நூல்களைத் தொகுத்து குழந்தை நூற்றொகை கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென பரிந்துரைத்தது. அதன்படி நல்லது செய்வதில் நாளும் முன்னிற்கும் தமிழ் நாட்டு அரசாங்கம் தமிழ் நாட்டுக் குழந்தை நூற்றொகை (Madras State Bibliography of childrens literature in Tamil) வெளியிட முடிவு செய்தது. அதன்படி 1964 முதல் திங்கள் தோறும் அத்தொகை வெளிவந்து கொண்டிருக்கிறது.

### 9. கட்டுவார் நூற்றொகைகள் (Binder Bibliographies)

நூற்கட்டும் பணி (binding)யிலுள்ள பெரு நிலையங்கள் தாங்கள் கட்டி முடித்த நூற்களுக்கு நூற்றொகைகள் வெளியிடலாம். மேனாட்டில் அம்முறையில் தொகைகள் வெளிவந்துள்ளன. ஆனால், தமிழ் நூல்களுக்கான கட்டுவார் நூற்றொகைகள் அச்சாகி வெளியானதாகத் தெரியவில்லை.

## 10. அச்சக நூற்றொகைகள்
## (Printer Bibliographies)

நூல் ஒவ்வொன்றும் அச்சகத்தில் உருவாகித்தான் வெளிவருகின்றன. எனவே, அச்சகங்கள் தொகுக்கும் நூற்றொகைகள் அதிகார பூர்வமாகவும், முழுமையானதாகவுமிருக்கும்.

இம் முறையில் யாரும் அச்சக நூற்றொகை வெளியிட்டதாகத் தெரியவில்லை. முயன்றால் ஆதிநாளிலிருந்து செயற்பட்டு வரும் அச்சகங்கள் செய்யலாம். ஆனால், இன்று அச்சக நூற்பதிவுச் சட்டபடி பதிவான நூல்களின் நூற்றொகை முழுமையடைவதற்கு அச்சகங்கள் பெரிதும் உதவியுள்ளன எனக் கூறலாம்.

## 11. ஆசிரியர் நூற்றொகைகள்
## (Author Bibliographies)

ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் எழுதிய நூற்களின் தொகை ஆசிரியர் நூற்றொகை எனப்படும். இதை ஆதியில் பெரும்பாலும் ஆசிரியரே குறிப்பிட்டுவிடுவதுண்டு.

சான்றாகச் சொன்னால், திருவாட்டி வை. மு. கோதைநாயகி அம்மையார் தாம் எழுதும் ஒவ்வொரு புதினத்திலும் அப்புதினத்திற்கு முன் வந்துள்ள புதினங்களின் பெயரையெல்லாம் கதைப் போக்கிலேயே கூறியிருக்கிறார்கள்.

அடுத்து ஒவ்வொரு ஆசிரியரும் தனது நூல்களின் விவரத்தைத் தருவதுண்டு. திருவாளர்கள் மயிலை சீனி வேங்கடசாமி, மு. வரதராசன், கு. இராஜவேலு, ந. சஞ்சீவி முதலியோர்களின் நூல்களிலே இத்தகு குறிப்புகளைக் காணலாம்.

இதையடுத்து வாழ்க்கை வரலாற்று நூல்களிலே அந்தந்த நூல் தலைவர் எழுதிய நூல்களின் விவரங்களைத் தருவதுண்டு.

இம்முறையிலே கந்தையாப் பிள்ளையின் 'தமிழ்ப் புலவர் அகராதியும்,' இராமசாமிப் புலவரின் 'தமிழ்ப் புலவர் வரிசையும்,' 'தமிழ்ப் புலவர் அகரவரிசையும்' குறிப்பிடத்தக்கவை யாகும்.

மேலும், ஒவ்வோர் ஆசிரியரின் நூல்களையெல்லாம் தொகுத்தும் வெளியிடும்போது—வாழ்க்கைக் குறிப்புப் பகுதியிலோ, அல்லது நூலிடையிலோ, அல்லது நூலின் கடைசியிலோ வெளியிடுவதுண்டு.

இம்முறையிலே பாரதி நூல்கள், காந்தி நூல்கள், விவேகானந்தர் நூல்கள், முதலிய தொகுப்புகள் குறிப்பிடத் தக்கவையாகும்.

இஃதன்றி, பெரியார்களின் மணிவிழா, நூற்றாண்டு விழா போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளின் நினைவாக நினைவு மலர்கள் வெளியாகும்போது, தொடர்பு கொண்ட பெரியாரின் நூல்களைத் தொகுத்துக் கொடுப்பதுண்டு.

இவைகளைத் தவிரப் பருவ இதழ்களிலும் பிற வெளியீடுகளின் தேவைக்கேற்ப தொடர்பு கொண்டாரின் நூற்றொகைகளை வெளியிடுவதுமுண்டு.

## 12. பொருள் நூற்றொகைகள்
## (Subject Bibliographies)

ஒரு குறிப்பிட்ட தலைப்பு அல்லது ஆசிரியர் அல்லது பொருட் பிரிவு அல்லது பொருள் தொடர்பாகத் தொகுக்கப்படும் தொகை 'பொருள் நூற்றொகை' எனப்படும். இது தொகுக்கப்படும் பொருண்மை (material) பற்றி—கையெழுத்துப்படி (manuscript) நூற்றொகை, ஓலைச்சுவடி (palm leaves) நூற்றொகை, அச்சுப்படி (printed books) நூற்றொகை என்றும் அமையலாம்.

அப்படி அமைவதும் ஒரு குறிப்பிட்ட பொருண்மை அடிப்படையில் அமைவதும் முழு நூல்களுக்குத் தொகையாக அமைக்கலாம்; பல்வேறு நூல்களின் பகுதிகளைத் தொகுத்தும் அமைக்கலாம்; பல கட்டுரைகளைத் தொகுத்தும் அமைக்கலாம்.

இப்படி அமைப்பதும் ஒரு குறிப்பிட்ட அறிவுத்துறை முழுமைக்கும் அமைக்கலாம். அதாவது, 'இலக்கியம்' என்று இருக்கலாம்; இல்லாவிட்டால், ஒரு மொழிக்கு இறங்கித் 'தமிழ் இலக்கியம்' என்று அமையலாம்; மேலும், தொடர்ந்து தமிழ்ச்செய்யுள், அந்தாதி, பதிற்றந்தாதி என்று குறுகிக் கொண்டும் போகலாம்.

அதையடுத்து ஒவ்வொரு பொருள் துறையிலும் நூல்கள்—நூற்கருத்துகள்—வெளியாகும் பாணியைக் கொண்டு கட்டுரை நூற்றொகை என்றும், சொற்பொழிவுகள் நூற்றொகை என்றும், நினைவு மலர்கள் நூற்றொகை என்றும் சுருக்கலாம்.

இத்தகு முயற்சிகளை அரசுகள், கல்வி அல்லது தொழில் நிறுவனங்கள், நூலகக்

ழகங்கள், நூலகங்கள், நூலார்வலர்கள், நூலாசிரியர்கள், நூலகர்கள், வாசகர்கள் முதலியோர் அவ்வப்போது தேவைக்கேற்ப, காலத்திற்கேற்ப நூற்றொகைகள் தொகுப்பதுண்டு.

## தமிழ் நூற்றொகை
## (Tamil Bibliographies)

மேற்கூறியவைகளைத் தவிர மேனாடுகளில் பல நூலகங்களில் ஏராளமான தமிழ் நூல்கள்—கையெழுத்துப்படிகளாக, ஓலைச் சுவடிகளாக, அச்சுப்படிகளாக இருப்பதாக அவ்வப்போது செய்தித்தாள்களில் செய்திகள் வெளிவருகின்றன.

இவைகளையெல்லாம் பார்க்கும்போது, தமிழகத்தில் 1679ல் அச்சுவேலை தொடங்கப் பட்டதாகக் கூறும் காலத்திலிருந்து இன்றுவரை பல்லாயிரக்கணக்கான தமிழ் நூல்கள் அச்சாகித் தமிழகத்திலும், உலகின் பல பகுதிகளிலும் இருப்பது புலனாகிறது.

இவையனைத்திற்கும் ஒரு நூற்றொகை தமிழ் நூற்றொகை — தொகுக்கவேண்டும் என்ற எண்ணம் தமிழர்கள் உள்ளத்திலே நெடுங்காலமாக இருந்து வருகிறது. அவ்வப்போது சில முயற்சிகள் நடந்தேறி வருகின்றன. ஆனால், அது போதாது.

தமிழ் நூற்றொகைத் தொகுப்பு வேலை திட்டமிட்டுத் தொடங்கப்பட வேண்டும். தமிழர்கள், தமிழ்ப்புலவர்கள், தமிழ் கழகங்கள், தமிழ்ப் பத்திரிகையாளர்கள், தமிழ் எழுத்தாளர் சங்கங்கள், தமிழ் எழுத்தாளர்கள், தமிழ் அரசு முதலிய அனைவரும் கூடி முயன்றால் முடியாத தொன்றில்லை. முயல்வோமா ?

இந்நிலையில் 1865ல் முர்டாக் என்பவர் தான் வெளியிட்ட முன்னுரையில் குறிப்பிட்டிருக்கும் சில கருத்துகள் கவனிக்கத் தக்கன.

"The compiler would earnestly direct the attention of Tamilians who have received a good English Education to the great desirableness of publishing a series of works illustrative of their native, language and literature. Let them be assured, that so long as they despise their mother-tongue, they have merely a thin white wash of civilization".

"Books on the above subjects, well got up would meet with a renumerative sale in India, Europe and America, and gain some name for their authors. There are also nobler considerations. Educated Tamilians instead of sinking into sloth, or being absorbed by money making, might well devote their leisure to such cause."

## நூற்றொகை நூற்பட்டி

கீழே கொடுக்கப்படும் நூல்கள் முழுமையாகவோ, பகுதியாகவோ, தேவைக்கேற்ப அவ்வப்போது பல தமிழ் நூல்களின் பட்டியைத் தந்துள்ளன. அவற்றில் சில கீழே தரப்படுகின்றன. மேலும் முயலலாம்.

### தமிழ்

1. அமிர்தசாகரர் : யாப்பருங்கலக் காரிகை, 1944
2. இராகவையங்கார் : தமிழ் வரலாறு பதி. 2, 1952
3. இராசமாணிக்கம் : இலக்கிய அறிமுகம், 1955
4. இராமசாமிப் புலவர் : தமிழ்ப் புலவர் அகர வரிசை, 3 தொகுதிகள், 1959—1960
5. இராமசாமிப் புலவர் : தமிழ்ப் புலவர் வரிசை, 7 தொகுதிகள் 1955—1959.
6. ஐயனாரிதனார்: புறப்பொருள் வெண்பா மாலை, 1955
7. கண்ணப்ப முதலியார் : தமிழ் இலக்கிய அகராதி, 1957
18. கண்ணப்ப முதலியார் : தமிழ் நூல் வரலாறு, 1952
9. கந்தையா பிள்ளை : தமிழ் இலக்கிய அகராதி, 1952
10. கந்தையா பிள்ளை : தமிழ்ப் புலவர் அகராதி, 1952
11. கலியாணசுந்தரனார் நூல்கள்
12. கலைக்களஞ்சியம் : 9 தொகுதிகள், 1954—1963
13. குணவீரபண்டிதர் : வச்சணந்தி மாலை, 1951

14. குழந்தை எழுத்தாளர் : யார், எவர்? 1961
15. கோதைநாயகி (வை. மு.) நூல்கள்
16. கோவிந்தராச முதலியார், பதி : பன்னிருபாட்டியல் 1949
17. சகலகலாவல்லி நூல் நிலையப் புத்தகப் பட்டியல் (காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ் கல்லூரி), 1947.
18. சண்முகம், பதி : தமிழ் நூல் விவர அட்டவணை, 1867—1950 தொகுதி, 3 பகுதிகள் 1961—64.

ஆங்கிலம்

1. **Barnett, comp**: A Supplementary Catalogue of the Tamil Books in the Library of the British museum, 1931.
2. **Barnett and Pope, comp**: A Catalogue of the Tamil books in the Library of British museum, 1909.
3. **Kuppuswami Sastry ,ed**: A Triennial Catalogue of manuscripts collected during the triennium 1913—14 to 1915—16 Vol 2 parts 2, Tamil.
4. **Connemara Public Library, Madras** Author Catalogue, 2 vols., 1931
5. **Connemara Public Library, Madras** Catalogue of the Periodicals, 1935.
6. **Kanagasabapathi Pillai, ed**: Professor Sundaram Pillai Commemoration volume, 1957.
7. **Madras Record Office**: Classified Catalogue of Books registered from 1901—1910 at the Registrar of Books, Madras, 1964.
8. **Madras Registrar of Books**: Classified Catalogue of the Public Reference Library consisting of books registered from 1867 to 1899 at the Office of the Registrar of Books, Madras, 1894.
9. **Madras Registrar of Books**: Classified Catalogue of the Public Reference Library consisting of books registered from 1890—1899 at the Office of the Registrar of Books, Madras, 1962.


## இலக்கண நூல்கள்

இலக்கணத்தை மிக எளிய முறையில், இனிமைச் சுவையோடு படிக்க வகை செய்யும் வண்ணம் அழகாக வெளிவந்துள்ள இலக்கண வரிசை நூல்களைக் கீழே தந்துள்ளோம். பழுத்த தமிழறிஞரும், கலா நிலையம் கண்ட கல்வியாளரும் ஆகிய திரு. கே. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் எழுதிய நூல்கள் இவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | எழுத்தியல் | ... 2 00 | 4. | பொருளியல் | ... 4 50 |
| 2 | சொல்லியல் | ... 2 50 | 5. | யாப்பியல் | ... 6 50 |
| 3. | புணரியல் | ... 3 50 | 6. | அணி இயல் | ... 6 50 |

ஆறு புத்தகங்களையும் ஒரே செட்டாக வாங்கினால் தபால் கூலி இல்லாமல் அனுப்பப்பெறும்.

த. பெ. எண். 423 — போன் : 84989

**ஸ்டார் பிரசுரம்**

66, பெரிய தெரு,

திருவல்லிக்கேணி : : சென்னை—5.

# என் கணவர் புதுமைப்பித்தன்

திருமதி கமலாவிருத்தாசலம்

புதுமைப்பித்தன் அவர்கள் நம்மை விட்டு மறைந்து பதினாறு ஆண்டுகள் ஆகின்றன. அவர் வாழ்ந்து மடிந்த நாட்களை நினைக்கும்போது, இதயத்தில் வேதனை குமுறுகிறது. வாழ்க்கை என்பது என்னவென்பதைத் தான் புரிந்துகொண்டதோடு, தன் அழிவில்லா இலக்கியங்களால் பிறரையும் புரியவைத்த ஓர் மாபெருமேதை அவர் என்பதைக் காலப்போக்கிலேனும் மக்கள் அறிந்து கொண்டதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். "காலத்தால் சாகாது; காலத்தின் ஏலத்தால் மலியாது" என்று தன் படைப்புகளில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார் புதுமைப்பித்தன். தன் வாழ் நாட்களில் தன் இலக்கியங்களுக்குப் போதுமான வரவேற்பு இல்லாமலிருந்ததைப் பார்த்து அதிர்ச்சி யடையவில்லை அவர்; மேலும், மேலும் எழுதிக்கொண்டேயிருந்தார். யாருக்காக? நேரில் அவரைப் புகழ்வதும், மறைவில் அவரைக் கிண்டல் செய்வதுமாக இருந்த முதுகெலும்பற்றவர்களுக்காக அல்ல; "வாழையடி வாழையாகப் பிறக்கும் வாசகர்களில் எவனோ ஒருவனுக்காக எழுதுகிறேன்" என்று "காஞ்சனை" என்ற தனது சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் அவரே சொல்கிறார்.

அவர் எழுத்தைக் கண்டு மிரண்டு ஓடிய பத்திரிகைகள் பிறிதொரு சமயத்தில் 'எது வேண்டுமானாலும் எழுதுங்கள்' என்று இடங் கொடுத்தன. ஒரு சமயம் வீட்டில் பணமுடை. நான்கைந்து கதைகளை எழுதி எடுத்துக்கொண்டு ஒரு பிரபல பத்திரிகை ஆசிரியரிடம் அவைகளைக் கொடுத்தார். ஆசிரியர் கதைகளின் தலைப்பை மட்டும் பார்த்தாரோ, அல்லது கதைகளைப் படித்துப் பார்த்தாரோ என்பது தெரியவில்லை. மறுநாள் புதுமைப்பித்தனைச் சந்தித்தபோது, 'சார், என்பத்திரிகை சாதாரண வாசகர்களுக்காகத்தான். அதிலும் பெரும்பான்மையாகப் பெண்களே விரும்பிப் படிக்கும் ஓர் பத்திரிகை. இதில் உங்களைப் போன்றவர்களுடைய கதைகளை வெளியிட்டால், வாசகர்கள் திணறிப் போவார்கள். அவர்களுக்கு இம்மாதிரிக் கதைகள் புரியவே புரியாது'—என்று மதிப்பாகச் சொல்லிக் கதைகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். இந்த முறையில் வளர்ந்த அவருடைய படைப்புத் தொழிலைக் கண்டு பயந்துபோன எத்தனையோ ஆசிரியர்கள் எல்லாம் கை குலுக்கி, 'எங்கள் ஒவ்வொரு இதழுக்கும் உங்கள் கதைகளை எதிர் பார்க்கிறோம்' என்று கேட்கும் காலமும் விரைந்தபோது, அவர் நம்மைவிட்டு மறைந்துவிட்டார்.

அவர் கதைகளை என்போன்ற சாதாரண வாசகர்களால் புரிந்துகொள்ள முடியாதுதான்; என்றாலும், அவர் எழுதும் ஒவ்வொரு கதைகளையும் நானே முதலில் படிப்பேன். எனக்குப் புரியாத கதைகளை அவரே எனக்குப் படித்துக் காட்டுவார்; அதில் அடங்கிக் கிடக்கும் கருத்துகளை விளக்குவார்; பிறகு 'எப்படி இருக்கிறது' என்பார். நாட்கள் செல்லச் செல்ல, அவர் கதைகளை நானே புரிந்துகொள்ளக்கூடிய திறமை பெற்றேன். நானும் நிறைய எழுத வேண்டும் என்று விரும்புவார். பிறரையும் உற்சாகப்படுத்தி எழுதவைப்பதில் புதுமைப்பித்தன் அவர்கள் பெரிதும் விருப்பங் கொண்டவர்.

அவரோடு பேசிக்கொண்டிருந்தால் பொழுது போவதே தெரியாது. நகைச்சுவை கொப்புளிக்கும்படி பேசுவார். அரசியல்வாதி, இலக்கிய கர்த்தா, ரிக்ஷாக்காரன், வேலைக்காரன் யாரானாலும் சரி, எல்லோருடனும் ஒரே மாதிரியான அன்பாகத்தான் பேசுவார்; பழகுவார். அவர் கள்ளங் கபடமற்ற வெள்ளை உள்ளம்

படைத்தவர். தன்னைப் போலவே பிறரை யும் நினைப்பார். புதுமைப்பித்தனுக்கு ஒரு சிலரை மட்டும் பிடிக்காது. அதாவது, இலக்கியக் களவாளிகள், காக்கை பிடிக்கிற வர்கள், முகஸ்துதி பாடிக்கொண்டு வருகிற வர்கள்—இவர்களைக் கிண்டலாகப் பேசி மூக்கை உடைப்பதில் பரம திருப்திப்படுவார். அதில் பகைமை உணர்ச்சி சற்றும் இராது. எப்போதும் இவரைச் சுற்றி ஒரு நண்பர் குழாமே இருந்து கொண்டிருக்கும்.

யாரையும் சரிசமமாக நினைத்து நடத்தும் அவர், அந்திம காலத்தில் சினிமாத் துறையில், நண்பர்கள் என்று வேஷம் போட்டுக்கொண்டு சதா அவரைச் சுற்றித் திரிந்துகொண்டிருந்த சில 'விடலை' நண்பர் களால் ஏமாற்றப்பட்டார். அவரே ஒரு தடவை, "கமலா நீ மட்டும் என் பக்கத்தில் இல்லாவிட்டால், நான் என்னதான் சம்பா தித்தாலும் பிறரால் ஏமாற்றப்பட்டு கடைசி யில் பிச்சை எடுக்கவேண்டிய நிலைமைக்கு வந்துவிடுவேன்" என்று என்னிடம் சொன் னார். அவர் சொன்னது போலவே அவர் திரைப்படத்துறையிலிருந்து வீடு திரும்பும் போது, பயங்கரக் காச நோயோடு, கையில் காசுயில்லாமல் திருவனந்தபுரம் வந்து சேர்ந்தார். ஓர் ஆரஞ்சுப் பழம் வாங்குவதற் குக் கூட வழியில்லாத நிலை. இந்த சந்தர்ப் பத்தில், சென்னையில் 'மணிக்கொடி'காலந் தொட்டு உயிருக்குயிராகப் பழகிய ஒரு நண்பர்; அதுவும் நல்ல நிலையில் உள்ள ஒருவர்; எங்களால் எவ்வளவோ உதவியும் பெற்ற ஒரு சிநேகிதர். அவருக்குப் புதுமைப்பித்தன் சாவுப் படுக்கையில் படுத்துக்கொண்டு ஒரு கடிதம் எழுதினார், "இங்கு ஆரஞ்சு கிடைப்பது ரொம்பக் கஷ்டம். நீங்கள் இரண்டு டஜன் ஆரஞ்சு அனுப்பினால், இன்னும் சில நாட்கள் நான் மனைவி மக்களோடு இருக்கமுடியும் என்று நினைக்கிறேன். உடனே அனுப்பி வையுங் கள்"—என்று. ஆனால் நண்பரால் அனுப்பப் படாத அப்பழங்களைச் சாப்பிடாமலேயே இரண்டொரு வாரங்கள் எங்களோடு வாழ்ந்துவிட்டு மறைந்தார் அவர்.

இலக்கியப்பணி ஒன்றையே நம்பி வாழ்க்கை நடத்துவது கஷ்டமென்பதை நிருபித்தவர்கள் கு.ப.ராவும், புதுமைப் பித்தனும்தாம். பதினைந்து ஆண்டுகளை எழுத்திலேயே கழித்துத் தீராத நோயை யும், மாருத வறுமையையும்தான் சம்பாதித் தார் புதுமைப்பித்தன். "இலக்கியம் பணக் காரர்களின் பொழுதுபோக்கு, இலக்கியத்தை மட்டும் தொழிலாகக் கொண்டால் அது அவனைக் கொன்றுவிடும்" என்று அவர் சொல்வதுண்டு. சாதாரண ஓர் வசதியுடைய குடும்பத்தில் பிறந்திருந்தும் அவருக்கு இத்தனை சோதனைகள் வரக் காரணமாக இருந்தது அவருடைய பிடி வாதமான இலக்கியப் பணியேதான் என்று சொல்வேன். பையன் உத்தியோகம் பார்க்க வில்லையே என்ற கோபம் தந்தைக்கு. கலியாணமான மறு ஆண்டே வீட்டை விட்டுத் துரத்தப்பட்ட நாங்கள், நான் ஓர் இடம் அவர் ஓர் இடமாகப் பல ஆண்டுகள் பிரிந்தே வாழ்ந்தோம்; பிறகு திரு வா. ரா. அவர்களின் அழைப்பின்பேரில் சென்னைக்கு வந்தார் புதுமைப்பித்தன். காந்தி, மணிக் கொடி, ஊழியன், சுதந்திரசங்கு முதலிய பத்திரிகைகளில் வேலை பார்த்தார். போது மான பணவருவாய் கிடையாது. அநேக நாட்கள் பட்டினி புதுமைப்பித்தனுக்கு வெற்றிலை போடுவதில் ஓர் அலாதிப் பிரியம். "கமலா நீயும் வெற்றிலை போட்டுப் பழகிக் கோ; பசியே தெரியாது" என்பார். ஆனால், எப்பேர்ப்பட்ட வறுமையோ துன்பமோ, எது வந்தாலும் சற்றும் பொருட்படுத்த மாட்டார்.

புதுமைப்பித்தன் ஓர் சிறு குழந்தைக்குச் சமம். வீட்டுப் பொறுப்புகளிலிருந்து அவர் விலகியே நிற்பார். சதா படித்துக் கொண்டேயிருப்பார். எழுத உட்கார்ந் தாலும் ஒரே மூச்சாக உட்கார்ந்து எழுதித் தீர்த்த பிறகே, அந்த இடத்தைவிட்டு எழுந் திருப்பார். எங்கள் குடும்ப வாழ்க்கை பணவசதி என்ற ஒரு குறையைத்தவிர, மற்றபடி மிக சந்தோஷமாகவே இருந்த தென்றே சொல்லவேண்டும். தனக்கொரு நியதி மனைவிக்கொரு நியதி என்ற வித்தி யாசம் அவரிடம் கிடையாது. கணவன், மனைவி என்றால், மிகவும் அந்நியோன்ய மாக மனம் ஒத்து வாழவேண்டும் என்பார். கலியாணத்திற்குமுன் காதல் ஏற்படுவதை விடக் கலியாணத்திற்குப் பின் ஏற்படும் காதல்தான் சாசுவதமானது. மேலும், அதில் ஒரு பொறுப்புணர்ச்சியும், தாம், தம்முடைய என்ற ஓர் மனப்பான்மையும் கலந்துவிடுகிறது. ஆனால், இன்னொன்றின்

மீது காதல் கொள்ளவேண்டுமானல் கலியாணத்தை மறந்தால்தான் முடியும் என்பார்.

கையில் பணமிருந்தால் தாராளமாகச் செலவு செய்வார். என்ன விலையானுலும் புத்தகங்கள் வாங்கச் சளைக்கமாட்டார். இதில்தான் எனக்கும் அவருக்கும் அபிப்பிராய பேதம் ஏற்படும். சில சமயங்கள் சண்டையே வந்துவிடும். சம்பளம் வாங்கி அப்பணம் வீடு வந்து சேருமுன், நான் அம்மாதச் செலவுப் பட்டியலோடு பணத்தை எதிர்பார்த்திருப்பேன். அவர் சம்பளம் கிடைத்ததும், நேராகப் புத்தகக் கடைக்குச் சென்று புத்தகங்கள் வாங்கிக் கொண்டு, நண்பர்களோடு காப்பியும் குடித்துவிட்டுக் குஷியாக இரவு எட்டு மணிக்கு வீடு வந்து சேருவார். கணக்கைக் கேட்கும்போது, எனக்கு என்ன செய்வதென்றே தெரியாது. சில சமயங்களில் பேசாமல் இருந்து விடுவேன். சிலவேளை அப்படிப் பொறுமையாக நடந்துகொள்ள முடியாமலும் போய்விடும். அவரிடம் "நம் குடித்தனத்தின் அர்த்தம் என்ன?" என்பேன். அவ்வளவுதான்; என்ன குடிமுழுகிப் போச்சாம் !" என்று சிரித்துக்கொண்டே கேட்பார். "உங்களுக்கு இந்தப் புத்தகப் பைத்தியம் போனுல்தான் குடித்தனம் உருப்படும்" என்பேன். சில சமயங்களில் 'உண்மைதான்' என்று ஒப்புக் கொள்வார். "இனிமேல் செலவுபோக மிஞ்சியதை வைத்துப் பார்த்துக்கொள்கிறேன்" என்பார். சில சமயம் "அந்த விஷயங்களில் உன் தலையீடு வேண்டாம்" எனறு சடக்கென்று சொல்லிவிடுவார். நான் பிறகு அந்தத் திசையிலேயே நிற்கமாட்டேன். வீட்டு வாடகையிலிருந்து, சகல செலவுகளுக்கும் 'ஐயாவைக் கேள்' என்று விட்டுவிடுவேன். அம்மாத வீட்டுச் செலவுகள் பெரிய குழப்பத்தில் வந்து விடும். பணம் கிடைக்க வேண்டியவர்கள் அவரிடம் கேட்டால், "அந்த 'டிபார்ட்மென்ட்' அம்மாவிடம்" என்று சொல்லிவிடுவார். அதற்குமேல் நான் விலகி நிற்கமுடியுமா? பதில் சொல்லித்தானே ஆகவேண்டும்! மிச்சமுள்ள பணத்தைவைத்து ஒரு விதமாகச் சரிக்கட்டுவேன்; அதோடு தீர்ந்துபோகும் அவர் கோபமும். தனக்கு வந்துள்ள நோயின் தன்மை இன்றே, இன்னும் சிறிது நாட்களிலோ என்ற நிலை தெரிந்திருந்தும், அவர் பூனுவில் இருக்கும்போது 1500 ரூபாய்க்குப் புத்தகங்கள் வாங்கியிருந்தார் என்ருல், அவர் துணிச்சலை என்னவென்று சொல்வது!

வெகு தூரத்திலிருந்து தன்னந்தனியாக நோயின் உச்ச கட்டத்தில் அவர் ரயிலில் பிரயாணம் செய்துவந்த துணிவைப் பாராட்டத்தான் வேண்டும். டாக்சியை விட்டு அவரைக் கைத்தாங்கலாக வீட்டிற்குள் அழைத்து வந்தோம். "என்ன தைரியம் உங்களுக்கு ! இந்த நிலைமையில் இப்படித் தனிமையாக வரலாமா?" என்று கேட்டதற்கு அவர், "எழுத்தாளனே உணர்ச்சிக்கு அடிமைப் பட்டவன்தானே! அதோ என்னைக் கண்டு பயந்து ஒதுங்கி நிற்கிருளே, அந்தக் குழந்தையும், நீயும் தாம் அந்த முரட்டுத் தைரியத்துக்குக் காரணம்" என்று சிரித்துக்கொண்டே கூறினர். இலக்கிய உலகில் அழியா இடம் பெற்றுவிட்ட அந்த இலக்கிய மேதையின் சிரிப்பொலி இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.


**தமிழ் இலக்கியம்**

வளரப் பிரார்த்திக்கின்ருேம்

***

**தமிழ்ப் புத்தகாலயம்**

576, பைக்ராப்ட்ஸ் ரோடு

திருவல்லிக்கேணி : : சென்னை-5.

# அண்ணல் நேரு

'சங்கர்'

ஒன்பது நாட்கள் கொலுவிருந்து — அன்னை
ஒருநாள் திருநாள் தந்ததுபோல்
ஒன்பது ஆண்டுகள் சிறையிருந்து—ஐயன்
உயிரின் ஒளியைத் தந்தானே !

ஆயிரம் கோயில் வலம்வந்தோம்—அவனோ
நம்மை வலம் வந்தான்
தாயினும் சாலப் பரிவோடு—நிதம்
தன்னை மறந்து பணிசெய்தான் !

மக்கள் வாழ்வில் விடிவாக—அவன்
மார்கழி தையில் பனியாவான்
தக்கார் தகவிலர் காணுமல்—அவன்
தருண மழையாய் வந்திடுவான்.

கழனிப் பயிரில் உயிராவான் — வளர்
கரும்பின் கணுவுள் சாராவான்
பழகும் மொழிபதி னெட்டாலும்—அவன்
பாடல் பெற்ற தலமாவான் !

ஏரைப் பிடிக்கும் கைகளிலே — மொழி
ஏட்டைப் பிடிக்கும் மழலையிலே
பாரை உயர்த்தும் செயல்களிலே—எம்
பரமன் நேரு இருப்பானும் !

நேரு என்ருல் உலகறியும் —உளம்
நினைக்கும் போதே பூச்சொரியும்
கோரும் வரங்கள் ஐயமாகும்—அவன்
கொள்கையில் உலகம் வயமாகும் !

தன்னைத் தானே தந்தவனை—இந்தத்
தரணியை அன்பால் வென்றவனை
பின்னை உலகம் பேர்சொல்லும்—பிழையா
அறத்தின் வழிசெல்லும் !

சோற்றுக் கவலைகள் வந்தாலும்—ஜீவ
சுருதியைக் குறைப்ப தழகாமோ ?
ஆற்றைப் போன்ற அருளாளன்—நமக்கு
அருளிய போதம் மறப்போமோ ?

பஞ்சம் என்பது வரும்போதும்—உயிர்ப்
பண்புகள் என்பவை நிலையாகும்
கொஞ்சம் பொறுப்பை உணர்ந்தாலே—அவன்
கூறிய வாக்குகள் மெய்யாகும் !

அரிசி என்ற புழுங்கலினும்—தம்
ஆருயிர்ச் சுதந்திரம் பெரிதென்று
வரிசை கொள்ளும் உள்ளத்தே—அவன்
வருவான் இருப்பான் விருந்துண்பான் !

---


**தமிழ்வாணன்**

**நூல்களை வெளியிடுவோர்**

*

**மணிமேகலைப் பிரசுரம்**

தியாகராய நகர் : சென்னை—17.

BEAUTIFY YOUR HOMES

BY USING

VEMBANAD
WHITE CEMENT

*Manufactured by*

THE TRAVANCORE CEMENTS Ltd.
Kottayam.

*Distributors for Southern Zone* :
M/s. Tube Agencies Private Ltd.,
175/1, Mount Road,
Madras-2.

DO YOU HAVE
A
SAVINGS ACCOUNT
WITH
THE INDIAN OVERSEAS BANK?

* We offer friendly, helpful and efficient service.
** You can start with as little as Rs. 5/-, no account is too small for us.
*** Your money earns interest at 3% per annum.
**** You can withdraw money thrice a week.

Call today for full particulars from your nearest branch.

**M. CT. MUTHIAH**
*Chairman*

**K M. NANJAPPA**
*General Manager*

# இந்தி நாடகக்கலை

டாக்டர் ந. சந்திரகாந்த முதலியார்

[வட்டார அதிகாரி, இந்திபோதனைத் திட்டம், சென்னை-2.]

காவியத்தின் பல பகுதிகளில் நாடகப் பகுதியே சிறப்பானது என முற்காலப் புலவர்களும், தற்கால அறிஞர்களும் கூறுகின்றனர். செவிகளுக்கும், கண்களுக்கும் ஒரே காலத்தில் இன்பத்தை அளிக்க வல்லது நாடகமே. இதை உணர்ந்த ஒரு வடமொழிப் புலவர் 'காவ்யே ஷு நாடகம் ரம்யம்'—காவியங்களுள் நாடகம் மிகமிகக் கவர்ச்சிகரமானது — எனத் திண்மையாகக் கூறுகிறார். எனவே, ஈண்டு இந்தி நாடக வளர்ச்சியையும் சிறப்பையும் பற்றி நாம் சிறிது ஆராய்வோம்.

இந்தி இலக்கியம் சற்று ஏறத்தாழ 1000 ஆண்டுகளாக வளர்ந்து நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகளை வீரகதா காலம், பக்தி காலம், சிருங்கார காலம், நவீன காலம் அல்லது உரைநடைக் காலம் என அறிஞர்கள் கூறுகின்றனர். நவீன காலம் என வழங்கப்படும் உரைநடைக்காலத்தில்தான், நாடகம், நாவல், சிறுகதை, கீதம், கட்டுரை முதலியவைகள் சிறப்பாக வளர்ச்சியுற்றன. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டிலும்தாம் நாடகங்கள் நன்கு வளர்ச்சி பெற்றன. நாடகக்கலை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வடமொழியில் வளர்ச்சிபெற்றிருந்தாலும், இந்தியில் 19ஆம் நூற்றாண்டுக்கு முன், நடிக்கத்தக்க சிறந்த நாடகங்கள் இயற்றப்படவில்லை. இக் காலத்துக்கு முன் இருந்த நாடகங்கள் பெரும்பாலும் இசையும், காவிய குணமும் உள்ளவையாயிருந்தன. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து 15ஆம் நூற்றாண்டு வரை ராசநாடகங்களே நாட்டில் நடமாடிக் கொண்டிருந்தன. மகான்களின் வாழ்க்கை வரலாறுகளைச் சுவை ததும்ப லீலையாக நடிப்பதே ராச நாடகமாகும்.

ராச நாடகங்களைக் கீதி நாட்டியம் (dramatic poetry) எனக் கூறலாம். ஜைனத் துறவிகளைப் பற்றியும், ராம கிருஷ்ணர்களைப் பற்றியும் பிராக்கிருத மொழியிலும், விரஜ மொழியிலும் இயற்றப் பட்ட ராச நாடகங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஜைனராச நாடகங்களில் நாட்டியம் குறைவாக இருந்ததால், மக்கள் மனத்தை அவை கவரவில்லை. ஜைன ராச லீலையைக் காட்டிலும், கிருஷ்ண லீலையும், இராம லீலையுமே மக்கள் மனத்தைக் கவர்ந்தன.

ராச நாடகங்களுக்கு அடுத்தபடியாக வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப் பட்ட நாடகங்கள் தோன்றலாயின. அவைகளில் இராமாயண மகாநாடகம், ஹனுமன் நாடகம், சமயசார நாடகம், சண்டி நாடகம், பிரபோத சந்திரோதய நாடகம் குறிப்பிடத் தக்கவை. அக்காலப் புலவர்கள் இராமனையும், கண்ணனையும், குறித்தே நாடகங்கள் இயற்றி மக்களிடையே அறம் வளர்த்தனர். 17ஆம் நூற்றாண்டில் அறப் பற்றுடன் வீரமும் விளங்க வேண்டும் எனக் குரு கோவிந்த சிங்கு 'சண்டி சரித்திர நாடகம்' இயற்றினார். மொழி பெயர்ப்பு நாடகங்களில் சிறப்பு வாய்ந்தது 'பிரபோத— சந்திரோதயமே'. இது கிருஷ்ண மிஸ்ர என்னும் புலவர் வடமொழியில் இயற்றிய பிரதீக நாடகம். மனத்தில் எழும் எண்ணங்களையே பாத்திரங்களாக்கி எழுதப்பட்ட முதல் நாடகம் இதுவாகும். ஜோத்பூர் மன்னர் ஜசவந்த சிங்கு என்பவர் இதை இந்தியில் மொழி பெயர்த்தார். அந்நாடகத்தின் சாரம் இவ்வாறு:

பற்றற்ற அறிஞர் ஒருவருக்கு மாயை என்னும் மனைவி ஏற்படுகின்றாள். அவளுக்கு மனம் என்ற ஒரு பிள்ளை பிறக்கிறான். அந்த

மனத்திற்குப் பற்றுளது பற்றிலது என இரு மனைவிமார் உண்டு. அந்த மனத்தைக் கருவியாக்கி அரசு புரிய மாயை விரும்புகிருள். பற்றுளது என்பதைப் பிரவிருத்தி எனவும், பற்றற்றது என்பதை நிவிருத்தி எனவும் கூறுவார்கள். பிரவிருத்தியிலிருந்து மோககுலமும், நிவிருத்தியிலிருந்து விவேக குலமும் பிறக்கின்றன. இரண்டு குலத்திற்கும் போராட்டம் ஏற்படுகிறது. ஒரு புறம் காமம், வெகுளி, அவா, வஞ்சனை, இறுமாப்பு, பொய்பித்தலாட்டம், கொலை முதலியவைகள் நிற்கின்றன. மற்ருெரு புறம் அறிவு, சிந்தனை, மகிழ்ச்சி, நம்பிக்கை, அமைதி, இரக்கம், பக்தி, மன்னிக்கும்பண்பு போன்ற நற்குணங்கள் சேருகின்றன. அற எண்ணங்களுக்கும், மற எண்ணங்களுக்கும் இடையே நிகழும் போராட்டங்களை விளக்கி ஆன்மிகவளர்ச்சியால் ஏற்படும் நிரந்தரமான பேரின்பத்தை விளக்கவே இக்குறிப்பு நாடகம் (Symbolic Drama) இயற்றப் பட்டது. இப்படிப்பட்ட பிரதீக நாடகங்களில் 'மோகபாசமும்', 'சைதன்ய சந்திரோதயமும்' குறிப்பிடத்தக்கவை.

19 ஆம் நூற்றுண்டில் ஆங்கில அரசாட்சி நிலைத்தபோது, ஆங்கில நாடகங்களை நடிப்பதற்கு இந்தியாவின்கவர்னர்ஜெனரலாயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸின் முயற்சியால் கல்கத்தாவில் நாடக அரங்கு ஒன்று அமைக்கப் பட்டது. வங்க மக்கள் ஆங்கில நாடகங்களைப்பார்த்து மகிழ்ந்ததுமன்றித் தமது மொழியில் நாடகம் இயற்றவும் முன்வந்தனர். அக்காலத்து வங்க நாடகாசிரியர்களில் இராம நாராயண தர்க்க ரத்தினம், மாயிகல் மதுசூதன தத்தர், தீனபந்து மிஸ்ர ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். வங்க நாடகாசிரியர்களின் முயற்சிகளைக் கண்டு, ரீவா மன்னர் விஸ்வநாதசிங் துளசிதாசரின் இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு 'ஆனந்தர குநந்தனம்' என்னும் நாடகம் இயற்றினர்.

வேதகாலம் முதல் தொடர்ந்து வளர்ந்து வரும் தார்மிகபரம்பரையை இராமபக்தியுடன் அமைத்து எழுதப்பட்ட முதல் நாடகமாக ஆனந்தரகுநந்தனம் கருதப்படுகிறது. காதலை விளக்கிப் பாமர மக்களை மகிழவைக்கும் ஜன நாடகங்களில் 'இந்திர சபா நாடகம்' பிரக்கியாதி பெற்றது. இதை இயற்றிய சையத் ஆகாஹஸன் அமானத், லக்னௌ நவாப்பு வாஜித் அலியின் அவைப்புலவர். 'இந்திர சபா நாடகம்' Opera வகையைச் சேர்ந்த கீதி நாட்டியம். அது உருதும் இந்தியும் கலந்த மொழியில் இயற்றப் பட்டது. 'இந்திர சபா நாடகத்தை' வெற்றிகரமாக நடிப்பதற்கு லக்னௌவில் நாடக அரங்கு ஒன்று அமைக்கப்பட்டதாகவும், நவாப்பு வாஜித் அலி இந்திரனக நடித்ததாகவும் வரலாறு கூறுகிறது. அந்த நாடகத்தில் இந்திரன் தன்னைத் தானே அறிமுகப்படுத்தித் தன் பெருமையை விளக்கும் பாட்டு இவ்வாறு:

"நான் தேசத்தின் மன்னன், என் பெயர் இந்திரன். தேவலோக நங்கையருடன் நடனமாடுவது எனக்குமிகவும் இன்பமானது. சிங்களத்தீவிலெல்லாம் என் அரசு தழைத்திருப்பது என் பெருமையாகும். இசை நாடக விழாவில் கேளிக்கை புரிய இன்று என் மனம் நாடுகிறது. எனவே, தேவலோக மங்கையரைக் கொண்டு வந்து என்முன் நிறுத்துங்கள். அவர்கள் ஆடிப்பாடக் கண்டு, நான் இன்பரசத்தில் மூழ்க வேண்டும்."

இவ்வாறு மன்னர் மன்னன் இந்திரன் கூறவும், வானுலக நங்கை நாடக அரங்கில் தோன்றுகிருள். அவள் வருகையை அரங்கின் இயக்குநர் அறிமுகப் படுத்தும் பாட்டு இவ்வாறு:

"புஷ்பராகம் என்னும் விண்ணுலகப் பெண்மணி, அரசவையில் வருகை தருகிருள். காதலர்களின் சிரோமணியான புஷ்பராகம் உங்கள்முன் வருகிருள். அவளுடைய நிழலைக்கூட நீங்கள் கனவிலும் இதுவரை கண்டிருக்கமாட்டீர்கள். மாட்சிமை தங்கிய வானுலக மங்கை மனிதர்முன் இன்று வருகிருள்."

அவையில் தோன்றியுள்ள புஷ்பராகம் தன்னை அறிமுகப்படுத்தும் பாட்டு இவ்வாறு:

"ஆடுவதும் பாடுவதும், அன்புவலை வீசுவதும், இன்பமொழி பேசுவதும், எப்பொழுதும் என் விருப்பம். இவ்வுலக மக்கள் என்னைப் புஷ்பத்தின் ராகம் என இதயங் கனிந்து மிக அன்புடன் அழைக்கிருர்கள்."

'இந்திர சபா' போன்ற நாடகங்களை இடைவிடாது பார்த்து மக்கள் இன்பம் அடைந்தார்கள். அக்காலத்தில் 'ஸ்வாங்'

என்கிற கோமாளிக் கூத்தும் பரவியிருந்தது. இவ்வித மக்கள்-நாடகங்களில் குணச் சித்திரமும், நாடகப் பண்பும் இல்லாததால், அவைகள் இந்தி இலக்கியத்தில் நிரந்தரமான இடம் பெறவில்லை. இந்தியில் கலை நிறைந்த நாடகங்கள் இல்லை என்ற அவல நிலையை நீக்கியவர் 19 ஆம் நூற்றுண்டில் வாரணசியில் வாழ்ந்த பாரதேந்து ஹரிச்சந்திரரே ஆவர். இவர் இந்தி நாடக இலக்கியத்தின் தந்தை எனக் கருதப்படுகிறர்.

இவர் வாரணசியில் மாணவராக இருந்த போது, ஆங்கில மொழி இலக்கியமும், பண்பாடும் வேகமாகப் பரவ ஆரம்பித்தன. ஆங்கிலம் படித்த சிலர் ஆங்கிலமேசரணகதி என நினைத்து ஆங்கில மோகத்தில்மனத்தை இழந்திருந்தனர். இந்நிலையில் தேசிய மனப் பான்மையை வளர்க்க இவர் இந்தியில் பல நாடகங்களை இயற்றினர். இவருடைய முயற்சிகளும், கருத்துகளும் தமிழ்க்கவி சுப்பிரமணிய பாரதியாருக்குச் சமமானவை.

ஹரிச்சந்திரர் இயற்றிய நாடகங்களை மொழிபெயர்ப்பு, மாற்றியமைப்பு, இயற்றப் பட்டவை என முப்பிரிவாகப் பிரிக்கலாம். அவர் மொழிபெயர்த்த முதல் நாடகம் ஸ்ரீ ஹர்ஷரின் 'ரத்னவளி' நாடகம் ஆகும். வங்க தேசத்தில் சிறப்புற்றிருந்த 'வித்யா சுந்தரி' நாடகத்தையும் இவர் இந்தியில் மொழிபெயர்த்தார். இவ்விரு நாடகங்களை மொழிபெயர்த்ததால், இந்தியில் நாடகக் கலையை வளர்க்க மற்றவர்களுக்கும் தூண்டுதல் ஏற்பட்டது. 'பிரபோத-சந்திரோதயத்தின்' மூன்றும் அங்கத்தை மொழிபெயர்த்து 'பாகண்ட விடம்பனம்' என்று அதற்குப் பெயர் அமைத்தார். தீய ஒழுக்கம் உடையவர்கள் துறவிவேடம் பூண்டு செய்யும் அட்டூழியங்களைக் கண்டிக்க 'பாகண்டவிடம்பனம்' இயற்றப்பட்டது. இந்த நாடகத்தைப் பின்பற்றிப் பிறகு தோன்றிய ஜெயசங்கர் பிரசாத்'காமன நாடகமும்'சுமித்ரானந்தபந்த் 'ஜ்யோத்சன நாடகமும்' எழுதியுள்ளார்கள். ஹரிச்சந்திரர் ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் எழுதிய 'மெர்ச்செண்ட் ஆப் வெனிஸை'யும் மொழிபெயர்த்துள்ளார். நாடக பாத்திரங்களின் ஆங்கிலப் பெயரை இந்திய முறையில் — அதாவது ஷைலாக்கை சைலாக்ஷன் எனவும், பஸானியோவை வசந்தன் எனவும், அண்டோனியோவை அனந்தன் எனவும், போர்ஷியாவை புரஸ்ரீ எனவும், ஜெஸிகாவை யசோதை எனவும் அவர் மாற்றியுள்ளார். விசாக தத்தர் வடமொழியில் இயற்றிய 'முத்ரா ராக்ஷஸ' நாடகம் அரசியல் கருத்து நிறைந்த வரலாற்று நாடகம் அந்நாடகத்தின் திறனை ஆராய்ந்து, அதனையும் இவர் இந்தியில் மொழி பெயர்த்துள்ளார். இவர் மாற்றியமைத்த நாடகங்களில்'சத்தியஹரிச்சந்திரன் மிகவும் சிறந்த நாடகம். கருணைச் சுவை நிறைந்த இந்நாடகம் எங்கும் நடிக்கப் படுகிறது. காட்டுத்தீபோல் விரைவாய்ப் பரவும் பொய்யைக் கண்டித்து வாய்மைக்கும் நேர்மைக்கும் ஆக்கமளிக்க பாரதேந்து இந்த நாடகத்தை இயற்றினர்.

'ஹரிச்சந்திர நாடகத்தில்' கருணை கரை — புரண்டோடுகிறது. பாம்பு கடிக்கப் பட்டு மகன் இறந்தபோது, மகனைப் பெற்ற தாய் (சந்திரமதி) புலம்புவது கல்லையும் கரைப்பதாகும்:

"ஐயோ மகனே! நீ எங்கு சென்றயோ? என் பேசும்கிளி எங்கு பறந்ததோ? இனி நான் யார் முகத்தைப் பார்த்து உயிருடன் இருப்பேன்! என் அழகுப் மொம்மையை உடைத்தது யாரோ? என் அழகு ராஜா நீ எப்படித்தான் என்னை மறந்தாயோ? நீ ஏன் பேசாமல் இருக்கிறயோ! என் கண்ணே பேசு! ஒரு முறை வாய்திறந்து என்னேடு பேசடா. என் கண்ணே உன் அன்னையின் முகத்தைக் கண்திறந்து நீ பாராயோ? என் பெற்ற மனம் கதறுகிறதே!"

இந்த ஆசிரியர் 'சந்திராவளி', 'பாரத ஜனனி' 'பாரத துர்தசா,' 'நீலாதேவி' போன்ற நாடகங்களையும் இயற்றியுள்ளார். தருமத்தின் பெயராலும், குலம்கோத்திரத்தின் பெயராலும் நடக்கும் மறச்செயல்களைப் பரிகசிக்க வைதிக இம்சா இம்சா ந பவதி,' 'விஷஸ்ய விஷம் ஔஷதம்,' 'அந்தேர்நகரி' போன்ற நாடகங்களையும் அவர் இயற்றியுள்ளார். இவ்வாறு நாடகக் கலையை வளர்த்த பாரதேந்து வடமொழிச் சாயலில் வளர்ந்த நாடக பரம்பரையை ஓரளவு மாற்றியும் காலத்துக்கேற்றவாறு அமைத்தார். காதல், சமூக சீர்திருத்தம், தேசிய மனப்பான்மை, மாதர் வாழ்க்கையின்

சிக்கல்கள், பெண்களுக்குத் தேவையான சாகசம், வீரம், நல்லொழுக்கம்போன்றவைகளை அவர் தம் நாடகங்கள் மூலம் விளக்கினார். அவருடைய நாடகங்களில் அரசன்—ஆண்டி, பண்டிதன்—பாமரன், பணக்காரன் — பாட்டாளி, நற்குணன்—தீக்குணன், இந்து—முகம்மதியன் யாவரும் தக்க இடம் பெறுகிறார்கள். காவியத்தின் உயிர்நாடி ரசம் என நீண்ட நாட்களாக நாடக இலக்கண ஆசிரியர்கள் அங்கீகரித்து வருகிறார்கள். இவருடைய நாடகத்தில் சிருங்காரம், வீரம், கருணை, நகைச்சுவை, வியப்புபோன்ற முக்கியச் சுவைகள் எங்கும் ததும்புகின்றன. பாத்திரங்களின் உரை நடைக்கிடையே இசையும் கருத்தும் நிறைந்த பாக்கள் அமைந்திருப்பது பாராட்டு தற்குரியது. இதனால் நாடகம் பார்ப்பவர்கள் மனத்தில் ஏற்படும் நீரசத்தன்மை நீங்கி இன்பநிலை ஏற்படுகிறது.

நாடகத் தந்தை எனப் போற்றப்பட்ட பாரதேந்து 1885 இல் விண்ணுலகம் சென்றார். அவர் இறந்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வாரணசியில் ஜயசங்கர பிரசாத் தோன்றினார். இவர் காலத்தில் இந்தி நாடகக்கலை உச்ச நிலையை அடைந்தது. பிரசாத் இந்தி இலக்கியத்தின் பல துறைகளிலும் சிறந்த நூல்களை இயற்றியவர். இவரது 'காமாயனி மகா காவியம்' இன்று உலக இலக்கிய அரங்கில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது. இவர் மிகச் சிறந்த 13 நாடகங்களை இயற்றினார். இவர் வரலாற்று நாடகங்கள் எழுதுவதில் கைதேர்ந்தவர். 'விசாகன்,' 'அஜாதசத்ரு,' 'சந்திரகுப்தன்,' 'ஸ்கந்தகுப்த ராஜ்ய ஸ்ரீ,' 'துருவ ஸ்வாமினி' போன்ற நாடகங்கள் மறைந்து கிடந்த பௌத்தகால வரலாற்று உண்மையையும், பாரதத்தின் புராதானப் பெருமையையும் விளக்குகின்றன. இவருடைய நாடகங்கள் உயர்ந்த மொழியில் இயற்றப்பட்டிருப்பதால், அவைகள் படிப்பதற்குமட்டுமே உரியன; மிகச் சிலவே நடிக்கத் தகுந்தவை.

சந்திரகுப்த நாடகத்தில் கதாநாயகன் பேசும் மொழி இவ்வாறு:—

"வருக, வருக! கிரேக்க சேனாபதி செலூக்கஸ் அவர்களே வருக. விருந்தினரைப்போல் தங்களை வரவேற்பதில் நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம். எனினும், என்போன்ற க்ஷத்திரியனின் கடமை தெறிதவறாதது. இந்தியர்களான நாங்கள் நன்றியற்றவர்கள் அல்ல. இதற்கு என்பணிவன்பான நடத்தையே நல்லதோர் சான்றாகும். எனவே, யவனப்படை யுத்தமின்றித் திரும்பட்டும்."

பிரசாதின் 'சந்திரகுப்த நாடகம்' ஓர் இன்பியல் நாடகம் ஆகும். கிரேக்க சேனாபதி செலூக்கஸ் தனது அருமை மகள் கார்னீலியாவைப் பாரத மன்னன் சந்திரகுப்தனுக்குத் திருமணம் செய்து வைக்கிறான்.

முதல் மகாயுத்தத்திற்குப்பின் இந்தியாவில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. ஆங்கில மொழிச்சாயலில் புதினம், சிறுகதை நாடகம் முதலியவைகள் இயற்றப்பட்டன. ஷேக்ஸ்பியரை நன்கு அறிந்த இந்தியர் இப்ஸன், பெர்னாட்ஷா போன்ற நாடக அறிஞர்களையும் நன்கு அறிய ஆரம்பித்தனர். மேனாட்டு நாடகக்கலை இந்தியாவில் பரவிற்று. இந்த நிலையில் லக்ஷ்மிநாராயண மிஸ்ர வாழ்க்கைச் சிக்கல்களைச் சித்திரிக்கும் சிறந்த நாடகங்களை இந்தியில் இயற்றினார். 'சந்நியாசி,' ராக்ஷஸ்—கா—மந்திர்,' 'முக்திகா ரகசியம்,' 'ராஜயோகம்,' 'ஆதிராத்,' 'சமாஜ்கே ஸ்தமப,' 'சிந்தூர்—கி—ஹோலி' என்ற நாடகங்கள் அவர் இயற்றியவை ஆகும். 'சிந்தூர்—கி—ஹோலி' மிகக் கீர்த்தி பெற்ற நாடகமாகும். நியாயாதிபதியாக நியமிக்கப்பட்ட முராரிலால் அநேக அநியாயங்களைப் புரிகிறான். பணத்துக்காக நண்பனைக் கொலைசெய்கிறான். தன் மகள் சந்திரகலாவைக் கொலையுண்ட நண்பனின் மகன் மனோஜ் சங்கரனுக்குத் திருமணம் செய்து கொடுக்க விரும்புகிறான். சந்திரகலாவுக்குத் தையற்கலை கற்பிக்கும் இள விதவை மனோரமாவைக் காம வலையில் சிக்கவைக்கப் பார்க்கிறான். இலஞ்சத்தில் பெருந்தொகை அடையத் தனது மகள் காதலித்துவரும் ரஜனிகாந்தனின் கொலைக்கு உடந்தையாகவும் இருக்கிறான். பல சிக்கல்கள் அமைந்த இந்த நாடகம், சமூகச்சிக்கல்களையும், தனி நபரின்

வாழ்க்கைச் சிக்கல்களையும் மிகமிக அழகாக உணர்த்துகிறது.

குடும்பத் தலைவனான மாஜிஸ்ட்ரேட்டு முராரிலாலைப் பார்த்து இளவிதவை மனோரமா கூறும் வசனம் இவ்வாறு:

"ஆண்கள் கண்வலை வீசுபவர்கள்—குறிப்பாகப் பெண்கள் மீது உயிர் ஊசலாடும் நிலையிலும், கட்டழகி கிட்டுவாளா என்று நினைப்பவர்கள் ஆண்கள்."

இந்தக் காலத்தில் பல நாடகாசிரியர்கள் தோன்றி நாடகங்கள் எழுதி வருகிறார்கள். அவர்களில் சுதர்சன், மாகன்லால் சதுர்வேதி, சுமித்ரா நந்தன் பந்த, சேட் கோவிந்ததாஸ், உதய சங்கர்பட், ஹரிகிருஷ்ண பிரேமி, இராமகுமார் வர்மா போன்றவர்கள் மிக முக்கியமானவர்கள். இராஜஸ்தானத்தின் வரலாற்றுண்மையை அறிந்து, இந்து முகம்மதியர்களுக்குள் ஒற்றுமை எண்ணத்தை வளர்க்க ஹரிகிருஷ்ண பிரேமி 'ரக்ஷாபந்தனம்' என்ற நாடகத்தை இயற்றியுள்ளார்.

ஓரங்க நாடகங்களும், வானொலி நாடகங்களும் எழுதுவதில் டாக்டர் இராம் குமார் வர்மா மிகச் சிறந்தவர். அவர் இயற்றிய 'தீபதானம்', 'ஆட்ரகாங்கி', 'ரேசமிடை' போன்ற நாடகங்கள் கியாதி பெற்றவை.

இந்தி மொழி விந்திய மலையைத் தாண்டிக் குமரிமுனையை அடைந்துள்ளது. தென்னிந்தியாவிலும் இந்தி நாடகங்கள் எழுதப்படுகின்றன. அண்மையில் இராம் சேஷையாவால் எழுதப்பட்ட 'கிருகிணி' நாடகம் சென்னையில் நடிக்கப்பட்டது. 'கட்டபொம்மன்,' 'மந்திரி ராமையா' போன்ற நாடகங்களும் வெளிவந்துள்ளன. நாடகக்கலை அரசர்களால் வளர்க்கப்பட வேண்டியது. சுதந்திர இந்தியா பல கலைகளையும் ஆர்வத்துடன் வளர்க்க முன் வந்துள்ளது. சாகித்திய அக்காடமியின் தூண்டுதலாலும், சங்கீத-நாடக அக்காடமியின் முயற்சியாலும் இந்தியில் மட்டுமன்றி இந்தியாவின் எல்லா மொழிகளிலுமே நாடகக்கலை வளரும் என்பதில் இனி ஐயமில்லை.


**FOR ALL KINDS OF BUILDING IRON MATERIALS**

*PLEASE CONTACT :*



GLAZED WINDOW

**SRI. DHANALAKSHMI IRON WORKS**

*Sole Proprietor :*

RM. D. DHEVARAYAN CHETTIAR

**97/C South Avani Moola Street**

MADURAI-1.

*EXTENSION FACTORY :*

PONNAMMAL ROAD, MAHALIPATTY,
MADURAI

**Specialists in :** Collapsible Gates, Steel Trusses, Glazed Doors and Windows and Light Posts Etc. Etc. Etc.

**Estd : 1933** **Grams : IRONWORKS** **Phone : 2410 PBX.**

ILLUSTRATED PAMPHLET ON REQUEST

# பெண்களும் இலக்கியமும்

**திருமதி. சிவகாமி சாமி. சிதம்பரனுர்**

"கற்க கசடு அறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று இலக்கியம் இயற்றினுர் நம் பெருநாவலர் தம் பொதுமறை நூலில். மேலும்,

"எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு"
"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்க அனைத்து ஊறும் அறிவு"

என்று இவ்வாறு கூறப்படும் குறள்களால் கல்வி ஆண், பெண் இருபாலார்க்கும் அவசியம் என்பது விளங்குகிறதன்ருே?

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு."

என்னும் நாலடியார் பாட்டு பெண்களுக்குக் கல்வியே அழகைத் தருவதாகும்என்று கூறியிருப்பதும் பெண்கல்வியை வலியுறுத்துகின்றதன்ருே?

"பெருந் தடங்கண் பிறை நுதலார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே"

என்ற கம்பர் செய்யுளும் பெண் கல்வியின் பெருமையை விளக்கிக் கல்வி கற்ற பெண்களின் நல்ல பண்பையும், நல்ல குணத்தையும் இப்படிக் கூறுகின்றது.

"யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர்? என வினவுதிராயின்
மாண்டஎன் மனையொடு மக்களும் நிரம்பினர்"

என்று பண்டைக் காலத்துப் புலவர் ஒருவர் தான் நீண்ட காலம் தலை நரைக்காமல் (கவலையற்று) வாழ்ந்ததற்குக் காரணம் தம் மனைவி மக்கள் கல்வி கற்ற நல்லறிவு உடையவர்களாகவும், கல்வி கற்ற பயனுல் சிறந்த குணமுடையவராகவும் இருந்தமைதான் என்று கூறியிருக்கிருர். இப்பாட்டைப் புறநானூற்றில் காண்கிருேம்.

இப்படி எல்லாம் உவமானங்கள் எடுத்துக்காட்டிச் சுமார் 35—40 ஆண்டுகளுக்கு முன் பெண்கள் விடுதலை அடைய வேண்டும், பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும், பெண்கள் கல்வி கற்க வேண்டும், ஆண்களோடு பெண்களுக்குச் சரிநிகர் சமத்துவம் வேண்டும். பெண் அடிமை அகற்றப்பட வேண்டும் முகமுடும் முறை ஒழிக்கப்பட வேண்டும், பெண்கள் கல்வி கற்று எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்தால்தான் நாடு முன்னேற்றம் அடைய முடியும், நாடு சுதந்திரம் அடைய முடியும் என்று எழுத்தாளர்கள் எழுதியும், சொற்பொழிவுகள் செய்தும், பொது மேடைகளில் பேசியும், மாநாடு கூட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றியும், அரசாங்கச் சலுகை கேட்டும் வந்தார்கள். அன்று பத்திரிகைகளில் எல்லாம் பெண் கல்வி, பெண் கல்வி என்ற செய்தி அறிஞர்களால் எழுதப்பட்டு வெளி வந்து கொண்டிருக்கும்.

இக்காலத்தில் அப்படி இல்லை. பெண்கள் கல்வி கற்று முன்னேற்றம் அடைந்து எல்லாப் பொது நிலையங்களிலும் பங்குகொண்டு, கல்வி நிலையங்கள், அரசாங்க உயர்ந்த பதவியிலிருந்து அன்றுடம் கூலிவாங்கும் பட்டாள, தொழிலாளர் துறை வரையிலும் பங்குகொண்டு ஒத்துழைக்கும் வகையில் முன்னேற்றம் அடைந்திருக்கிருர்கள் என்பதை நாம் பார்க்கும்போது

எவ்வளவோ பெருமையுடன் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

ஆனால், தற்காலம் நம் சகோதரிகளில் செந்தமிழ் இலக்கியத் துறைகளில் ஈடு பாடு உடையவர்கள் விரல்விட்டு எண்ணி விடக்கூடிய நிலைமையில்தான் இருக்கி றார்கள். பண்டைக்காலப்பெண் புலவர்களின் இலக்கிய சிறப்பைப் பற்றிச் சிறிது கவனிப் போம்.

**ஔவையார் :** பண்டைக்கால இலக்கிய மேதையாக விளங்கிய பெண் புலவர் ஔவையாரைத் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள். படித்தவர்கள் முதல் பாமரர்கள்வரை ஔவையாரைப் பற்றி அறியாத தமிழர்கள் இல்லை. அவர் நாட்டின் நலனுக்காக உழைத்த பெருமாட்டி. பெண் புலவர் திலகம் ஔவையார் அவர்கள் அதிகமான் நெடுமான் அஞ்சிக்கு ஆசிரிய ராகவும், முதல் அமைச்சராகவும் இருந் திருக்கிறார். ஔவையார் ஓர் சிறந்த அரசியல் தூதுவர். அவர் காலத்தில் தொண்டை நாட்டு அரசன் தொண்டைமான் நெடுமான் அஞ்சியோடு போர் தொடுக்க எண்ணி ஆயுதங்கள் செய்து சேகரித்து கொண்டிருந்த செய்தி தெரிந்து அவ்வர சனிடம் தூதராகச் சென்றார்; ஆயுதசாலையில் புத்தம் புதிய ஆயுதங்களைத் தொண்டை மான் பெருமையுடன் காட்டிய போது, தூது பேச வந்த புலவர் திலகம் உடனே அவனுடைய கருவத்தை அடக்க நினைத் துக் கீழ்வருமாறு பாடிய செய்யுளைப் பார்ப்போம்:

“ இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்
அணிந்து
கடியுடைவியன் நகர் அவ்வே, அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக்கு உற்று இலம்மாதோ !
என்றும்
உண்டாயின் பதங் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எம் கோமான் வைந்நுதி
வேலே”

இவ்வாறு, ஔவையார் கூறியதைக் கேட்ட தொண்டைமான் போர் தொடுக்கும் கருத்தைக் கைவிட்டான்; சண்டை நடை பெறாமல் நின்றது. இதனால், இருநாட்டுக் குடி மக்களும் காப்பாற்றப்பட்டார்கள். துன்பம் நேராமல் மக்களைக் காப்பாற்றியது ஔவை பிராட்டியாரின் கல்வியும், கலை அறிவுப் பலமும், அஞ்சாத் தன்மையும் அல்லவோ.

அடுத்து பொன்முடியார் என்ற பெண் புலவர் நாட்டின் நலத்திற்கு—நாட்டின் முன்னேற்றத்திற்கு மக்கள் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றி ஒரு பாடலில் விளக்கி யிருக்கிறார். இதனை,

“ ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே ;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக்
கடனே ;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே ;
நளிருவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக்
கடனே”

என்ற பாடலால் அறியலாம். கருத்து நிறைந்த இலக்கிய அமைப்பை இப் பாடலில் காண்கிறோம்.

காக்கைபாடினியார் நச்செள்ளையார்

இவ்வம்மையாரும் பண்டைக்காலத்து பெண் புலவர். இவர்காலத்துப் வீரப் பெண் களின் செயலை, நாட்டின் நலத்தில் அவ் வீரப் பெண்கள் காட்டிய ஆர்வத்தை இச் செய்யுள் நமக்குக் காட்டுகிறது.

“ நரம்பெழுந்து உலறிய நிரம்பா மென்
தோல்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
‘ படை அழிந்து மாறினன் ’ என்று
பலர் கூற
‘ மண்டுஅமர்க்கு உடைந்தனனாயின்
உண்ட என்
முலை அறுத்திடுவேன் யான் ’ எனச்சினை
இக்
கொண்டவாளொடு படுபிணம்
பெயராச்
செங்களம் துழவுவோள் சிதைந்து
வேறாகிய
படுமகன் கிடைக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே”

போர்களத்தில் முதுகுகாட்டி ஓடாது போர் புரிந்து வீரமரணம் அடைந்தான் என்பதைக் கண்டு மகிழும் ஒரு தாயின் வீரச் செயலை

நாம் இன்றும் படித்து உணர முடிவது அழியா இலக்கியத்தின் சிறப்பு அல்லவா? ஒக்கூர் மாசாத்தியார்.

மற்ருெரு வீரப் பெண்மணியின் வீர வரலாற்றை ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண் புலவர் பாடியிருக்கிருர். இதனை

"செருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து, வெளிது விரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய்நீவி,
ஒருமகன் அல்லது இல்லோள்
'செருமுகம் நோக்கிச் செல்க' என விடுமே"

என்னும் செய்யுளில் காண்க.

முதல் நாளும், மறுநாளும் தன் தந்தையும், தன் கணவரும் போர்க்களம் சென்று போர்புரிந்து மடிந்தபிறகும் போர் முரசம் கேட்டுத் தன் ஒரே மகனையும் தலைசீவி, தூய ஆடை உடுத்தி வேற் படையைக் கையில் கொடுத்து போர்க்களம் அனுப்பிய வீரத்தாயின் வரலாற்றைப் பாடல் இவ்வாறு சித்திரித்து காட்டுகிறது.

இன்னும் காரைக்கால் அம்மையார், ஆண்டாள் போன்ற பெண் கவிஞர்கள் இயற்றிய பாடல்களின் சிறப்புகள் செழித்து நிற்கும் இலக்கிய இனிமைகளைக் காணும்போது, இவ்வரிய பொக்கிஷங்களை இயற்றிவைத்த தமிழ் மூதாட்டிகளை நாம் போற்றிப் புகழ்ந்து மகிழ வேண்டும். அவர்கள் வழியை நம் சகோதரிகள் பின் பற்ற வேண்டும். கவிக்குயில் என்ற பட்டத்தைப் பெற்ற நம் காலக் கவி சரோஜினி தேவி அவர்களின் கவிதைச் சிறப்பை நாம் கேட்டு மகிழ்கிறோம் அல்லவா?

நம் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் பெண் எழுத்தாளர்கள் அதிகமாகச் சேர்ந்து பணியாற்ற வேண்டும். சங்கம் இன்னும் பெருவாரியான அங்கத்தினர்களைக் கொண்ட பெரிய ஸ்தாபனமாக வளர வேண்டும். இப்போது நம் தமிழ் எழுத்தாள சகோதரர்கள் பெரு முயற்சியுடன் வளர்த்து வரும் சங்கத்திற்கு அரசாங்கத்தின் உதவியும், சலுகையும் கிடைக்கவேண்டும் என்பதே என் அவா.


# ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

## பரிசுப் பார்சல்கள்!

**777** திடீர் இட்லி, தோசை, சாம்பார், ரசம் (எல்லாம் தனித் தனி பவுடர்கள்) மற்றும் ஊறுகாய்கள்.

### இலவசமாக

தென்னிந்திய உணவுப் பொருள்களை அயல்நாடுகளில் உள்ள உங்கள் நண்பர்களுக்குப் பரிசுப் பார்சல்களாக இந்தியாவிலிருந்து ரூ. 50/– வரை (பாக்கிங் செலவு உள்பட) தபால் பார்சலில் கப்பலில் அனுப்பி வைக்கலாம்.

குறிப்பு: தங்கள் ஆர்டர் கிடைத்தவுடன் நாங்களே மேற்படி பார்சல்களை குறிப்பிட்ட விலாசதாரருக்கு உலகத்தின் எந்தப் பாகத்துக்கும் அனுப்பிவைக்கிறோம்.

கப்பல் மூலம் தபால் பார்சலாக அனுப்ப, கட்டண விபரமடங்கிய இலவச பிரசுரத்திற்கு எழுதவும்.

**ஸ்ரீ கணேஷ்ராம் & கோ**
46, தம்பு செட்டி தெரு, சென்னை—1
(போன்: 23665)

# THE WRITER AND COPYRIGHT

T. S. KRISHNAMURTI

*[Dy. Secretary, Ministry of Education, Government of India]*

In the introduction to one of his novels, Scott said, ' a successful author is a productive labourer and his works constitute as effectual a part of the public wealth as that created by any other manufacturer. If a new commodity, having an intrinsic and commercial value, be the result of the operation, why are the author's bales of books to be esteemed a less profitable part of the public stock than the goods of any other manufacturer?" Without the author, the work could not have come into existence, and to this extent the author is a benefactor to the country It is only fair then that he should have a reasonable share of the capital which owes its existence to his exertions.

If we accept and extend Scott's view to cover not only authors of literary works but also of musical and artistic works, films, broadcasts, sermons, speeches, etc., in fact the whole field of creative work, and extend protection to all such authors to enjoy the results of their exertion, we shall have an idea of copyright. Briefly, copyright regulates the right of an author over his creation and affords him protection against his works being exploited by others to his financial or moral detriment

Copyright is now a statutory right and legislation on copyright has been, in India as in other countries, a compromise between the rights of authors, who are the creators of works, and members of the public, who are consumers of works.

Except for slight variations, copyright legislation in most countries is uniform.

Copyright in India is regulated by the Copyright Act, 1957 (14 of 1957). For the purposes of this Act, works in which copyright can subsist, have been divided into the following broad classes :—

(1) Literary, dramatic, musical and artistic works.
(2) Cinematograph films
(3) Records.

In a literary, dramatic or musical work, 'copyright' means the exclusive right to do or to authorise any of the following acts:

i. to reproduce the work in any material form;
ii. to publish the work;
iii. to perform the work in public;
iv. to produce, reproduce, perform or publish any translation of the work;
v. to make any cinematograph film or a record in respect of the work;
vi. to communicate the work by radio-diffusion or to communicate to the public by a loudspeaker or any other similar instrument the radio-diffusion of the work;
vii. to make any adaptation of the work;
viii. to do in relation to a translation or an adaptation of the work any of the acts specified in clauses (i) to (vi) above.

The term 'adaptation' has a wide definition and covers;

(i) in relation to a dramatic work, the conversion of the work into a non-dramatic work;
(ii) in relation to a literary or an artistic work, the conversion of the work into a dramatic work by way of performance in public or otherwise;
(iii) in relation to a literary or dramatic work, any abridgement of the work or any version of the work in which the story or action is conveyed wholly or mainly by means of pictures in a form suitable for reproduction in a book, or in a newspaper, magazine or similar periodical; and
(iv) in relation to a musical work, any arrangement or transcription of the work.

All original works are capable of enjoying copyright. Copyright is not dependent on literary or artistic merit, a factor well nigh impossible to establish in a court of law. A mediocre poem, a poor painting or a nondescript sculpture has as much copyright as the best work in its class, provided it be original. What is protected is, the mode of expression, the particular sequence of works, the grouping of figures or the delineation and

not the idea. A writer who derives an idea from another person and develops it into a story or a drama or a painting or a cartoon gets copyright in his work and is not considered to have infringed the rights of the person from whom the idea emanated.

Similarly, copyright has no relation to the effort put into the creation of the work It is quite certain that the discovery of a copy of an old and out-of-print book now forgotten, and fallen in the public domain. may involve much time, labour and expenditure. But a new edition of the work will have no copyright and any publisher can bring out another edition without infringing the rights of the earlier publisher, provided he does not misappropriate the labours of his predecessor.

In musical works, Copyright vests not only in the lyric but also in the music. It may be observed from the rights comprising copyright in musical works that the owner has the exclusive right to authorize the performance of the work in public. Lyric writers and composers have, therefore, the right to charge a fee whenever their recorded works are performed in public or broadcast. In Western countries, associations of music composers and lyric writers, generally known as performing rights societies, exist and collect fees for their members. No such society as yet exists to act on behalf of Indian music and the lyric writers do not generally exercise their rights in this respect.

The copyright in a film does not affect the separate copyright in any work in respect of which the film is made. The author of the story or the composer of music in the film continues to enjoy the copyright in the story or the music as the case may be, independently of the film, unless the contract provides otherwise. It would be prudent for authors not to sell or assign the copyright in the story to the owner of the film. Copyright will not subsist in a film if a substantial part of the film is an infringement of the copyright in any other work.

For the purpose of copyright, the 'author' has been defined as:

(i) in relation to a literary or dramatic work, the author of the work.

The author is the first owner of copyright except in the cases mentioned below:—

i. Where a literary, dramatic or artistic work is made by an author in the course of his employment by a proprietor of a newspaper or magazine under a contract of service for the publication in the newspaper or magazine, the said proprietor will, in the absence of any agreement to the contrary, be the first owner of copyright in so far as it concerns the publication of the work in any newspaper or magazine; but in all other respects, the author will be the first owner of copyright;

ii. In a work made in the course of the author's employment under a contract of service, not covered by (i) above, the employer will in the absence of any contract to the contrary, be the first owner of copyright.

The owner of the copyright may license or assign, singly or severally, each of the rights comprising copyright, either generally or subject to limitations and either for the whole term of copyright or a portion thereof. No assignment of copyright can, however, be valid unless it is in writing. Assignment can be made of copyright in any future work; but such assignment will take effect only when the work comes into existence. Where an unpublished work of an author passes to his heir under a bequest, the bequest will unless it be specifically stated otherwise, cover copyright too.

Unpublished works are also entitled to copyright. While the Act restricts the term of copyright in regard to published works, it appears that no such restriction applies to unpublished works. Copyright in unpublished works except in certain cases would seem to be perpetual.

Independently of the author's copyright and even after the assignment of the copyright, the author of a work has the right to claim authorship of the work and to restrain or claim damages in respect of any distortion or other modification of his work or any other action in relation to the work which would be prejudicial to his honour or reputation. This is a new right conferred by the 1957 Act.

When a work is broadcast by radio-diffusion, a special right known as "broadcast reproduction right" has been created in favour of the broadcaster; but this refers only to a re-broadcast or recording the broadcast or causing it to be heard in public. The special right does not, however, affect the copyright in any literary or Dramatic work and a licence to utilise a broadcast for making a record will not take effect unless the person to whom such licence is granted has also obtained the permission of the owner of the copyright in the work broadcast. This would mean that a writer who broadcasts his work could continue to retain his rights, independently of the "broadcast reproduction right" vesting in the broadcaster, unless,

of course, there be any agreement to the contrary.

A Government work has been defined as a work which is made or published by or under the direction or control of the Government or any Department of Government or any legislature in India or any Court or Tribunal or other Judicial authority in India. In the case of a Government work, Government will, in the absence of any agreement to the contrary, be the first owner of copyright.

In the case of a Literary or a Dramatic work, publication means the issue of copies of the work to the public in sufficient quantities but does not, except in spicial cases, include the issue of any records, recording such work. Also, except in relation to infringement, a work will not be deemed to be published or performed in public, if published or performed in public, without the licence of the owner of the copyright.

The term of copyright in a Literary or a Dramatic work published within the life time of the author, subsists until fifty years from the beginning of the calendar year next following the year in which the author dies. In the case of joint authorship the refeience to the author is to be construed as a reference to the author who dies last.

In the case of a work published anonymously or pseudonymously, copyright subsists until fifty years from the beginning of the calendar year following the year in which the work is published; but if the identity of the author is disclosed before the expiry of the said period, the copyright will subsist for the post-mortem period of fifty years. The identity of an author shall be deemed to have been disclosed if either the identity of the author is disclosed publicly by both the author and the publisher or is otherwise established to the satisfaction of the Copyright Board set up by Government under the Act. Authors who write under pseudonym might find it worthwhile to disclose their identities to the Copyright Office. A joint public declaration by author and publisher will safeguard the full term of copyright.

In the case of a work in which copyright subsisted on the date of death of an author but which or an adaptation of which was not published before that date, copyright will subsist until fifty years from the beginning of the year next following the year in which the work or an adaptation of it is published. In this connection a work shall be deemed to have been published if it has been performed in public.

If at any time during the term of copyright in any Indian work—that is, a work by a citizen of India—which has been published or performed in public, a complaint is made that the owner of copyright has refused republication of the work or public performance or radio-diffusion, the Copyright Board may after giving due hearing to the owner of the copyright grant a licence for the republication or public performance or radio-diffusion of the work, subject to due compensation.

I referred a little while ago to the Copyright Office and Copyright Board. These were brought into existence by the 1957 Act. The Copyright Office, which is under the Registrar of Copyrights, functions as a part of the Ministry of Education, and has its headquarters at New Delhi.

The Copyright Board which is presided over by a retired judge of the High Court is an independent body empowered to go into certain kinds of disputes, relating to copyright. For lack of space, I shall refer those interested to the Act for information about its functions.

Provision for the voluntary registration of copyright is one of the important features of the Copyright Act, which was enacted in 1957.

